Free Website :
for Matrialmonial Website

micheaijulian@facebook.com
www.indianadarmurasu.com


செப்டம்பர்- 2023
நாடார் :13
முரசு :9



# இந்தியன் நாடார் முரசு

INDIAN NADAR MURASU

விலை ரூ.15/-



# இந்திய நாடார்கள் பேரமைப்பு முப்பெரும் விழா







சென்னை கலைவாணர் அரங்கத்தில்,
இந்திய நாடார்சள் பேரமைப்பு தலைவர் ராகம் சௌந்திரபாண்டியன் அவர்களின் தலைமையில்
நடத்திய முப்பெரும் விழாவில்,
திரு போரூர் ஆனந்தராஜ் அண்ணாச்சி
நெல்லை தூத்துக்குடி நாடார் மகமை பரிபாலன சங்கம், தலைவர் அவர்களுக்கு,
பெருந்தலைவர்.கு.காமராசர் விருது
தமிழ்நாடு பால்வளத்துறை அமைச்சர்
மாண்புமிகு திரு.T.மனோதங்கராஜ் அவர்களால் வழங்கப்பட்டது.

அகில உலக நாடார்களின் செய்திக்களஞ்சியம்

R.Dis.NO.1434/09

இந்திய நாடார் முரசு

சமுதாய பல்சுவை மாத இதழ்

*கௌரவ ஆசிரியர்:* **விஜய்வசந்தகுமார்.**

*பேராசிரியர்:* **திரு.ஜூலியன் நாடார்**

ஆசிரியர்: டாக்டர்.J.*அர்னால்ட் அரசு ஜூலியன்*

துணை ஆசிரியர்:திருமதி.எல்மாமதி.,எம்.ஏ.பி.எட்

இணை ஆசிரியர்:ரேஷ்மாமதி M.Sc.,(U.S.A)

இலக்கிய ஆலோசகர்: கலைமாமணி திரு.தாமரை செந்தூர்பாண்டியன்

சட்ட ஆலோசகர்:

Dr.தே.தேவ் ஆனந்த். MBA.,M.Com.,MHRM.,MSW., ML., Ph.D.,

செயலாளர்,அன்னைவேளாங்கண்ணி கல்வி நிறுவனங்கள், சென்னை-15.

ஆலோசனைக் குழு:

திருமதி.ராணிவெங்கடேசன் முன்னாள் MLA.,

டாக்டர்.S.தேவராஜ் Chairman

Annai Veilankanni's Group of Educational Institutions

R.K.காளிதாஸ் தலைவர்.தெக்ஷணமாற நாடார் சங்கம், மாவட்டதலைவர்: தென்காசி, திருநெல்வேலி மாவட்ட வர்த்தக கழகம், தலைவர், பெருந்தலைவர் காமராஜர் தினசரி மார்கெட் பாவூர்சத்திரம்., அமைப்பாளர்: தென்காசி மாவட்ட அனைத்து சமுதாய ஆலோசனை கமிட்டி.

திரு.பி.சின்னமணி நாடார்

தலைவர், சென்னைவாழ் நாடார் சங்கம்

டாக்டர் வி.ஜி.சந்தோஷம்

டாக்டர்.குமரேசன்

போரூர் ஆனந்தராஜ்

தலைவர் நெ.தூ.நா.மகமை பரிபாலன சங்கம்.

தலைமை அலுவலகம்:

**புதிய எண்:1, ப.எண்:21, கிருஷ்ணப்ப நாயக்கன் தெரு, மேட்டுப்பாளையம்,மேற்கு மாம்பலம், சென்னை-600 033.**

**போன்:044-23810610 (வீடு)**

**E-mail:nadar10_2000@yahoo.com, indianadarmurasu@yahoo.com**

தலைமை வியாபார அலுவலகம்:

**30, தேரடி தெரு, சைதாப்பேட்டை, சென்னை-600 015.**

**போன்: 044-23811087,**

**அலுவலக நேரம்:10.00am to 9.00pm**

இந்திய நாடார் முரசுக்காக அச்சிட்டு வெளியிடுபவர்

டாக்டர்.திரு.K.M.J.A.அரசு, ஜூலியன்.

அலுவலக நிர்வாகம், கம்ப்யூட்டர்: திருமதி.G.சத்தியாபுருஷோத்தமன்,M.A.,B.Ed

ALL RIGHTS RESERVED LEGAL JURISDICTION CHENNAI CITY COURTS ONLY. NOTHING INDIANADAR MURASU IS INTENED TO DEFAME ANY PERSON. BUT EXPRESSED IN GOOD FATH, PURSUIT OF TRUTH AND PUBLIC GOOD.

எந்த வகையிலும் மறுபதிப்பு செய்தல் தடை செய்யப்படுகிறது. கதைகளில் வரும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே. கதை, கட்டுரை முதலியன எதையும் தபால் அல்லது மின் அஞ்சல் மூலமாக அனுப்பவும். அவற்றை திருத்தி அமைக்கவும், சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு. வெளியூர் சந்தாதாரர்கள் தபால் மூலமாகவோ, காசோலையாகவோ அனுப்பி வைக்கவும். அறிமுகம் இல்லாதவர்களிடம் சந்தா மற்றும் விளம்பரத் தொகையை கொடுத்து ஏமாற வேண்டாம்.

விளம்பர கட்டண விபரம்

| | | |
|---|---|---|
| வெளி முன் அட்டை | (17X24 CMS) | ரூ. 25,000 |
| வெளி பின் அட்டை | (17X24 CMS) | ரூ. 15,000 |
| உள் அட்டை | (17X24 CMS) | ரூ. 10,000 |
| முழுப்பக்கம் | (17X24 CMS) | ரூ. 5,000 |
| அரைப்பக்கம் | (17X12 CMS) | ரூ. 2,500 |
| கால்பக்கம் | ($8^{1/2}$X12 CMS) | ரூ. 1,500 |
| அரைக்கால்பக்கம் | ($8^{1/2}$X6 CMS) | ரூ. 900 |

ஆண்டு சந்தா- ரூ.550, 2ஆண்டு சந்தா-ரூ.1100

ஆயுள் சந்தா ரூ.15,000, 5 ஆண்டு சந்தா- ரூ.5000.

மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, கனடா,

தென் ஆப்பிரிக்கா மற்றும் அயல் நாடுகளுக்கு

ஆண்டு சந்தா/ ரூ.3000 அல்லது அமெரிக்கா டாலர்,$100

ஆயுள் சந்தா/ரூ.20,000 அல்லது அமெரிக்கா டாலர் $600

சந்தா அனுப்ப வேண்டிய வங்கி கணக்கு எண்:

The Karur Vysys Bank Saidapet Branch: MR.K.M.Julian

IFSC Code: KVBL0001651.

A/c **No: 1651173000000900**

**Google Pay : 9382172884 paytm 9382172884**

# ஆசிரியர் உரை

## சேர, சோழ, பாண்டியர் மற்றும் காமராஜர் வழி வந்த நாடார்களே!!!



அனைவருக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். நாடார் முரசு நாடார்களின் பத்திரிகை. அதன் பிரதிபலிப்பாக, பல மாதங்களாக நாடார் சமுதாய உயர் தலைவர்கள் ஆசிரியர் உரை எழுதி தனது மேலான கருத்துக்களை தெரிவித்திருந்தனர். அவர்களுக்கு நன்றி, இன்னும் எழுதுவார்கள். அன்பான நாடார்களே! விரைவில் தேர்தல் வரவிருக்கிறது. அரசியல்வாதிகள் இப்போதே தயாராகிக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு அரசியல் கட்சிகளும் தான் எப்படியாவது வெற்றி பெற்றுவிட வேண்டும் என்றுதான் பாடுபடுவார்கள். அதில் தவறு இல்லை ஆனால் ஒவ்வொரு சமுதாயமும் அரசியல்வாதிகள் விரிக்கும் மாய வலையில் வீழ்ந்து விடகூடாது முக்கியமாக நாடார் சமுதாயம் மிகவும் விழிப்புடன் இருந்து செயல்பட வேண்டும். தற்காலங்களில் பல சிறு சிறு தலைவர்கள் உதயமாகிக் கொண்டே இருக்கிறார்கள். ஒருவருக்கொருவர் அவரைவிட தான் தான் முன்னிலையில் வரவேண்டும் என்று பல வகையான செயல்களை செய்து வருகிறார்கள். அவர்கள் செய்வதை என்னவென்று தெரியாமல் செய்கிறார்கள். தனது செயலில் தியாகமும், தன்னலமும் அற்றவராகவும், சேவை மனப்பான்மையுடையவராகவும் உள்ள தகுதி இருந்தால் மட்டுமே மக்கள் மனதை தன்பால் திருப்ப முடியும். தகுதிக்கு மேல் ஆசை விபரீதத்தில் தான் முடியும் நடிகர் ரஜினிகாந்த் அவர்கள் கூறியது போல் அதாவது ஆகாயத்தில் கழுகு உயர உயர பறந்து சென்றிருக்கிறது. அந்த பருந்தை கண்ட ஒரு காக்கை தானும் அந்த பருந்தை போல் பறந்து மேகத்தை தொட்டுவிட பருந்தை விட பறந்து வேகமாக முந்திவிடவேண்டும் ஆகாயத்தை தொட்டுவிடவேண்டும் என்று தன் தகுதியும், திறமையும், நிலைமையும் புரியாமால் பறந்தது தன்னோடு சேர்ந்த சில காக்கை கூட்டத்தையும் கூட்டி, கா...கா... என்று கத்தி கொண்டே பறந்தது. ஆனால் அந்த கழுகை காக்கையால் வெல்ல முடியுமா? அதற்கு ஒரு தகுதி வேண்டாமா? கடைசியில் பருந்து தன்னை பின்தொடரும் எதை பற்றியும் கவலையில்லாமல் தான் பாட்டுக்கு அதிக உயரம் பறந்தது. அது போல தான் நம் சமுதாயத்தில் பல இளைஞர்கள் தற்கால தொலைதொடர்பு சாதனங்களை பயன்படுத்தி, வாட்ஸஆப் மற்றும் முகநூலை பயன்படுத்தி ஒரு சிலரை கா.... கா... என்று கத்தி தன்னோடு சேர்த்து கொள்கிறார்கள். தான் தான் முதன்மை பெற வேண்டும் என்று ஊருக்கொரு பதவியை விநியோகம் செய்து விவரம் தெரியாத இளைஞர்களை தன்னோடு சேர்த்து கொண்டு தான் என்ன செய்கிறோம் என்று தெரியாமலேயே ஏதேதோ செய்கிறார்கள். இப்படி சேர்ந்த பல இளைஞர்கள் தன்படிப்பு, தொழில் வளர்ச்சி அத்தனையும் மறந்துவிட்டு அய்யோ பாவமாக அலைகிறார்கள். நமது முன்னோர்கள் சேர்த்து வைத்த அத்தனை நற்பெயர்களும் சீரழிந்துவிடுகிறது. ஆகவே நாடார் சமுதாயமே விழிப்புடன் செயல்பட ஆரம்பியுங்கள் நாம் மாற்றம் காணலாம்.

# என் தந்தையின் அறிவுச் சிந்தனைகள்!

## 1.தந்தையின் வாழ்த்து (1987)

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக, என்னுடைய படிப்பறையில் பழைய புத்தகங்களையெல்லாம் புரட்டிப் பார்த்துக் கொண்டிருக்கும் போது, என்னுடைய 1987 ஆம் ஆண்டுக்குரிய டைரியைக் கண்ணுற்றேன். அந்த டைரியின் முதல் பக்கத்தில் உள்ள கருத்துக்களை மேலோட்டமாகப் பார்த்த நான், மற்றப் பக்கங்களைப் படிக்கச் சென்று விட்டேன். ஆனாலும் திடீரென்று எனக்குள் ஓர் உணர்வு ஏற்பட்டது. அந்த டைரியின் முதல் பக்கத்தில் உள்ளதை ஆழ்ந்து படிக்க, மீண்டும் ஒருமுறை அந்தப் பக்கத்தைப் புரட்டிப் பார்த்தேன். அந்தப் பக்கத்தில் உள்ளது எனக்கு வாழ்த்துச் செய்தியாக என் அருமைத் தந்தையவர்களும் என் தெய்வத்தாய் பாரிஜாதம் அவர்களும் எழுதியிருப்பதை நான் மிகவும் சிரமப்பட்டும் படித்துப் பார்த்தேன். ஏறத்தாழ 35 ஆண்டுகளுக்கு முன்பாக எழுதப்பட்ட அந்த டைரியை, அன்றைக்குத்தான் பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது. என் தந்தையார் மற்றும் தாயாரின் சிந்தனையில் உதித்த மிக அற்புதமான கருத்தாழம் மிக்க வாழ்த்துக்களை, உன்னதமான வாழ்க்கைக்கு வழிகாட்டும் வாசகங்களைத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதை எண்ணி வியந்து போனேன்.

துவக்கப் பள்ளியில் சேர்ந்து படித்துக் கொண்டிருந்த என் தந்தையார் குடும்பச் சூழ்நிலையின் காரணமாக, நான்காம் வகுப்போடு படிப்பு நின்றுவிட்டது. நான்கு வகுப்புவரை மட்டுமே படித்தவர், மிகச் சிறந்த ஞானியைப்போல், ஒரு மேதையைப் போல, ஒவ்வொரு வார்த்தையையும் புரிந்துகொண்டு நடந்தால், ஒருவர் சிறந்த மனிதராக வாழ முடியும் என்பதை மிக அழகாக தெரிவித்துள்ளார்கள்.

ஒவ்வொரு ஆண்டும், புத்தாண்டு தினத்தன்று எங்கள் விஜிபி இல்லத்தில் அருமை அப்பாவும், சித்தப்பாவும் புத்தாண்டு "கேக்" வெட்டி, கொண்டாடுவது வழக்கம். கூடியுள்ள உறவினர்கள், நண்பர்கள், தொழிலாளர்கள் யாவருக்கும் புத்தாண்டு டைரி மற்றும் காலெண்டர்களை வழங்குவது வழக்கம். தொழிலாளர்கள் எல்லோரும் வரிசையாக நின்று அவரிடம் ஆசி பெற்று, டைரி மற்றும் காலெண்டர்களை வாங்கிச் செல்வது வழக்கம். அப்படி அவர் வழங்கும் அந்த குறுகிய நேரத்தில், எனக்கு அந்த டைரியைக் கொடுக்கும்போது, என் தந்தையார் அவர்கள் மிகச் சுருக்கமாக, அதே நேரத்தில் மிக வேகமாக அனைத்துக் கருத்துகளையும் அதில் எழுதியிருப்பது மிக ஆச்சரியமாக இருக்கிறது. அந்த இரண்டு நிமிடத்தி, இந்த வாசகங்களை எழுதிய அவருடைய அறிவாற்றல், ஆளுமைத்திறன், அறிவுக் கூர்மை எல்லாவற்றையும் எண்ணிப் பார்க்கும் போது அவர் ஒரு மேதை என்பது நன்றாகத் தெரிகிறது.

அவர் எங்களுடன் வாழ்ந்த காலத்தில் இருந்த அவருடைய தெளிவான பார்வையும், தொலை நோக்குச் சிந்தனையும், அவருடைய ஒப்பற்ற குணநலன்கள் யாவும் அவருடைய மறைவுக்கு பிறகு இன்னும் அதிகமாக எங்களால் உணர முடிகிறது.

இதைப் படித்துக் கொண்டிருக்கும் நீங்களும் அவருடைய சிந்தனைகளைச் சிந்தித்துப் பார்ப்பீர்களானால் உங்களுக்கும் உற்சாகம், ஊக்கம், எழுச்சி ஏற்படும் என்பது நிச்சயம்.

பனை தேசியத் திருவிழா ஆகஸ்ட் 12 13 தேதிகளில் தருவை பனங்காடு திருநெல்வேலியில் சிறப்பாக கொண்டாடப்பட்டது.



இவ்விழாவை துவங்கி வைக்க மேதகு.ஆளுநர் தெலுங்கானா மற்றும் புதுச்சேரி திருமதி.தமிழிசை சௌந்தர்ராஜன் அவர்களும் நாங்குநேரி சட்டமன்ற உறுப்பினர் திரு.ரூபி.மனோகரன் அவர்களும் வருகை புரிந்திருந்தனர்.

விழா ஒருங்கிணைப்பாளர் திரு.செல்வராமலிங்கம் நிகழ்வை சிறப்பாக ஒருங்கிணைத்தார்.

இரண்டாம் நாள் நிகழ்வில் முன்னாள் வனத்துறை அமைச்சர் திரு.கேடி பச்சையம்மாள் மற்றும் முன்னாள் நாங்குநேரி சட்டமன்ற உறுப்பினர் ரெட்டியார்பட்டி நாராயணன் அவர்கள் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர்..

இவ்விழாவில் பல்வேறு பணி பொருட்கள் காட்சி மற்றும் சந்தை படுத்தப்பட்டன.

அதைப்போலவே பனை பற்றிய சொற்பொழிவு மற்றும் கருத்தரங்கு நடைபெற்றது.

திருநெல்வேலி மாவட்டம் முழுவதும் இல் இருந்து பெருந்திரளலான மக்கள் கலந்து கொண்டு பனையின் பயன் பற்றி அறிந்து கொண்டனர்.

நாட்டுப்புற கலைகளான மானாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம், கரகாட்டம், சிலம்பாட்டம் போன்றவைகள் பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தது.

குறிப்பாக கொங்கு மண்டலத்தில் இருந்து வந்திருந்த பெருஞ்சலங்கையாட்டம் மிகவும் சிறப்பாக இருந்தது என அனைவரும் கூறிச் சென்றனர்.

செல்வி மாதவியின் பனை பற்றி பாடிய வில்லுப்பாட்டு அனைவரையும் கவர்ந்த ஒன்றாகும்.

இவ்வாறு இரண்டு நாட்கள் நடைபெற்ற பனை தேசி திருவிழா ஆகஸ்டு 13ந் தேதி இனிதே நிறைவுற்றது. செல்வராமலிங்கம் முன்னாள் விமானப்படை கார்கில் வீரர்.




உவரி ஸ்ரீ சுயம்புலிங்க சுவாமி துணை

**ஸ்ரீ மகாலட்சுமி ஜோதிட நிலையம்**


**நாடார் திருமண தகவல் மையம்.**

எண்:17, டாக்டர் அம்பேத்கர் சாலை, பெரியார் நகர் விரிவு, மடிப்பாக்கம், சென்னை-91.

நெல்லை எம்.ஆர்.இராமச்சந்திரன்நாடார்.,M.Sc., Astrology.

E-mail:yogamaster.chandran@gmail.com Ph:9786722267. 9444062989.

வாட்சஆப்பில் தொடர்பு கொள்ளவும்.




Prop.S.Balakrishnan

**(FOR HIRE CENTRING SHEET, COLUMN BOX, SPAN, PROPS ETC.,)**

SELVAM TRADERS

**New No : 7, Old No : 6, Medavakkam Main Road, Madippakkam, Chennai- 600 091**

**Ph: 9841193884, 044-22242096**



# 7 லட்சம் திருமணங்களை இனிதே நிறைவேற்றிய

★ வெற்றி ★

# வெற்றி திருமண மையம்

## பதிவு கட்டணம் இலவசம்

காலை 10 to இரவு 8 மணிவரை
எல்லா நாட்களும்

அனைத்து இனத்தவருக்கும்
லட்சகணக்கான வரன்கள் உள்ளன

**புரோக்கர் கமிஷன் கிடையாது**

இலவச ONLINE பதிவிற்கு
www.vetrimatrimony.com

பிளாட் நம்பர் 5, லேக் ஏரியா,
மாட்டுத்தாவணி பஸ் நிலையம் அருகில்,
மதுரை - 625 107.

**73971 13833, 73970 43396**
**73970 94709, 73971 52597**



எப்போதும் வென்றான் ஸ்ரீ சோலையப்ப சுவாமி துணை

# அடையார் ஆனந்த விநாயகர் காய்கனி & பழங்கள் அங்காடி

(எங்களிடம் தரமான காய்கனி அனைத்தும் கிடைக்கும்)

## அடையார் முருகன் டிராவல்ஸ்

நெ. 69/14, 2வது குறுக்கு தெரு, கஸ்தூரிபாய் நகர், அடையார், சென்னை-20 செல்: 9840038140, போன்: 24416633, 42116663,



உரிமையாளர்: த.பரமசிவன்

24 மணி நேர சேவை



P.R. Dinakaran ஸ்ரீவனங்காத்த பார்வதி அம்மன் துணை Ph: 044-2440 1255 Mobile: 9884447771



# THIYAGARAJAN Bros

Waste Paper & LED, LCD T.V, Lap Top, All Computer Items, Mobile Phones, A/C.Refrigrator, Washing Machine, All Metals & All kinds of Scrap Dealers

New No:20, 2nd Cross Street, Kasthuribai Nagar, Adyar, Chennai-20.





உரிமை:T.DURAI, T.KUMAR. Cell:9444316813

# பேபி. புரோட்டீன்ஸ்

**WHOLESALE & RETAIL**

**2/37, 4th Lane, 1st Street Main Road, Shasthri Nagar, Adyar, Chennai-20. Ph:24465921. FREE HOME DELIVERY.**



ஸ்ரீ அருஞ்சுனை காத்த அய்யனார் துணை.

G.முத்துகனி நாடார், முத்துகனி பிரதர்ஸ் G.பால்ராஜ் நாடார் G.தங்கராஜ் நாடார்

# ஜோதி ஸ்வீட்ஸ் பேக்கரி

9789427171
7397152711

# வளர்மதி பேன்சிஸ் ஸ்டோர்ஸ்

கோல்டு கவரிங், பொம்மை, குழந்தைகள் விளையாட்டுப் பொருட்கள் இங்கு கிடைக்கும்.

# ஸ்ரீ பவானி அம்மன் பாத்திரக்கடை

எங்களிடம்: பித்தளை, அலுமினியம் பாத்திரங்கள் கிடைக்கும்.

நெ.132, பஜார் வீதி, பெரியபாளையம், ஊத்துக்கோட்டை வட்டம், திருவள்ளூர்மாவட்டம்-601102.





# REVATHI LABEL PRINTERS

**R.DHEVI 98414 41111, 99415 51111**

**Barcode Sticker, Multi Colour Sticker, Trolley Tags, Thermal Ribbons, Barcode Printers, Consumables, & Software Support.**

2/645, Habeeba Street, Chinna Neelangarai, Chennai-115.
Emaill: dhevi_rlp@yahoo.co.in




# ஆர்.சித்தர்ராஜ் நாடார்

## குட்வில் ரியல் எஸ்டேட்

136, ஆநீகாடு ரோடு, வளசரவாக்கம்,
சென்னை-87. செல்:9444083769



T.Bernet Johnson M.E.,MBA., Managing Director. 72009 06699 / 90032 86677
7200506699.



# JEHOVAH

GROUP OF COMPANIES



•Lab Ezuipments Manufacturing •Industrial Lunricant Distributor
•Automotive Lubricant Distributor •Industrial Equipments & Spares


E-jehovahjirehengineering@gmail.com / W: www.jehovahengg.com
No:60. 4th Main Road, L&T Colony, CRR Puram, Manapakkam, Chennai-125

வாழ்க வளமுடன்

C.மதியழகன்
செல்:9789095625.

# ஸ்ரீ கணேஷ் பவன்

SGB



எண்:6, முத்துலிங்க ரெட்டி தெரு, (எம்.ஆர்.தியேட்டர் பில்டிங்) மேற்கு தாம்பரம், சென்னை-45. போன்:M.சுரேஷ். செல்:9840945243.

எண்:1, வள்ளலார். தெரு, சேலையூர், கேம்ப்ரோடு, சென்னை-73.







**SUGAM HOSPITALS**
*Symbol of Health*
THIRUVOTTIYUR & CHROMPET

**MULTI SPECIALITY HOSPITAL**

- WORLD CLASS INTENSIVE CARE UNIT
- 24 HOURS TRAUMA AND EMERGENCY CARE
- HITECH OPERATION THEATRES

THIRUVOTTIYUR
40 50 60 70
#349, T.H.Road, Thiruvottiyur, Chennai - 19.

CHROMPET
85 85 85 85 50
#107A, G.S.T. Road, Chrompet, Chennai - 44

Dr.D.B.D.Sathiakumar M.D., Dr.Sheila Sathiakumar M.B.B.S., D.H.M

OUR GROUP DIAGNOSTIC CENTERS

**HIBEAM SCANS** TOTAL IMAGING

ROYAPURAM 25 95 17 57 PONNERI 27 97 34 44



# ஸ்ரீ கெஸ்ட் ஹவுஸ்
# SHREE GUEST HOUSE

A/c & Non A/c Rooms Available. 9444683121. 9444180067.
57, East Raja Street, Mamallapuram, - 603104, Kanchipuram District.
New Happy Rewinty, 37, ஒத்தவாடை, நியர் பீச் ரோடு, 9443778291, 7338898291.



S.K.இராகவன் **இராஜா ஏஜென்சி**

Dealers in: Hardwares, Paints, Cements, Steel, Sanitarywares & All Building Materials

பிளாட் எண்:1, ஆண்டவர்நகர், பாரதிசாலை மெயின் ரோடு, இராமாபுரம், சென்னை-89

**Ph:044-22491790, 22492340 ,Cell: 9841169098, 70100 00824**





**V.முருகானந்தம்** – உரிமையாளர்

**தலைவர்-138வது வட்டம்**

**காங்கிரஸ் கமிட்டி**

**வீடு, மனை, வாங்க விற்க அணுகவும்,**
**வீடு, ஆபிஸ், கடை, குடோன், கம்பெனி**
**வாடகைக்கு அணுகவும். 9840583539.**



எண்:42, அண்ணா மெயின் ரோடு, எம்.ஜி.ஆர்.நகர், சென்னை-78,9840583539.

# Dr.அமல்ராஜ் IPS

அவர்களை

# மனமுவந்து வாழ்த்துகிறேன்



நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்கள் பேறுபெற்றோர்,
அவர்கள் திருப்தியடைவார்கள்

ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய் - தாய்க்கு

தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல் - தந்தைக்கு

மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை
என்நோற்றான் கொல்எனும் சொல் - மகனுக்கு

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல். - அரசுக்கு

புகழ்மிகும் ஒருகல்லூரி பேராசியரின் புதல்வனாய்ப் பிறந்து IPS அதிகாரியாகி நீதிநேர்மை, மனசாட்சிக்கு இலக்கணமாய் திகழ்ந்து சிறப்பான காவல் பணி புரிந்தமைக்கு **ஜனாதிபதி பதக்கம்** மற்றும் சிறந்த பொதுச்சேவை மற்றும் சிறந்த காவல் பணியாற்றியதற்காக **முதலமைச்சரின் பதக்கங்களை** பெற்று தேசிய மற்றும் மாநில அளவில் நடந்த காவல்துறையினருக்கான துப்பாக்கி சுடும் போட்டியில் பங்கு பெற்று மாபெரும் சாதனை புரிந்ததுடன்

77வது இந்திய சுதந்திரதின விழாவில் தகைசால் பணிக்காக ஜனாதிபதி விருதைப் பெற்று தமிழகத்துக்கும் குமரிக்கும் மென்மேலும் பெருமை சேர்த்த நம் மண்ணின் மைந்தர், குமரியின் கோமேதகம் எனதருமை பால்யநண்பர் நிலக்கிழார் திரு.தங்கராஜ் - திருமதி கிளாரன் கிரேசி தம்பதியரின் மருமகன் தாம்பரம் காவல் ஆணையர் Dr.Shri.A.Amal Raj IPS மென்மேலும் பல விருதுகன் பெற்று நல்ல உடல் உள்ள நலனுடன் பணியாற்றிட இறைவேண்டி வாழ்த்துகிறேன்.



பாச உணர்வுடன்

*A. Thampi Raj, M.A.,*
*Retired Superintendent* TNSTC LTD
*Ranithottam, Nagercoil - 629001*
Cell: 9994780225



# நாடார் ஒற்றுமை கனவா? கனவு மெய்பட வேண்டும்!

விவசாயி ஒருவர் தனது மகன்கள் ஒற்றுமை இல்லாமல் இருப்பதை கண்டு அவர்களுக்கு புத்திமதி சொல்வதற்காக முதலில் ஒரு கட்டு மரக்குச்சிகளை கொடுப்பார் அவர்களால் உடைக்க முடியாது. பிறகு தனித்தனியாக உடைக்க சொல்வார் மிக எளிதாக உடைத்துவிடுவர்.

பிறகு மகன்களை பார்த்து மகன்களே முதலில் இருந்த 25 குச்சிகளும் ஒற்றுமையாக ஒரே கட்டில் இருந்தது உங்களால் எவ்வளவு முயன்றும் உடைக்க முடியவில்லை ஆனால் தனித்தனியாக இருந்த உடன் மிக எளிதாக உடைத்து விட்டீர்கள் இதுபோல் தான் நீங்கள் தனித்தனியாக இருந்தால் உங்கள் வாழ்க்கையில் முன்னேற முடியாது மிக எளிதாக உங்கள் எதிரிகள் உங்களை வீழ்த்திவிடுவார்கள் எனவே எப்போதும் நீங்கள் மூவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் ஒன்றுபட்டால் தான் உண்டு வாழ்வு ஒற்றுமையே உங்கள் உயர்வுக்கு வழி என்று எடுத்து கூறினார்.

அந்த விவசாயின் அறிவுரை தற்போது நமது நாடார் சமுதாயத்திற்கு தேவைப்படுகிறது திமுகவுக்கு ஆதரவாக ஒரு குழுவும் அதிமுகவுக்கு ஆதரவாக ஒரு குழுவும் மற்றும் பல்வேறு அரசியல் கட்சிகளுக்கு ஆதரவாக சில குழுக்களும் செயல்பட்டு வருகின்றன.

நாடார் சமுதாயம் சார்ந்த நல்ல நல்ல செயல்களை எந்த அரசியல்கட்சிகள் செய்தாலும் அதை வரவேற்று வாழ்த்தி பாராட்டுவது என ஒவ்வொரு நாடார் சங்க கட்சி அமைப்புகளில் தலைவர்களும் செயல்படவேண்டும். அதே போல நாடார் சமுதாயம் சார்ந்த கெட்ட கெட்ட செயல்களை எந்த அரசியல் கட்சிகள் செய்தாலும் அதை எதிர்த்து ஒவ்வொரு நாடார் சங்கம் கட்சி அமைப்புகளும் அதன் தலைவர்களும் போராட வேண்டும்.

அதை செய்யாமல் விட்டுவிட்டு தங்கள் சுயநலத்திற்காக நாடார் என்ற பெயரை பயன்படுத்தி நாடார் சமுதாயத்திற்கு நல்லது செய்யும் அரசியல் கட்சிகளை வாழ்த்துவதும் சமுதாயத்திற்கு நாம் செய்யும் துரோகமாகும்.

நாடார்களின் வாக்கு வங்கி அரசியலில் இன்று வரை நிரூபிக்கப்படாமல் இருந்து வருகிறது தமிழகத்தில் 234 தொகுதிகளிலும் பரவி வாழும் சமுதாயமாக நாடார் சமுதாயம் இருந்து வருகிறது குறிப்பாக கன்னியாகுமரி, தென்காசி, திருநெல்வேலி தூத்துக்குடி, விருதுநகர், ராமநாதபுரம், ஈரோடு, சேலம் மாவட்டங்களில் அதிக அளவில் வாழ்ந்து வருகிறோம்.

நாடார் மக்கள் தொகை அடிப்படையில் 36 சட்டமன்ற தொகுதிகளிலும் 6 நாடாளுமன்ற தொகுதிகளிலும் நாடார்களுக்கு அரசியல் கட்சிகள் வாய்ப்புகள் வழங்க வேண்டும் ஆனால் நாம் வாக்கு வங்கியை நிர்வகிக்காததால் நமக்கு அந்த வாய்ப்பு எட்டாகணியாக இருந்து வருகிறது. நாடார் புராண கதைகளில் ஏழு தாய்களின் பிள்ளைகளாக நாம் உருவாகி இருக்கிறோம் மேலும் தாய்பால் குடித்து வளர வாய்ப்பு இல்லாததால் புலிப்பால் குடித்து வளர்ந்த பிள்ளைகளாக பத்திரகாளி தாய் வளர்த்த பிள்ளைகளாக நாம் வளர்த்ததின் காரணமாக நாம் அனைவரும் தனித்தனியே சக்தி வாய்ந்த நபர்களாக இருப்பதால் ஒற்றுமை என்பது இல்லாமல் இருந்து வருகிறது. நமது சமுதாயத்தின் வளர்ச்சியை கருத்தில் கொண்டு இதை சரி செய்யவேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கின்றோம். நாம் அறிவாளியாக ஆற்றல் மிக்கவர்களாக அனைத்து துறைகளிலும் சாதிப்பவர்களாக நாம் ஒன்றுபடுபவர்களாக உருவாகி மிகப்பெரிய வெற்றி அடைய வேண்டும் என்பதே நாடார் சமுதாயத்தின் நாடார் சமுதாய இளைஞர்களின் இன்றைய ஆசை.

இந்த ஆசையை நிறைவேற்றுவது நாடார் சமுதாய தலைவர்களின் தலையான கடமைகளில் ஒன்று நாடார் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காக வளர்ச்சிக்காக தங்களுடைய ஈகோகளை விட்டுவிட்டு இந்து நாடார் கிறிஸ்தவ நாடார் என்ற வேற்றுமை இல்லாமல் ஏ நாடார் பி நாடார் அந்த மாவட்டத்துக்காரன் இந்த மாவட்டத்துக்காரன் என்ற காழ்ப்புணர்ச்சி இல்லாமல் நாம் அனைவரும் ஒருதாய் பிள்ளைகளாக அனைவரும் ஒன்று என்ற வகையில் ஒன்றுபட்டு வென்றுகாட்ட வேண்டிய ஒரு சூழல் தற்போதைய சூழல் இது தெரிந்து கொண்டு நாடார் சமுதாய தலைவர்கள் அனைவரும் முதலில் ஒன்றுபடவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

மக்கள் தொகையில் தமிழகத்தில் 1கோடியே 50இலட்சத்திற்கும் மேலாக உள்ள நாம் ஒற்றுமை இல்லாததால் நமக்கு நியாயமாக கிடைக்க வேண்டிய உயர்நீதிமன்ற நீதிபதிகள், தேர்வாணைய தலைவர், ராஜ்யசபா உறுப்பினர், வாரியத்தலைவர், ஐஏஎஸ், ஐபிஎஸ் கோட்டாட்சியர் வட்டாட்சியர் பதவி உயர்வு போன்ற பதவிகள் கிடைக்கவில்லை.

அன்பால் அனைவரையும் அரவணைத்துச் செல்லும் அண்ணாச்சிகளாக அனைத்து சமுதாய மக்களின் நன்மதிப்பை பெற்றவர்களாக சுயசாதி பற்றும் பிற சாதி நட்பும் கொண்டு சமுதாயத்தின் ஒற்றுமை வளர்ச்சிக்காக எனது 100 சதவீத பங்களிப்பை என்றும் எப்போதும் வழங்க தயாராக உள்ளேன் என உறுதி ஏற்போம் என்றும் மக்கள் பணியில் வீ.ஆனந்தராஜ் தலைவர் நெல்லை தூத்துக்குடி நாடார் மகமை பரிபாலன சங்கம் தொடர்புஎண்:9444063899.

போரூர் வட்டார நாடார் சங்கத்தில் 27 வருடம் பொதுச் செயலாளர் மூன்று வருடம் தலைவர் நெல்லை நாடார் சங்கத்தில் கமிட்டி உறுப்பினர் மற்றும் துணைத் தலைவர் 17ஆண்டுகள் தற்போது தலைவர் தமிழ்நாடு வணிகர் சங்க பேரமைப்பின் மாநில துணைத்தலைவர் நாடார் மகாஜன சபையின் சென்னை மாவட்ட செயலாளர் வீடு குடியிருக்கும் நியூ காலனிபகுதி இல் தலைவர் 22ஆண்டுகளாக மூடி கிடந்த பூந்தமல்லி நாடார் சங்கத்தை மற்றும் திருமண மண்டபத்தை சமாதானமாக பேசி திறந்து வைத்தது போரூர் அருகில் கொளப்பாக்கத்தில் மெயின்ரோட்டில் பெருந்தலைவர் காமராஜர் சிலையை சொந்த செலவில் அமைத்து பல ஆண்டுகளாக பராமரித்து வருவது போரூர் பகுதியில் மாணவர்கள் கல்விக்கு பெரிய அளவில் உதவியது ஒரு தள்ளுவண்டியில் காய்கறி விற்கும் மாணவிக்கு டாக்டர் படிப்புக்கு உதவி அந்த மாணவி இன்று அப்போலோ மருத்துவமனையில் பணிபுரிகிறார் மற்றும் சமூக சேவை பல தமிழ் மாநில காங்கிரஸ் மாவட்ட பொருளாளர்

மேற்கண்ட சமூக பணிகளுக்காக பெருந்தலைவர் காமராஜர் விருது ஓர் ஒருவர் வி.ஆனந்தராஜ் அவர்களுக்கு வழங்கப்பட்டது.


**திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் நாகர்கோயில் ஆகிய இடங்களில் இருந்து சென்னையில் தங்கி வேலை செய்யும் 28வயது அதற்கு உட்பட்ட வாலிப பையன்கள் இருவருக்கும் இலவசமாக தங்க இடவசதி உள்ளது.**

குறிப்பு: அன்னார்கள் சி.எஸ்.ஐ. கிறிஸ்தவ நாடார் பையன்களாக இருக்க வேண்டும்.

அணுகவும்: இடம் :குரோம்பேட்டை, தொடர்புகொள்ள: 7358240994.

# நாடார்களுக்கான பிரத்தியோக மையம்

**மிக குறைந்த கட்டணத்தில் சேவை**

- 10,000ஆயிரத்திற்கும் மேலான பயோடேட்டா.
- தமிழில் விபரங்கள்.
- புரோக்கர் கமிஷன் கிடையாது.



## கல்யாண பாக்கியம்

திருமண தகவல் மையம்

பதிவு இலவசம்

திருநெல்வேலி

**ONLINE SERVICE உண்டு**



ஒரு வரன் ரூ. 30 மட்டுமே...

ராசி நட்சத்திரம் பொருத்தம் பார்த்து பயோடேட்டா எடுத்துக்கொள்ளலாம்.

**பதிவு இலவசம் :**

**www.kpmatrimony.com**

9962560026 | 7418560024 | 7418590024

புதிய பேருந்து நிலையம் மிக அருகில், ஆக்ரோ வணிக வளாகம்
திருநெல்வேலி


# செப்டம்பர் மாதம் மறக்கமுடியாத பிரபலமானவர்கள்

- தொகுத்து வழங்கியவர். காமராஜர் தொண்டர் சூளைமேடு த.ராமச்சந்திரன் செல்:9384533221.

❖ 2015 செப்டம்பர் 3ல் சரவணா ஸ்டோர்ஸ் நிறுவனர் யோகரத்ன நாடார் நினைவு நாள்.
❖ 1889 செப்டம்பர் 4ல் காந்திஜி சட்டம் பயில லண்டன் சென்றார்.
❖ 1872 செப்டம்பர் 5ல் வ.உ.சிதம்பரம்பிள்ளை அவர்கள் 152ம் பிறந்த நன்நாள்.
❖ 1889 செப்டம்பர் 5ல் டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் 135ஆம் பிறந்த நாள்.
❖ 1533 செப்டம்பர் 7ல் இங்கிலாந்து முதலாம் எலிசபத்ராணி பிறந்த நாள்.
❖ 2016 செப்டம்பர் 7ல் தாம்பரம் சரவணா ஸ்டோர்ஸ் தங்க நகை கடை ஓனர்- சிவ அருண்துரை தாயார் லட்சுமி அம்மையார் திறந்து வைத்தார்.
❖ 1960 செப்டம்பர் 8ல் இந்திராகாந்தி கணவர் பொராஸ்காந்தி நினைவு நாள்.
❖ 2008 செப்டம்பர் 8ல் குன்றகுடி அடிகளார் நினைவு நாள்.
❖ 1978 செப்டம்பர் 8ல் தேவர் பிலிம்ஸ் சண்டோ சின்னப்பாதேவர் நினைவு நாள்.
❖ 1889 செப்டம்பர் 9ல் கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பிறந்த நாள்.
❖ 1999செப்டம்பர் 9ல் என் தந்தை நாலுமாவடி அ.தங்கபாண்டி நாடார் நினைவு நாள்.
❖ இதே நாள் இவர் உடன் பிறவா தம்பி நாராயண நாடார் நினைவு நாள்.
❖ செப்டம்பர் 9ல் எம்.ஜி.ஆர்.பிக்சஸ்.ஆர்.எம்.வீரப்பன் 98வது பிறந்த நாள் விழா.
❖ 1983 செப்டம்பர் 10ல் தேசபக்தர் திரையுலகமேதை ஏ.கே.செட்டியார் நினைவு நாள்.
❖ 1921 செப்டம்பர் 10ல் திருவல்லிகேணி பார்த்தசாராதி கோவில் யானைக்கு உணவு கொடுத்த மகாகவி பாரதியை யானைதாக்கியதால் மறுநாள் காலமானார்.
❖ 2001 செப்டம்பர் 11ல் நியூயார்க் நகரில் 110மாடி இருகட்டிடத்தையும் அல்கொய்தா தீவிரவாதிகள் விமானம் மூலம் மோதி தகர்த்ததில் மூவாயிரம் பேர் கொல்லப்பட்ட சோதனை நாள்.
❖ 1949 செப்டம்பர் 14ல் இந்தியாவின் தேசிய மொழி இந்தி என அறிவிக்கப்பட்டது.
❖ 1909 செப்டம்பர் 15ல் அறிஞர் அண்ணாதுரை 115வது பிறந்த நன்நாள்.
❖ 1939 செப்டம்பர் 15ல் என்மாஜி தலைவர் சுப்பிரமணியம் சுவாமி 85ஆம் பிறந்தநாள்.
❖ 1948 செப்டம்பர் 15ல் என் உடன் பிறவா தம்பி மயிலை பெரியசாமி 76ஆம் பிறந்த நாள்.
❖ 1971 செப்டம்பர் 15ல் சூளைமேடு த.ராமச்சந்திரன் சுலோசனா திருமணநாள்.
❖ 1916 செப்டம்பர் 16ல் இசைகுயில் எம்.எஸ்.சுப்புலட்சுமி 108ஆம் பிறந்த நாள்.
❖ 1879 செப்டம்பர் 17ல் ஈரோடு சின்ன தாயம்மாள் மகன் ஈ.வெ.ரா.பெரியார் 145வது பிறந்த நாள்.
❖ 1979 செப்டம்பர் 17ல் பெரியார் பிறந்த நாளில் எம்.ஆர்.ராதா நினைவு நாள்.
❖ 1949 செப்டம்பர் 17ல் அண்ணா கலைஞர் திமுக கட்சி உதயமானது.
❖ 1939 செப்டம்பர் 18ல் சரவணா ஸ்டோர்ஸ் நிறுவனர் ச.யோகரத்னம் நாடார் 85ம் பிறந்த நாள்.
❖ 1980 செப்டம்பர் 19ல் தேசபக்தி தெய்வபக்தி நடிகை கே.பி.சுந்தராம்பாள் நினைவு நாள்.
❖ 1950 செப்டம்பர் 17ல் குஜராத்தில் பிறந்த நம் பிரதமர் மோடிஜி, நேருஜி போல் இறுதி வரை பிரதமராக நீடிக்க 74ம் பிறந்த நாளில் நெஞ்சார வாழ்த்துகிறேன்.
❖ 2021 செப்டம்பர் 21ல் தமிழக ஆளுனராக பதவி ஏற்ற நம் ஆர்.என்.ரவி அவர்களும் தொடர்ந்து இங்கே பணியாற்றனும்.
❖ 1921ல் செப்டம்பர் 21ல் மதுரை வந்த மகாத்மா காந்திஜி மதுரை பொது கூட்டத்தில் பேசும் விவசாயிகளை பார்த்த காந்திஜி மறுநாள் முதல் மேல் ஆடை அணிவதில்லை.
❖ 1921 செப்டம்பர் 21ல் மெட்ரோ ரயிலை கொடி அசைத்து துவக்கி வைத்த முதல்வர் ஜெயலலிதா மறுநாள் மாலை மாடியில் இருந்து இறங்கி வரும் போது கீழே விழுந்து காலமானார்.
❖ 1951 செப்டம்பர் 23ல் நடிகர் பி.யூ.சின்னப்பா காலமானார்.
❖ 1939 செப்டம்பர் 24ல் தினத்தந்தி சி.பா.சிவந்தி ஆதித்தனார் காலமானார்.
❖ 1932 செப்டம்பர் 26ல் மன்மோகன்சிங் எம்.ஏ.92ம் பிறந்த நாள்.
❖ 1907 செப்டம்பர் 27ல் மாவீரர் பகத்சிங் 117ம் பிறந்த நாள்.
❖ 1933ல் செப்டம்பர் 27ல் சிரிப்பு நடிகர் நாகேஷ் பிறந்த நாள்.
❖ 1994 செப்டம்பர் 28ல் நடிகர் டனால் தங்கவேல் நினைவு நாள்.
❖ 1968 செப்டம்பர் 30ல் அடையார் வி.சரஸ்வதி 55ம் பிறந்த நாள்.


அம்பத்தூர்: 9840287570
திருமுல்லைவாயில்: 9840948727

அமிர்தகனி
திருமண தகவல் மையம்
(நாடார் சமூகத்திற்கு மட்டும்)
எண்:5, 3வது தெரு, வள்ளலார் நகர், திருமுல்லைவாயில், சென்னை-62.



கீழ ஈரால் அருள்மிகு காமாட்சி அம்மன் துணை

எம்.எஸ்.முத்துவேல் நாடார்,

போன்:9443742889. 7708701159.

சரவணன் ரியல் ஏஜென்சிஸ்

காமாட்சி ஸ்டோர்ஸ்

தலைவர் மாமல்லபுரம் வட்டார நாடார் சங்கம்



நிலம் வாங்க விற்க லேஅவுட் புரோமோட்டர் எண்:118/1, டி.கே.எம்.ரோடு, மாமல்லபுரம், பின்கோடு-603104.

# பசுமை நிறைந்த நினைவுகள்(அமெரிக்க பயணம்)

**மருத்துவம்**

அன்று காலை 10.00 மணி இருக்கும். வெயிலின் தாக்கம் குறைவாகயிருந்தது. வீட்டிலிருந்து வெளியே புறப்பட்டேன். எனக்கு, இன்று எப்படியும் அந்த மருந்தகத்திற்குச் சென்று அதன் செயல்பாடுகளைக் கண்டறிய வேண்டுமென்று நினைத்து, நாங்கள் தங்கியிருந்த அடுக்குமாடி வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்றேன்.



மருந்தகத்திற்குச் சென்று, முன் கதவைத் தயக்கத்துடன் தள்ளினேன். அங்கு நான் கண்ட காட்சி என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

வரிசையாக நாற்காலிகள் போட்டிருக்கிறார்கள். அதில் நோயாளிகள் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். இரண்டு T.V பொருத்தியிருக்கிறார்கள். ஒன்றில், 'ஆங்கிலப்பாடம்' ஓடிக் கொண்டிருந்தது. மற்றொன்றில், 'விளம்பரங்கள்' போய்க் கொண்டிருந்தன. வரிசை எண்ணையும், பெயரையும் ஒலிப் பெருக்கியின் மூலம் தெரிவிக்கின்றனர்.

முன்னால் நல்ல மேஜை. அதில் கம்ப்யூட்டர் இருந்தது. அதன் பின்னால் உயர்ந்த நாற்காலியில் கிட்டத்தட்ட 25 வயது மதிக்கத் தகுந்த பெண் ஒருத்தி, கையில் பேப்பரை வைத்துக் கொண்டு வரிசை எண்ணைச் சொல்கிறார். வரிசை எண்ணில் உள்ளவர்கள் நிரப்பப்பட்ட படிவத்தை கையில் வைத்துக் கொண்டு முன்னால் வருகிறார்கள். டாக்டருடைய பெயர் மற்றும் டாக்டர் அமர்ந்திருக்கும் அறை எண்ணையும் கூறுகிறார்கள். அங்கு நோயாளி நுழைவதும், அங்கிருந்து பரிசோதனை முடிக்கப்பட்ட நோயாளி வருவதையும் பார்த்தேன்.

மருத்துவமனையின் உள்ளே நுழைவதற்கு சற்று பயமாகத்தான் இருந்தது. என்னுடைய பாஸ்போர்ட் எண், நாங்கள் குடியிருக்கும் அடுக்குமாடி எண், விலாசம், எனது மகனுடைய செல் எண் எல்லாம் ஒரு காகிதத்தில் எழுதி தற்காப்புக்காக வைத்திருந்தேன்.

இருப்பினும் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, வரவேற்பறையில் அமர்ந்து, கம்ப்யூட்டரை இயக்கிக் கொண்டிருந்த, அமெரிக்கப் பெண் பக்கத்தில் நின்றேன். அவள் என்னிடம் கேட்டார்.

Let me know the patients name and insurance number? (நீங்கள் சிகிச்சைக்காகத்தானே வந்திருக்கிறீர்கள்? உங்கள் பெயர், மருத்துவக் காப்பீட்டு எண் என்ன?) என்று வினவினாள்.

நான் ஆங்கிலத்தில், "இல்லை, நான் ஒரு இந்தியன். டூரிஸ்ட் விசா மூலம் அமெரிக்காவைச் சுற்றிப் பார்க்க வந்திருக்கிறேன். நான் மருத்துவத்துறையில் 30 ஆண்டுகள் வேலை பார்த்து ஓய்வு பெற்ற ஓய்வூதியர்" என்று சொல்லி, "நான் உங்களது மருத்துவமனையின் செயல்பாடுகளை அறிய ஆசைப்படுகிறேன்" என்றேன்.

உடனே, அந்த பெண் சிரித்துக் கொண்டே, இருக்கையில் இருந்து எழுந்து ஒரு சில குறிப்புகளையுடைய நோட்டீசைக் கொடுத்தார். பிறகு, என்னைக் கூட்டிக்கொண்டு, ஒவ்வொரு இடமாகக் காண்பித்தார். அவளோடு செல்வதற்கு எனக்குச் சற்று தயக்கமாகத்தான் இருந்தது. அவர்கள் பேசும் ஆங்கிலம் மிகவும் வித்தியாசமாக இருக்கும். என்ன சொல்கிறார்கள் என்பதைப் புரிந்து பதில் சொல்ல குறைந்தபட்சம் ஒரு நிமிடமாகும். ஒவ்வொரு சிறப்பு மருத்துவர்களுக்கும் தனி அறை. அதில் அவர்கள் பெயர், பின் பட்டம் எல்லாம் எழுதி வைத்திருக்கிறார்கள்.

-தென்னக சான்றோர் சங்க உறுப்பினர்.

எம்.கோவிந்தராஜ். செல்:9384605133

ஒவ்வொரு சிறப்பு மருத்துவருக்கும், உதவிக்காக, நர்ஸ் பக்கத்தில் நின்று உதவி செய்கிறார்கள்.

கம்ப்யூட்டர் அறை இருக்கிறது. படுக்கை வசதி இருக்கிறது. அறையில், குளிர் சாதன வசதி செய்யப்பட்டிருந்தது.

ஒவ்வொரு டாக்டரிடமும் வரிசையில் நோயாளிகள் நின்று கொண்டிருக்கிறார்கள். மருத்துவமனை அறைகள் முழுவதும் மரத்தால் செய்யப்பட்டவை.

அறுவை சிகிச்சை நிலையத்திற்கும் சென்றோம். அதைச் சுத்தமாக சுகாதாரமாக வைத்திருக்கிறார்கள். நாங்கள் சென்ற நேரம் அறுவை சிகிச்சைகள் எதுவும் நடைபெறவில்லை. ஆனால், டாக்டரும் நர்சும் அதற்குரிய ஆடை அணிந்திருந்தார்கள்.

டாக்டர் எழுதிக் கொடுத்ததைக் கொண்டு, அங்கிருக்கும் பார்மஸிஸ்டிடம் கொடுக்கிறார்கள். அவர் சில மாத்திரைகளைக் கொடுக்கிறார்கள். பிறகு சிலரைக் காத்திருக்கும்படி செய்கிறார். வேறு சிலரை வேறொரு பார்மஸிஸ்டிடம் சென்று மாத்திரை வாங்கிக் கொள்ளும்படி சொல்கிறார். இது தமிழ்நாட்டு மருத்துவமனைகளில் உள்ளது தான்.

ஒரு சில அறைகளைக் காண்பித்தார். அன்று திங்கட் கிழமை. அவளுடைய வேலை நேரத்தை வீணாக்க அவர் விரும்பவில்லை என நினைத்தேன். வெளியே வந்து என்னை வழியனுப்பி வைத்தார். என்னிடத்தில் படிவம் ஒன்றைக் கொடுத்து, "இதைத்தான் நோயாளி நிரப்பித் தரவேண்டும். இதனை வைத்துத்தான் சிகிச்சை தொடர்வோம்" என்றார். நான் பிரிந்து வரும்போது "இந்தியாவிற்கு வாருங்கள். இந்திய மக்களுடைய கலாச்சாரம் உங்கள் கலாச்சாரத்தைவிட முற்றிலும் வேறுபட்டது" என்று குறிப்பிட்டேன்.

பதிலாக, "இந்திய நண்பர்கள் எனக்கு அதிகம் இருக்கிறார்கள்" என்று கூறி பிரியா விடை கொடுத்தார்.

அவர்கள் என் கையில் கொடுத்த படிவத்தைப் பார்த்தேன். அதில் நோயாளியைப் பற்றி முழு விவரங்களைக் கேட்டிருந்தனர். பிறகு, "Social and Personal History" என்று அந்த படிவத்தில் போடப்பட்டிருந்தது. அதில் பல கேள்விகள் கேட்கப்பட்டிருந்தன.

இதை நிரப்பிக் கொடுத்தால்தான் வரிசை எண் கொடுத்து கூப்பிடுவார்கள். மருத்துவமனை வேலை நேரம் காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை.

ஞாயிற்றுக்கிழமை விடுமுறை. மருத்துவமனை என்பதற்குரிய எந்தவிதமான அறிகுறிகளும் விடுமுறை நாட்களில் தெரிவதில்லை.

'பல் வலி' என்று பல் டாக்டரிடம் சென்றால் அதிகம் வசூலிப்பார்கள். ஒரு பல் எடுக்க, கிட்டத்தட்ட 'ஒரு லட்சம் ரூபாய்' செலவாகும். சிறு காயம் ஏற்பட்டு, மருத்துவரிடம் சென்றால், எப்படியும் 12 மணி நேரமாவது ஆகிவிடும். குறைந்தபட்சம் 200 டாலர் வசூலித்துவிடுவார்கள்.(தொடரும்)

# அன்னை வேளாங்கண்ணி கல்வி நிறுவனங்களின் தலைவர் குமரியின் தலைமகன் சைதையின் கலங்கரை விளக்கம் முனைவர் ச.தேவராஜ் அவர்களின் பிறந்தநாள்

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம் பாரம்பரிய புகழ்மிக்க பாலூர் ஆசான் குடும்பத்தில் திரு.சபரியானந்தம் ஆசான்-திருமதி.மரியதங்கம் அம்மாள் தம்பதியரின் மூன்றாவது திருக்குமாரராக 1953ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம் 6ஆம் தேதி ச.தேவராஜ் பிறந்தார்.

**இளமையும் கல்வியும்:**

சிறு வயதிலிருந்தே சுறுசுறுப்பாகவும், நற்பண்புகள், ஒழுக்கம், அறிவுக்கூர்மை, தன்னம்பிக்கை, விடாமுயற்சி, இறைபக்தி ஆகியவற்றில் சிறந்து விளங்கி பெற்றோருக்கும், உற்றோருக்கும் உள்ளம் மகிழ வைக்கும் பிள்ளையாக உறுதுணையாக இருந்தார். "விளையும் பயிர் முளையிலேயே தெரியும்" என்பதற்கு ஏற்ப ஆரம்ப பள்ளிபருவத்திலேயே அறிவுச்சுடர் மிகும் மாணவராக விளங்கினார். கருங்கல் அரசு உயர்நிலைப்பள்ளியில் பள்ளி படிப்பையும், மார்த்தாண்டத்தில் உள்ள நேசமணி நினைவு கிறித்தவக் கல்லூரியில் கல்லூரி படிப்பையும் நிறைவு செய்தார்.



Chairman Dr. S. Devaraj

**சென்னையின் பயணம்:**

1973ஆம் ஆண்டில் தனது இருபதாம் வயதில் சென்னைக்கு வந்தார். நல்லதொரு வேலையில் அமர்வது அவரது நோக்கமாக இருந்தது. விடாமுயற்சி, கடின உழைப்பின் மூலம் 1976 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அமைப்பில் (Employees Provident Fund Organization) வேலை கிடைத்தது. நிரந்தர அரசு வேலை கிடைத்த போதும், தன் முயற்சிகளை கைவிடாமல் சுய தொழிலிலும் ஆர்வம் காட்டி படிபடியாக வாழ்வில் முன்னுக்கு வந்தார்.

9.7.1980 ஆம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்டம் வில்லுக்குறி அருகில் உள்ள மாடத்தட்டுவிளையைச் சேர்ந்த திரு.மரியமிக்கேல்தாஸ்-ஏசுவடியாள் தம்பதியினரின் செல்வமகளான டெல்பினை திருமணம் செய்தார். வெற்றி பெறும் ஒவ்வொரு ஆண்மகனுக்கும் பின் ஒரு பெண்மணி இருக்கிறார் என்ற வாக்கை நிரூபிக்கும் வகையில் திருமதி.டெல்பின் விளங்கினார். இத்தம்பதியர்களின் மூன்று குழந்தைகளில் மகள்-ஷகிலா ஜாஸ்மின் அமெரிக்காவில் தகவல் தொழில்நுட்ப துறையில் மேலாளராகவும் பணிபுரிந்து வருகிறார். மகன்கள்: முனைவர். D.தேவ்ஆனந்த் அன்னை வேளாங்கண்ணி கல்வி நிறுவனங்களின் செயலாளராகவும், மருத்துவர். D.ஜானி கிறிஸ்டோபர் இயக்குனராகவும், திருமதி.டெல்பின் தேவராஜ் அவர்கள் கணவரின் காரியங்கள்யாவிலும் கைகொடுத்து ஊக்கமூட்டும் மனைவியாக இருந்து வருகிறார். திரு.ச.தேவராஜின் திருமண வாழ்க்கை உண்மையான திருப்புமுனையாக இருந்தது. ஸ்டார் ரியல் எஸ்டேட் தொழில் திரு.ச.தேவராஜ் அவர்களுக்கு மன நிறைவளிக்கும் தொழில்களில் ஒன்று.

**கல்வி பணி:** திரு.ச.தேவராஜ் அவர்களின் தந்தை திரு.சபரியானந்தம் ஆசான் கல்விப் பணியில் நற்புகழ் பெற்றிருந்தவர். எனவே கல்வித்துறையும் திரு.தேவராஜ் அவர்களின் மனங்கவர்ந்த துறையாக எப்போதும் இருந்து வந்தது. சென்னை மேற்கு சைதாப்பேட்டை வி.ஜி.பி சாலையில் ஒரு பள்ளி ஆரம்பித்தால் சிறப்பாக இருக்கும் என்ற எண்ணம் அழுத்தமாக ஏற்பட்டது. அன்னை வேளாங்கண்ணி மெட்ரிக் பள்ளி தொடங்கப்பட்டு திரு.ச.தேவராஜ் அவர்களின் நெடுநாள் கனவு நனவானது. கடும் உழைப்பின் பலனாக அன்னை வேளாங்கண்ணி மெட்ரிக் பள்ளிக்கூடத்திற்கான கட்டடம் எழும்பியது. இறைவனின் ஆசீர்வாதத்துடன், 6.9.1988 அன்று காலை மங்களகரமாக பள்ளி தொடங்கப்பட்டது.

கலைமாமணி.திரு.வி.ஜி.சந்தோஷம் குத்துவிளக்கேற்றி பள்ளியைத் தொடங்கி வைத்தார். அந்த சிறிய தொடக்கம் அன்னை வேளாங்கண்ணி கல்வி நிறுவனங்கள் எதிர்காலத்தில் பரந்து விரியப்போகும் ஓர் ஆலமரத்துக்கு ஊன்றப்பட்ட வித்து என்று கூறலாம். சிறப்பான நோக்கத்துடனும், சீரிய லட்சியத்துடனும் நடைபோடும் ஒரு கல்வி நிறுவனம் விரைந்த வளர்ச்சியைப் பெறும் என்பதற்கு உதாரணமாக அன்னை வேளாங்கண்ணி கல்வி நிறுவனங்கள் திகழ்ந்து வருகிறது.

**விருதுகள்:**

திரு.ச.தேவராஜ் அவர்களின் கல்வி சேவையைப் பாராட்டி, வி.ஜி.பி.உலகத் தமிழ்ச் சங்கம் இலக்கிய விருது வழங்கி சிறப்பித்துள்ளது. குறிஞ்சிக் கபிலர் தமிழ்ச்சங்கம் கல்வி அறிவாலயம் விருது வழங்கி சிறப்பித்துள்ளது. புனிதர் மதர்ஸ் தெரசா அமைப்பு புனிதர் அன்னை தெரசா விருது வழங்கி சிறப்பித்துள்ளது. Indian Red Cross Society பாராட்டு விருது-2014 வழங்கிச் சிறப்பித்துள்ளது. பாரதப்பிரதமர் ராஜீவ் காந்தியின் பிறந்தநாளையொட்டி வழங்கப்படும் ராஷ்ட்ரிய ரத்தன் விருது 22.08.2004 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற விழாவில் அன்றைய கோவா கவர்னர் திரு.ச.தேவராஜ் அவர்களுக்கு விருதினை வழங்கி சிறப்பித்தார். **மேலும் "பெருந்தலைவர் காமராஜர்"** விருது வழங்கப்பட்டது, பெரும் மகிழ்ச்சியும், காமராஜர் புகழுக்கு மேலும் பெருமை சேர்க்கிறது. தமிழக அரசால் பிப்ரவரி 1ஆம் தேதி மாண்புமிகு தமிழக முன்னாள் முதல்மைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி அவர்களின் கரங்களால் விருது வழங்கப்பட்டது. தரமான கல்வி, நல்ல ஆளுமை, நல்லொழுக்கம், நற்பண்புகளை மாணவர்களுக்கு வழங்கவேண்டும் என்ற உயரிய கொள்கையுடன் நிறுவனங்கள் செயல்பட்டு வருகிறது.

**சமுதாயப் பணி:**

கல்விப் பணியோடு சிறந்த சமுதாயப் பணியும் செய்து வருகிறார். நெடுங்குன்றம் பகுதிகளில் மழைநீர் சேகரிப்பு வடிகால் அமைத்தல், நிலத்தடி நீரை மேம்படுத்த பனை விதைகளை விதைத்தல், மரக்கன்றுகள் நடுதல், ஏரியில் தூர் வாருதல், லயன்ஸ் கிளப் ரோட்டரி கிளப் போன்ற அமைப்போடு இணைந்து இரத்ததான முகாம், இலவசப் பொது மருத்துவ முகாம், கண் மருத்துவ முகாம், பல் மருத்துவ முகாம், போன்ற பல நிகழ்வுகளைப் பொது மக்களுக்கும் சமுதாயத்திற்கும் செய்து வருகிறார். இவரது உந்துதலின் காரணமாகவும் வழிகாட்டுதல் காரணமாகவும் கல்லூரி நாட்டுநலப்பணித் திட்டம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. சென்னைப்பல்கலைக்கழகம் கல்லூரி நாட்டுநலப்பணித்திட்ட பணியைப் பாராட்டி ரூபாய் ஐம்பதாயிரம் மற்றும் NYLP AWARD (NATIONAL YOUNG LEADERS PROGRAMME AWARD) வழங்கி சிறப்பித்தது. அன்னை தெரசா அறக்கட்டளை, குமரி நற்பணிமன்றம் போன்ற அமைப்புகளோடு இணைந்தும் சமுதாயப் பணி செய்து வருகிறார்.

**கல்வி சேவை:**

ஏழை, எளிய மாணவர்களுக்கு பல்வேறு திறன்களை ஊக்குவிக்கும் பள்ளிகள், கல்லூரிகளாக அன்னை வேளாங்கண்ணி கல்வி நிறுவனங்கள் திகழ்ந்து வருகிறது. படிப்பில் அதிக மதிப்பெண் பெற்று உயர்கல்வியை தொடர முடியாத மாணவர்களுக்கு பொறியியல் கல்லூரியில் பயில வாய்ப்பளிக்கப்படுகிறது. முக்கியமாக விளையாட்டுகள், மென்திறன்கள் மற்றும் செய்முறை பயிற்சி ஆகியவற்றில் மாணவர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள். கல்வியின் மீது நிறுவனர் கொண்டிருந்த ஆர்வத்தை அவர் ஆரம்பித்த கல்வி நிறுவனங்களே பறைசாற்றும். மாணவர்களின் எதிர்காலத்தை ஒளிமயமாக்கும் வேலைவாய்ப்புகளை வழங்கும் படிப்புகளை வழங்குவதில் அன்னை வேளாங்கண்ணி கல்வி நிறுவனம் அக்கறை செலுத்தி வருகிறது. இந்தக் கல்வி நிறுவனங்களில் படித்த மாணவ-மாணவியர்கள் வெளிநாடு, உள்நாடுகளில் உயர்ந்த பொறுப்பு மற்றும் அரசு பதவிகளில் உள்ளனர்.



அன்னை வேளாங்கண்ணி கல்வி நிறுவனங்களின் நிறுவனர் நல்ல தரமான கல்வியை வழங்கி பொது சேவைகளையும் ஆற்றி வருகிறார். நிறுவனர் அவர்களின் வழிகாட்டுதல், செயல்பாடுகளால் கல்வி நிறுவனங்கள் தரமான கல்வியை வழங்கி வருவதோடு சீரிய நற்பண்புகளையும் மாணவர்களிடையே வளர்த்து வருகிறது. முனைவர்.ச.தேவராஜ் அவர்களின் கல்விப் பணி மென்மேலும் சிறக்க வாழ்த்துக்கள். சென்னையில் பிரபலமாக இயங்கக் கூடிய கல்வி நிறுவனங்களில் ஒன்று

**அன்னை வேளாங்கண்ணி கல்வி நிறுவனங்கள்:**

Annai Veilankanni's Matric.Hr.Sec.School
Annai Veilankanni's Pharmacy College
Annai Veilankanni's College for Women
Annai Veilankanni's Teaher Training Institute
Annai Veilankanni's School of Nursing
Annai Veilankanni's College of Education
Annai Veilankanni's College of Nursing
Annai Veilankanni's College of Engineering
Annai Veilankanni's CBSE School,
Annai Veilankanni's Hospital.
Chennai West Saidapet, Nedungundram, Potheri.

**என்றும் கல்விப் பணியில் Dr.தே.தேவ்ஆனந்த்** MBA.,M.Com.,MHRM.,MSW.,M.L(Labour & Admn, Law), Ph.D.,
**செயலாளர், அன்னைவேளாங்கண்ணி கல்வி நிறுவனங்கள், சென்னை-15.**
**www.annaiveilankannis.com E-mail:devanand222@gmail.com Help line:9282144444. 044-43523712.**

# தமிழக நாடார் மேட்ரிமொனி

சென்னை, தமிழகமெங்கும் மற்றும் வெளிநாடு வரன்கள்

SINCE 2007

தாங்களின் வீட்டிலுள்ள வரன்களுக்கு மணமகன், மணமகள் விபரங்கள், ஜாதகத்துடன் தாங்கள் வீட்டிலிருந்து எங்களின் வெப்சைட் மூலமாக நேரில் பார்க்கலாம். **வரன் பதிவு இலவசம்.**

Visit Our Website

**www.tamilaganadarmatrimony.com**

நம்ம தமிழகத்தின் சென்னை, நெல்லை, தூத்துக்குடி, குமரி, விருதுநகர்
உட்பட அனைத்து மாவட்டம். இந்தியாவின் சென்னை, மும்பை,
கர்நாடகா, ஆந்திரா மற்றும் அனைத்து மாநில நாடார்கள்.
USA, UK, Canada, Singapore, Malaysia, Australia,
Germany, Dubai போன்ற வெளிநாடுகளிலுள்ள
இந்து நாடார், கிறிஸ்தவ நாடார் (RC, CSI, Pentecost)
BE, ME, M.Tech, MCA, MBA, IT, CA, Govt, VIP தொழில்
அதிபர்கள் சிறிய, பெரிய வியாபாரிகள் முதல் மணம் / மறுமணம்,
17 வருட அனுபவமுள்ள நாங்கள், எங்களிடம் ஏராளமான
திருமணங்கள் நடைபெற்று வருகிறது.

## தமிழக டாக்டர்ஸ் மேட்ரிமொனி

MBBS, MD, MS, DGO, MDS, ORTHO, ANESTHESIA, SIDDHA, HOMEO, NURSE

**Open our Website : www.tamilagadoctorsmatrimony.com**

எங்களுக்கென்று தனி வெப்சைட் இருப்பதால் எங்களிடம் மிக சுலபமாக திருமணம் முடிகிறது.
திருமணத்திற்காக காத்திருக்காதீர்கள். உங்கள் வரன்களுக்காக பேசும்

# நெல்லை T. ராஜன் நாடார்

கேம்ப்ரோடு ஜங்சன், கிழக்கு தாம்பரம், சென்னை - 600 073

**Cell : 73388 12126, 73977 76595**

E-mail : tamilagamatrimony2005@gmail.com

# உலகம் சுற்றினோம் சந்திரிகா ராஜமோகன்.

## 6.இங்கிலாந்து சுற்றுலா

மேல்பகுதி திறந்திருக்கும் பஸ்ஸில் உட்கார்ந்திருந்தோம். லேசான சாரல் மழை, குளிர்ந்தகாற்று வீச, பஸ்ஸின் கீழ் பகுதியில் வந்து அமர்ந்து கொண்டோம். கிளாஸ்கோ பகுதியில் மாலை இருள் சூழ இரவு 10.30-11மணி ஆகிவிடுகிறது. அதுவரை பகல் போல வெளிச்சம். மறுநாள் லண்டனை நோக்கிப் பயணம் ஆரம்பம் ஆனது. லண்டன் செல்லும் பஸ்ஸில் டாய்லெட் வசதி இருந்தது. பிஸ்கெட்ஸ், சான்விஸ் விற்கப்பட்டன. வாகன ஓட்டுனர்கள் நன்கு சிறப்பான உடை அணிந்து நம் ஊர் பெரிய அதிகாரிகள் போல காணப்பட்டார்கள். அவர்களிடம் காணப்பட்ட சுத்தம், பொறுப்புணர்ச்சி, காலம் தவறாமை, தேவையானதை தேவையான பொழுதில் மட்டும் பேசுவது ஆகிய நற்குணங்கள் காணப்பட்டன. வழிகளில் சிறு கடைகளைக் காண முடியவில்லை. மாலை 6.30 மணிக்கு சூப்பர் மார்க்கெட் திறந்து இரவு 8மேணிக்கு மூடிவிடுகிறார்கள்.

காக்கை, குருவி எங்கள் சாதி என்றார் பாரதியார், காக்கைகளை இங்கே காண முடியவில்லை. குருவிகளும், அவ்வளவாக இல்லை. ஆனால் புறாக்கள் நிறைந்து இருந்தன. மக்கள் அவற்றுக்குத் தீனி கொடுத்தார்கள்.

லண்டன் முதல் ஐரோப்பிய நாடுகள் எதிலும் ஈ, எறும்பு, கொசு ஆகியவற்றைக் காண முடியவில்லை. ஒவ்வொரு வீட்டுப் பின்பகுதியிலும் குப்பைத் தொட்டிகள் இருந்தன. பெரும்பாலோர் இரவும், பகலும் சாலைகளிலேயே கார்களை நிறுத்தி வைக்கிறார்கள். டாக்டர் சரஸ்வதி அவர்களுக்கு பள்ளிக்கூடத்தில் வேலை. ஒவ்வொரு வாரமும் ஒரு பள்ளிக் கூடம் சென்று பள்ளி குழந்தைகளின் ஆரோக்கியம் தொடர்பான விஷயங்களைக் கவனிக்க வேண்டும். மாணவர்களின் உடல் நலப் பதிவுகள் அவன் அல்லது அவள் படித்து முடிக்கும் வரை தொடர்கிறது. இப்படி நம்மூர் அரசுப் பள்ளிகளிலும், மாநகராட்சிப் பள்ளிகளிலும் மாணவர்களின் உடல் நலம் கவனிக்கப்பட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று நினைத்துக் கொண்டோம்.

மீண்டும் லண்டன்:

இன்னொரு முறை பல நாடுகளுக்கும் சுற்றுப் பயணம் மேற்கொண்போது மீண்டும் இங்கிலாந்து சென்றோம். மறுநாள் எலிசபெத்தின் கணவரின் சொந்த ஊரான எடின்பரோ நோக்கிச் சென்றோம். வழி நெடுக இயற்கை அழகு கண்ணை கவர்ந்தது. ரோஜா மலர்கள் பூத்துக் குலுங்கின. தூய்மையான ஊர். இது ஸ்காட்லாந்து நாட்டின் தலைநகர். விஞ்ஞானிகள் பலரும் பிறந்த ஊர். கேஸ் பெட்ரோமாக்ஸ் லைட்டைக் கண்டுபிடித்த ஸ்டீபன்சன் வீட்டையும் பார்த்தோம். புகைப்படங்கள் எடுத்துக் கொண்டோம். குளிர் அதிகம். மழையும் பெய்து கொண்டிருந்தது. எடின்பரோவில் கலை நிகழ்ச்சி நடத்துவதற்காக பிரம்மாண்டான அரங்கம் அமைக்கப்பட்டிருந்தது.

இப்போது பக்கிங்காம் அரண்மனையைப் பார்த்தோம். அங்கிருந்து திருவாரூரில் இருந்த என் அத்தை சாரதாவிடம் பேசினேன். பிரம்மாண்டமான, அழகான அரண்மனை. வேலைப்பாடுகள் மிகுந்த வாசல் கதவுகள் காண்போரைக் கவர்ந்து ஈர்த்தன. மகாராணி குடும்பத்தினரின் பிரம்மாண்டமான ஓவியங்கள் (புகைப்படங்களாக) வரிசையாகக் காணப்பட்டன. அரண்மனையின் அழகு மனத்தில் ஆழப் பதிந்தது.




ஆங்கிலக் கவிஞரும் நாடக ஆசிரியருமான உலகப் புகழ் பெற்ற ஷேக்ஸ்பியர் பிறந்த ஊரான கிராப்போர்டு அவோனில் அவர் பிறந்த வீட்டை சுற்றிப் பார்த்தோம். ஷேக்ஸ்பிரியரின் நினைவாக உலக புத்தகத் தினமாக உலகம் முழுவதும் மக்கள் கொண்டாடுகின்றனர்.

தொடரும்......




அரிசி மொத்த வியாபாரம்.

செல்:9840994451, 26380752 / 73.

**சிவசக்தி ரைஸ் டிரேடர்ஸ்**



286, சி.டி.எச்.ரோடு, செல்வராஜ் காம்ப்ளக்ஸ், ஆவடி, சென்னை-54.

**செல்வராஜ் சூப்பர் மார்கெட்**

286/1, சி.டி.எச்.ரோடு, ஆவடி, சென்னை-600 054.selvarajsupermarket@gmail.com



**ஜெயம் ரியல் எஸ்டேட்& ஜெயம் ஸ்வீட் ஸ்டால்**

வீடு மனை வாங்க விற்க அணுகவும்.

கே.கே.நகர் அனைத்து வியாபாரிகள் முன்னேற்ற சங்கம் பதிவு எண்:473

கே.கே.நகர். எஸ்.தேவதாஸ் செயல் தலைவர்.

நெ.20/1, திரு.ராமசாமி ரோடு, கே.கே.நகர், சென்னை-78. செல்:9840369569. 9600005458

# நாடார் சமூகத்தின் போராட்ட வரலாறு

## நாடார்களின் பிரிவுகள்

தொகுப்பு ஆசிரியர்:சு.செந்தமிழ்ச் செல்வன்
செல்:98412 26856.

மற்றப் பிரிவுகள்: மேற்கண்ட ஐந்து பிரிவுகள் நாடார் சமுதாயத்தில் பொதுவான நாடார் குலப் பிரிவுகளாக கருதப்படுகிறது. இவை அல்லாது இப் பிரிவுகள் அடங்கிய வேறு சில முக்கியப் பிரிவுகளும் உண்டு. இது இடப் பெயர்ச்சியின் காரணமாகவும், வேறு சமூகத்தினரின் தொடர்பு காரணமாகவும் தங்கள் பெயரை மாற்றி இருக்கலாம்.



இந்திய அரசாங்கம் 1891ஆம் ஆண்டு வெளியிட்டுள்ள மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அறிக்கையில் 324க்கு குறையாத உட்பிரிவுகள் பற்றிய விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. இப்பட்டியல் நாடார்களின் அங்கீகாரத்தைப் பெறவில்லை. இருப்பினும் முக்கிய சில பிரிவுகள் பற்றிப் பார்ப்போம்.

6). சேர்வை:-

சேர நாட்டில் வாழ்ந்த ஆதி நாடார்கள். சேர அரசர்கள் காலத்தில் படையாளிகளாய் இருந்ததால் இவர்கள் "சேர்வை" (அ) சேர்வைக்காரன்" என்று அழைக்கப்பட்டார்கள். இச் சேர்வைக்காரப் பிரிவினர் பழைய ஆற்றங்கரையில் பெருமாள்புரம், வழுக்கம்பாறை, நல்லூர், அரசன்குளம், கடுக்கரை ஆகிய இடங்களிலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் கல்குளம், கரிப்பாறை, கொடுப்பாக்குழி ஆகிய இடங்களில் வசித்து வந்தனர்.

"சேர்வை" என்பதற்குச் சிறப்பான பட்டப் பெயர் "சேனாதிபதி" என்று திரு எஸ்.டி.ஜெயபாண்டியன் 2001:61 குறிப்பிடுகிறார்.

நாடார் சமுதாயத்தின் கிளைச் சாதிகளில் ஒன்றாகத் தோற்றம் அளிக்கும் "சேர்வை" நாடார்களில் சிலர் வசதி படைத்த நாடார்களுக்கு பணிவிடை செய்து வந்தார்கள். கல்வியில் முன்னேற்றம் அடைந்த இவர்கள், நாடார் சமுதாயத்திலிருந்து தங்களை வேறுபடுத்திக் கொள்ள விரும்பவில்லை. ஆகவே 1947ஆம் ஆண்டு நாங்குநேரி தாலுக்காவில் உள்ள சேர்வைக்காரகள் தங்களை அரசாங்க ஆவணங்களில் "நாடார்கள்" என்று குறிப்பிட வேண்டும் என்று கோரிக்கை அளித்தனர்.

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள முக்கூடல், சிதம்பரம், களக்காடு முதலிய இடங்களில் பீடித் தொழில் அதிபர்களாகவும், வணிகர்களாகவும் இருந்திருக்கின்றனர். சேர்வைக்காரர்கள். அதாவது படைத்தலைவன், கொடிக்காரர், அதாவது யுத்தத்தில் கொடிபிடிப்போர், அண்ணாவி என்ற சிலம்பாட்ட ஆசிரியர் முதலான யுத்தத் தொழில் சம்பந்தமான பட்டப்பெயர்கள் நாடார் குலத்தில் இருந்தன. (து.ஆ.குலசேகர ராஜ்- 1919 ப-22).

7) பண்டாரங்கள்:

நாடார் கோயில்களில் தொண்டு செய்யும் பண்டாரங்கள் பிராமணர்கள் அல்லாத பூசாரிகள் சாதியிலிருந்து வந்தவர்களாக இருந்தார்கள். ஒரு காலத்தில் நாடார் பூசாரிகளின் தொண்டுகளைச் செய்வதற்கென ஒரு தனிப் பிரிவு இருந்ததாக தெரிகிறது. இவர்கள் நாடார்களின் குருக்கள் என்று அழைக்கப்பட்டனர். இவர்களுக்கு அய்யர் என்ற பட்டப் பெயரும் உண்டு.

திரு.ரிங்கல் தொளபே 1824 ஆம் ஆண்டு நாடார் சமூகத்தில் "பண்டாரங்கள்" என்று ஒரு குழுவினர் இருந்ததாகவும், அவர்களுக்கு எழுதவும், படிக்கவும் தெரியும் என்றும், பக்திக் கதைகளைப் பாடவும் தெரியும் என்று குறிப்பிட்டுள்ளார். - தொடரும்.





நாடார் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் காமராஜர் 121வது பிறந்தநாள் விழா ஆலந்தூர் வட்டார நாடார் சங்க திருமண மண்டபத்தில் 29.8.2023 அன்று நடைபெற்றது. விழாவில் தொழிலதிபர் விஜி.சந்தோசம் அவர்கள், நான்குநேரி சட்டமன்ற உறுபினர்.ரூபிமனோகரன், புழல்தர்மராஜன், மைக்கில்ராஜ், நெல்லை தூத்துக்குடி நாடார் பரிபாலான சங்கத் தலைவர் போரூர் ஆனந்தராஜ், ஆலந்தூர்.கணேசன், இராவணன்இராமசாமி மற்றும் ஏராளமான பொதுமக்களும் பிரமுகர்களும் கலந்து கொண்டார்கள். விழாவிற்கு சங்க தலைவர் மின்னல் ஸ்டீபன் தலைமையேற்று பல நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.



## கண்ணீர் அஞ்சலி

நாடார் இனத்தின் மீது சுமத்தப்பட்ட போலி கட்டுக்கதைகளை முதன்மை ஆதாரங்களுடன் பொய் என நிரூபித்தவர். மறைக்கப்பட்ட நாடார்களின் உண்மை வரலாறுகளை வெளியுலகத்திற்கு வெளிச்சம் போட்டவர். நாடார்கள் தான் தென்னிந்தியாவை ஆண்ட மூவேந்தர் அரச மரபினர் என்று காலஞ்சென்ற முதல்வர் செல்வி.ஜெ.ஜெயலலிதா அவர்களிடம் முதன்மையான ஆதாரங்களை சமர்பித்து அறிக்கை விட வைத்தவர் சிறந்த வரலாற்று ஆய்வாளர் ஐயா அ.கணேசன் நாடார் அவர்கள் இயற்கை எய்தினார்.

EAGLE PRESS
"DIARY HOUSE"
Ph : 25952694
35, M.S. Koil Street, Chennai-13.
Tamil Nadu
email: eagle@giamd01.vsnl.net.in
Website : www.eaglepressgroup.com

# கிட்னி -- துப்புரவு தொழிற்சாலை

**இரத்தத்தைச் சுத்தப்படுத்தும் சிறுநீரகங்களின் பணி, வளர்ச்சி, ஆரோக்கியம் மற்றும் சிறுநீரக நோய்கள் பற்றி பிரமிப்பான கட்டுரை**

## 25.எலியும் கிலியும்

**-டாக்டர் பி.சௌந்தரராஜன்.**



ஓடிக்கொண்டிருக்கிற கார் ஒரு நாள் திடீரென்று நின்று விடுவதுபோல் சிறுநீரகமும் ஒரு கெட்ட நாளில் வேலை செய்யமாட்டேன் என்று ஸ்டிரைக் பண்ணுவதுதான் சிறுநீரகச் செயல் இழப்பு. நின்ற காருக்கு சின்னதாக ஒரு வேலை பார்த்ததும் கார் மீண்டும் ஓடினால் அது தற்காலிகச் செயலிழப்பு. இன்ஜினே கெட்டுப்போய் வேறு இன்ஜின் மாற்றினால்தான் கார் ஓடும் எனில், அது நிரந்தரச் செயலிழப்பு!

ரீனல் டி.பி-யாலும் பிறப்புறுப்புகள் தொடர்பான யானைக்கால் வியாதியாலும் தற்காலிகச் சிறுநீரகச் செயலிழப்பு ஏற்படும் என்று பார்த்தோம். இவை மட்டுமல்ல... மலேரியா ஜுரம், டெங்கு ஜீரம் போன்றவற்றால் கூட சிறுநீரகச் செயலிழப்பு ஏற்படும். இவற்றை உண்டாக்குகிற கிருமிகள், ரத்தத்தில் கலந்து உடலின் உள்ளே போய் சிறுநீரகத்தால் வடிகட்டப்படுவதால் இது ஏற்படுகிறது.

இவற்றில் எலி ஜுரம் என்கிற லெப்டோஸ்பைராஸிஸ் தொடர்பான ஒரு சம்பவம் நினைவுக்கு வருகிறது. தமிழ்நாட்டைச் சேர்ந்த முக்கியமான வி.ஐ.பி.அவர் டெல்லிக்குப் போயிருந்த சமயம் உடல் வலி, கடும் காய்ச்சல் என்று டெல்லியில் உள்ள பிரபல மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். வெறும் காய்ச்சல் என்று போனவருக்கு காய்ச்சல் அதிமாகி சிறுநீரகம் உள்பட ஒவ்வொன்றாக எல்லா உறுப்புகளும் செயலிழக்கத் துவங்கின.



வெளிநாட்டு மருத்துவர்களிடம் எல்லாம் ஆலோசனை கேட்டார்கள். என்னென்னவோ பரிசோதனை செய்து பார்த்தும் காய்ச்சலுக்கான காரணத்தை அவர்களால் கண்டுபிடிக்கவே முடியவில்லை இதற்குள் சிறுநீரக, கல்லீரல் உள்பட நிறைய உறுப்புகள் செயலிழந்துவிட கோமா நிலைக்குப் போய்விட்டார்.

இந்த நேரத்தில் அவருக்கு எடுக்கப்பட்ட பரிசோதனைகள் பற்றி ஒரு செய்தித்தாளில் வாசித்த நான், லெப்டோஸ்பைராஸிஸ்க்கான டெஸ்ட்டை மட்டும் எடுக்க வில்லையே என்று என் உறவினரான ஒரு பெரிய மனிதரிடம் சொல்ல... இது டெல்லி மருத்துவமனைக்குத் தெரிவிக்கப்பட்டு, அவர்கள் அந்தப் பரிசோதனையை மேற்கொள்ள, அது நிஜமாகவே எலி ஜுரம் தான் என்பது தெரியவந்தது. ஆனால், இந்த விஷயத்தை கண்டுபிடித்து சிகிச்சை தருவதற்குள் அவர் உயிர் பிரிந்துவிட்டது.

அவ்வளவு பெரிய வி.ஐ.பி.க்கு எலி ஜுரம் வர வாய்ப்பிருக்கிறது என்று அங்குள்ள மருத்துவர்களால் யூகிக்க முடியவில்லை. காரணம், மருத்துவப் புத்தகங்களைப் பொறுத்த வரையில், லெப்டோஸ்பைராஸிஸ் என்பது கழிவுநீரகற்றும் தொழிலாளர்களுக்கு மட்டுமே வரக்கூடிய வியாதி. வெறுங்காலில் சாக்கடைத் தண்ணீரை மிதிக்கும்போது, கழிவுநீரில் இருக்கக்கூடிய லெப்டோஸ்பைரா என்கிற கிருமி (எலியின் சிறுநீரில் உள்ள இந்தக் கிருமி பல மாதங்களுக்குக்கூடத் தேங்கிய நீரில் உயிர் வாழ்கிறது). காலில் ஏதேனும் சிறுகாயம் இருந்தால் கூட அதன்வழியே புகுந்து ரத்த நாளங்களின் வழியே உடலுக்குள் நுழைந்துவிடுவதால் ஏற்படுக்கூடிய வியாதி இது.

தண்ணீரைக் காய்ச்சாமல் குடிப்பதாலும், இந்தக் கிருமி நம் உடலுக்குள் போகிறது. தவிர, சரியாக வேக வைக்காத எலிக் கறியைச் சாப்பிட்டாலும் இந்த எலி ஜுரம் வரலாம். ஒரு மனிதரிடமிருந்து இன்னொருவருக்குப் பரவாது. எனவேதான் காரிலேயே போய், காரிலேயே வருகிற ஒருவருக்கு இப்படி ஒரு வியாதி வரமுடியும் என்று அவர்களுக்குத் தோன்றவில்லை.

அவர்கள் தமிழ்நாட்டுக்காரர் என்பதாலும் நம் ஊரில் காரில் போகிறவராயிருந்தாலும் சாக்கடைத் தண்ணீரைக் தவிர்க்க முடியாது என்பதாலும் தான் அவருக்கு அந்த வியாதி இருக்குமோ என்று என்னால் சந்தேகிக்க முடிந்தது. தவிர, அவர் அட்மிட் ஆவதற்கு சில தினங்கள் முன்தான் அந்தமானுக்குப் போய்த் திரும்பியிருந்தார். அங்கே இந்த வியாதிக்கான சாத்தியக்கூறு அதிகம். இந்த வியாதிக்கு அந்தமான் வியாதி என்ற ஒரு பெயரும் உண்டு.

ஒரு மழை பெய்தாலே கழிவுநீர் மழைநீருடன் கலந்துவிடுகிற சென்னை போன்ற ஊர்களில் எலி ஜுரத்தால் பாதிக்கப்படுகிறவர்கள் அதிகம். குறிப்பாக, எலிகள் வாழும் வயல்கள் நிறைந்த போரூர் பகுதியில் இப்படியான நோயாளிகள் எண்ணிக்கை அதிகம்.

மழை நாட்களில் ஷுக்களைக் கையில் எடுத்துக்கொண்டு அவசரமாக அலுவலகம் போகிறவர்கள், பைகளோடு ஷுக்களையும் ஏந்திக்கொண்டு பள்ளிக்கூடம் போகிற குழந்தைகள் என்று நம் மக்கள் மழை நேரத்தில் காலணிகளை உபயோகிப்பதேயில்லை. அது மிகப்பெரிய தவறு.

அந்தக்கால போலீஸ்காரர்கள் உபயோகித்த முட்டி வரைக்குமான ரப்பர் ஷுக்கள்தான் மழைக்கேற்ற பாதுகாப்பான கேடயங்கள். அவை இல்லையென்றாலும் மழை நேரத்தில் கண்டிப்பாக சாதாரண ஷுக்களையாவது உபயோகிக்க வேண்டும்.

காய்ச்சல், உடல்வலியுடன் மஞ்சள்காமாலையும் இருந்து கண்கள் மஞ்சளாவதற்குப் பதில் சிவந்திருந்தல் அது நிச்சயம் எலி ஜுரம்தான். தவிர, காய்ச்சலுடன் பயரங்கரமான தலைவலி, ரத்த இருமல், ரத்த வாந்தி இருந்தாலும் அது எலி ஜுரமாக இருக்கலாம், எலி ஜுரத்தால் தற்காலிகமாகச் சிறுநீரகம் செயல் இழந்தவர்களை உடனடியாகக் கவனித்து எலி ஜுரத்துக்கான சிகிச்சையளித்து விட்டாலே சிறுநீரகத்தையும் நோயாளியையும் காப்பாற்றி விடலாம்.

# நாடார் மறுமலர்ச்சி

**நாடார்களுக்கு எதிரான கலவரங்கள்**
**சிவகாசிக் கொள்ளையும், நாடார் சமாளிப்பும்**

அறிவித்தப்படி, ஜூன் 6இல் மறவர்களின் தலைமையில் ஏனைய ஜாதியினர் சிவகாசியின் மீது படையெடுத்து வந்தனர். மேற்குப்புற காவல் நிலையத்தில் 20 போலீஸாரே இருந்தனர். வந்திருந்ததோ 4000 கொள்ளையர்கள். கத்தி, அரிவாள், துப்பாக்கி போன்ற ஆயுதங்களை வைத்திருந்தனர். அவர்கள் 20 போலீஸின் துப்பாக்கிக்குப் பயப்படவில்லை. இதற்கிடையில் மற்ற பக்கங்களிலிருந்தும் கொள்ளையர்கள் வந்து சூழவும், போலீஸார் காவல் நிலையத்திற்குள் ஓடி விட்டனர். ஸ்ரீவில்லிபுத்தூர் மாவட்ட மாஜிஸ்ரேட்டுக்கு, துணை மாஜிஸ்ரேட் இதனை காலை 9 மணிக்கு தந்தியில் தெரிவித்தார். இன்னும் 2 மணி நேரத்தில் வருவதாக மதியம் 1 மணிக்கு அவர் பதில் அனுப்பினார். அதற்குள், கொள்ளையர்கள் சிவகாசிக்குள் நுழைந்து தீயிட்டு, கொள்ளையிட்டு, நாடார்களைக் கொன்றனர். சிவகாசி மயானமானபின், மாலை 4 மணிக்கு மாவட்ட போலீஸ் அதிகாரியுடன், ஸ்காட் வந்தார். கொள்ளையர்கள் 886 நாடார் வீடுகளை எரித்து, பல லட்ச ரூபாய் சொத்துக்களை அழித்து 200 நாடார்களைக் கொன்று விட்டுச் சென்றிருந்தனர்.

இந்த கொள்ளையின்போது, நாடார்கள் எதிர்சண்டை போட்டனர். சிவகாசியின் தெற்கு, கிழக்குப் பகுதிகளில் நாடார்கள் அதிகம். அங்கு, நாடார் பெண்களைப் பாதுகாப்பாக வைத்துவிட்டு, தங்களுடைய மொட்டை மாடிகளை பெரும் பலகைகளால் இணைத்து, கொதிக்கும் எண்ணெய், மிளகாய்ப் பொடி, துப்பாக்கி இவற்றை பயன்படுத்தி நாடார்கள், கொள்ளையர்களை எதிர்த்தனர். இதில் 25 கொள்ளையர்கள் கொல்லப்பட்டனர். சிவகாசி முற்றிலுமாக அழிக்கப்பட்டால் எல்லா நாடார்களும் (பெண்கள் உட்பட) தற்கொலை செய்து கொள்வதாக இருந்ததாம். ஆனால், சிவகாசி நாடார்கள் ஓரளவு காப்பாற்றிக் கொண்டனர். அரசாங்கத்தின் எந்த உதவியுமின்றி கொள்ளையர்களைத் தாங்களே சமாளித்து விரட்டினர்.

**தொடர்ந்து நடந்த கொள்ளைகள்**

சிவகாசியைக் கொள்ளையடித்தபின், அவர்கள் சிறுசிறுக் குழுக்களாகப் பிரிந்து, நாலாப்பக்கங்களிலும் சென்று, கிராம நாடார்களைக் கொள்ளையிட்டனர். இந்த கொள்ளைகள் மேலும் 3 வாரங்கள் நீடித்தன. ஆரம்பத்தில் கிறிஸ்தவ நாடார்களைத் தாக்காமல் விட்டு வைத்த கொள்ளையர்கள், பிறகு அவர்களையும் தாக்கினர். தென்காசி, செங்கோட்டை வரையிலுள்ள 150 கிராமங்களில் உள்ள 2000 நாடார் வீடுகளை எரித்து, 23 நாடார்களை கொன்று 2 லட்சம் மதிப்புள்ள நாடார் சொத்துக்களை அழித்தனர். ஆரம்பத்தில் நாடார்களுக்கு பாதுகாப்புத் தர தவறிய ஆங்கிலேய அரசு, முடிவில் ராணுவத்தைப் பயன்படுத்தி கொள்ளையைக் கட்டுப்படுத்தியது.

கொள்ளையர்களுக்கு எதிராக நாடார்கள் பல வழக்குகள் போட்டனர். கொள்ளையர்களுக்குத் தூபம் போட்ட பல பிராமணர்கள், விசாரணையின்போது தாங்கள் குற்றமற்றவர்கள் எனக்கூறி தப்பித்துக் கொண்டனர். 840 கொள்ளையர் மீது குற்றம் நிரூபணம் ஆயிற்று. 7 பேருக்கு தூக்குத் தண்டனை, 6 பேருக்கு நாடு கடத்தல், 527 பேருக்கு 12 வருடம் முதல் 3 மாதம் வரையிலான சிறை, மீதிப்பேருக்கு அபராதம் என்று தண்டனை வழங்கப்பட்டது.

இந்த காலக்கட்டத்தில் சிவகாசி, அருப்புக்கோட்டை, வத்தராயிருப்பு, ஸ்ரீவில்லிபுத்தூர், போன்ற பகுதிகளிலிருந்து குடிபெயர்ந்து ஓடி திண்டுக்கல், சேலம், திருச்சி, புதுக்கோட்டை, கோவை முதலான பகுதிகளுக்குச் சென்று தஞ்சம் புகுந்த நாடார்கள் ஏராளம். இவர்களின் பூர்வீகத்தையும், அங்கிருந்து குடிபெயர்ந்து வந்த காலக்கட்டத்தையும் அறியும்போது, சிவகாசிக் கொள்ளைக் கலவரங்கள் முன்னுக்கு வருகின்றன. இவர்களுடைய குலதெய்வங்கள் வத்தராயிருப்பு, சிவகாசி, அருப்புக்கோட்டை முதலான ஊர்களைச் சுற்றிய கிராமங்களில் உறைவதாகக் கருதி, வருடாவருடம் சென்று வருகின்றனர். 1557க்குப் பின், நாடார்கள் இந்த கலவரங்களின் போது ஏனைய ஜாதியினரால் விரட்டியடிக்கப்பட்டார்கள். இந்த தொடர் கொள்ளையின் போது நாடார்களுக்கு ஏற்பட்ட உயிர்சேதமும் பொருட்சேதமும் ஏராளம். (தொடரும்)

# நாடார் முரசு பிறந்த கதை

"சாதிகள் இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின்- மேதினியில்
இட்டார் பெரியார் இடாதோர் இழிகுலத்தோர்
பட்டாங்கில் உள்ளபடி..... இது ஔவையார் அந்த காலத்திலேயே ஜாதிகள் இருந்தாகவும் பிரச்சனை இருந்ததாகவும் நன்றாகவே பாடி தெரிவித்திருக்கிறார். அது போல ஜாதிகள் இல்லையடி பாப்பா என்று முண்டாசு கவிஞரும் பாடி ஜாதிகளின் வலுவான தன்மையை பற்றி பாடியுள்ளார். ஆக காலா காலமாக சாதிகள் இருக்கத்தான் செய்தது. கலவரங்களும் இருக்கத்தான் செய்தது. இருப்பினும் இவையெல்லாம் சமுதாய நாகரீகத்திற்கு நல்லதல்ல ஆகவே தான் பல பெரியவர்கள் சமுதாயநல்லிணக்கணம் தேவை என்று பாடுப்பட்டிருக்கிறார்கள். அந்த வகையில் அந்த காலத்தில் வடக்கன்குளத்தில் பல சாதியினர் இருந்தாலும் அவரவர் வேலையை பார்த்துக் கொண்டு நல்லிணக்கமாகவே வாழ்ந்தனர். நாடார்கள் அதிகமாக இருந்ததால் அனேகமாக மிக உழைப்பாளியாகவும் நல்ல செல்வந்தர்களாகவும் இருந்ததால் அனைவரும் நல்லிணக்கமாகவே வாழ்ந்தனர்.

ஒவ்வொரு குடும்பத்திலும், வண்ணார் சாதியினரும், நாவிதர் சாதியினரும் முக்கிய உதவி ஜாதியினராகவும் இருந்தனர். ஒவ்வொரு குடும்பத்துக்கும் குறிப்பிட்ட வண்ணார்தான் தொடர்ச்சியாக மாறாமல் சேவை செய்து வருவர் அந்த வகையில் முட்டி என்ற வள்ளி தான் எங்கள் குடும்பத்தோடு சேர்ந்தவர்கள் ஆவார். வண்ணார்கள் பல வீடுகளில் துணி எடுத்தாலும், அவற்றையெல்லாம் ஒன்றாக மூட்டையாக கட்டி வெள்ளாவி வைத்து அவித்து துவைத்து பெட்டி போட்டு சரியாக அந்தந்த வீடுகளுக்கு கொண்டு பட்டுவாடா செய்துவிடுவார்கள். இது எப்படி சாத்தியமாயிற்று. ஒவ்வொரு குடும்பத்தார் துணிகளிலும் அவர்கள் ஒரு அடையாளம் போடுவார்கள். அதற்கு வண்ணான் குறி என்பார்கள். துணிகளில் ஏதாவது ஒரு பகுதியில் ஒரு மரகொட்டையில் அந்த பால் எடுத்து அடையாள குறியிடுவார்கள். அந்த அடையாளம் அழியவே அழியாது. அந்த குறியின் படியே மிகவும் சரியாக அந்த வீட்டில் கொண்டு பட்டுவாடா செய்துவிடுவார்கள். ஒவ்வொரு வீட்டிலும் வண்ணான் கணக்கு என்று ஒரு நோட்டு வைத்திருப்பார்கள். அந்த கணக்கு படி மிகவும் சரியாக அவரவர் துணி அவரவர்களுக்கு வந்து சேர்ந்துவிடும் இந்த வண்ணார் குறி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. ஒரு சில கொலை வழக்குகள் கூட இந்த வண்ணான் குறியினால் தான் கொலையாளிகளை காவல்துறையினர் கண்டுபிடித்து விடுவார்கள். அந்த வகையில் வண்ணார்கள் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவர்கள் என்பது தெரியவரும் குடும்பத்தில் நடக்கும் திருமணங்களில் பல காரியங்களில் வண்ணார்கள் ஈடுபடுவார்கள். எங்கள் ஊரில் அதிகமாக கிறிஸ்தவர்கள் இருப்பதால் திருமணங்கள் தேவாலயத்தில் தான் நடைபெறும் அந்த பெண்ணும் மாப்பிள்ளையும் திருமணம் முடிந்ததும் ஊர்வலமாக ரதம் போல் அலங்காரம் செய்த வண்டியில் தான் அழைத்து வருவார்கள். அவர்கள் நடந்துவரும் பாதையெல்லாம் கம்பளம் விரித்து மேளதாளத்தோடு வருபவர்களுக்கு வண்ணார்கள்தான் பொறுப்பு அந்த நடைபாதை விரிப்பது மாத்து துணியென்று பெயர் இப்போதெல்லாம் அந்த முறை இருப்பதாக தெரியவில்லை அதுபோல் அந்த காலத்தில் கல்யாணமண்டபங்கள் கிடையாது. வீட்டின் முன் பந்தல் போடப்பட்டிருப்பார்கள். அந்த பந்தல் அலங்காரத்துக்கு பந்தல் மேல்கூரையில் துணியால் மறைத்து அலங்காரம் செய்வதே வண்ணார்கள்தான். அந்த வகையில் வண்ணார்களுக்கு ஒவ்வொரு குடும்பத்துக்குமாக முக்கியமானவர்களாயிருந்தனர். - தொடரும்............

## இந்து நாடார் மணமகள் தேவை.

சொந்தஊர்:திருச்செந்தூர், (ஆறுமுகநேரி), இருப்பிடம்-சென்னை, சொந்தவீடு, பிறந்ததேதி-02.12.1992, வயது-29, நிறம்-மாநிறம், உயரம்-5.8, ராசி-கும்பம், நட்சத்திரம்-சதயம், படிப்பு-MBA., Project Management., மாதவருமானம்-60,000/-, இந்த மணமகனுக்கு, டிகிரி முடித்த மணமகள் தேவை, 7358260567, 9600701927, File No:JL-583-B.

| | | | |
|---|---|---|---|
| | | கேது | |
| சந் | இராசி | | செவ் |
| சனி | | | |
| சுக் | சூரி ராகு | புத மாந் | லக் குரு |

| | | | |
|---|---|---|---|
| ராகு | சனி | புத | குரு |
| | அம்சம் | | செவ் |
| லக் சந் | | | |
| | சூரி சுக் | | கேது |

## இந்து நாடார் மணமகள் தேவை.

சொந்தஊர்:இடைச்சிவிளை, தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-13.5.1990, வயது-33, நிறம்-மாநிறம், உயரம்-5.5, பெயர் ராசி பார்க்கவும், படிப்பு-5th Std., வேலை-இரும்பு கடை சுயதொழில், மாதவருமானம்-40,000 பெறும் இந்த மணமகனுக்கு, நல்ல குணமுள்ள மணமகள் தேவை. தொடர்புக்கு:9841479267, 9841479269, File No:JL-450-B.

## இந்து நாடார் மணமகள் தேவை

சொந்தஊர்:ஆறுமுகநேரி, தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-3.10.1997, நிறம்-மாநிறம், உயரம்-5.9, ராசி-துலாம், நட்சத்திரம்-சித்திரை, படிப்பு-B.E., (ECE)., தொழில்: Service Engineer in Bizten Enterprises., மாதவருமானம்-50,000 பெறும் சென்னையில் சொந்தவீடு கடை, காலி மனை (அப்பா:தொழில் மாதவருமானம்-1,25,000) இந்த மணமகனுக்கு, டிகிரி படித்த நல்ல வேலையிலுள்ள மணமகள் தேவை. 9841140288, File No:JL-386-B.

| | | | |
|---|---|---|---|
| சனி | | | |
| லக் கேது | இராசி | | |
| குரு | | | ராகு |
| | செவ் சுக் | சந் | சூரி புத |

| | | | |
|---|---|---|---|
| புத | | சூரி கே | குரு |
| சனி | அம்சம் | | சுக் |
| லக் | | | |
| | சந் ராகு | | செவ் |

## இந்து நாடார் மணமகள் தேவை

சொந்தஊர்:வதுவார்பட்டி, (விருதுநகர் மாவட்டம்), இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-26.12.1985, காலை-8.55, நிறம்-சிவப்பு, உயரம்-5.7, ராசி-ரிஷபம், நட்சத்திரம்-மிருகசீரிசம், படிப்பு-B.SC., Ashok Leyland (Foundry Division)., மாதவருமானம்-65,000 இந்த மணமகனுக்கு, டிகிரி படித்த மணமகள் தேவை. தொடர்புக்கு:9841329436, 9043530845, 7200403962.

| | | | |
|---|---|---|---|
| | ராகு | சந் | |
| | இராசி | | |
| லக் குரு | | | |
| சூரி சுக் | சனி புத | சந் | |

| | | | |
|---|---|---|---|
| | | லக் சுக் | சூரி |
| செவ் | அம்சம் | | ராகு |
| புத கேது | | | குரு |
| | | சனி | சந்தி |

## இந்து நாடார் மணமகள் தேவை.

சொந்தஊர்:ராமநாதபுரம் மாவட்டம், பெருநாழி, இருப்பிடம்-சென்னை, சொந்தவீடு உள்ளது, பிறந்ததேதி-1.8.1989, வயது-34, நிறம்-மாநிறம், உயரம்-174செ.மீ, ராசி-கடகம், நட்சத்திரம்-பூசம், படிப்பு-EEE., Dip., Superviser., ஓசூர், மாதவருமானம்-30,000/-, இந்த மணமகனுக்கு, நல்ல குணமுள்ள மணமகன் தேவை. 9842859396, 9940522136. File No:JL-496-B.

| | | | |
|---|---|---|---|
| | | | குரு |
| ராகு | இராசி | | சூரிசந் புத |
| | | | செசுக் கேது |
| சனி (வ) | மாந் | லக் | |

| | | | |
|---|---|---|---|
| புத | கேது | செ | லக் |
| | அம்சம் | | மாந் |
| | | | சுக் சனி(வ) |
| | சூரி குரு | சந் ராகு | |

## இந்து நாடார் மணமகள் தேவை.

சொந்தஊர்:ஏரல், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-2.1.1988, நிறம்-சிவப்பு, உயரம்-6அடி, ராசி-மிதுனம், நட்சத்திரம்-மிருகசீரிஷம், படிப்பு-+2., Working in Helmork heater Company., மாதவருமானம்-40,000 பெறும் இந்த மணமகனுக்கு, நல்ல குணமுள்ள குடும்பபாங்கான மணமகள் தேவை. தொடர்புக்கு:9941879470, 9790899979, File No:JL-77-B.

| | | | |
|---|---|---|---|
| வியா ரா | | | சந் |
| | இராசி | | |
| சுக்பு | | | |
| சூரி | சனி செவ் | | கேது லக் |

| | | | |
|---|---|---|---|
| வியா | | | சுக் |
| சனி | அம்சம் | | செவ் ரா |
| புத கேது | | | லக் |
| | | சந் | சூரி |

Free website for Matrimonial website : www.indianadarmurasu.com

## மாப்பிள்ளை பகுதி. (ஆண்)



# நாடார் நவீன சுயம் வரம்



### இந்து நாடார் மணமகள் தேவை

சொந்தஊர்:இடைச்சிவிளை, தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-பம்மல், சென்னை-75, பிறந்ததேதி-1.1.1989, பிறந்தநேரம்:இரவு-8.47, ராசி-துலாம், நட்சத்திரம்-சித்திரை 4ம் பாதம், நிறம்-மாநிறம், உயரம்-5.6, படிப்பு-B.E., வேலை-நிறுவனர் Industrial Partner சென்னையில் நான்கு கிளைகளுடன் 20 பேர் பணிபுரியும் நிறுவனம் 2T MAXO Oil உற்பத்தியாளர், Anobond Vaivoline - Official DistributorShip இந்த மணமகனுக்கு, படித்த நல்ல குடும்பபாங்கான மணமகள் தேவை. 9344069089, 7550069089.

| | | | |
|---|---|---|---|
| | செ | வியா | |
| ராகு | இராசி | | லக் |
| புத | | | கேது |
| சூ சனி | சுக் | சந் | |

| | | | |
|---|---|---|---|
| | செ | சனி | |
| லக்பு வியா | அம்சம் | | கேது |
| ராகு சுக் | | | |
| | சந் | சூரி | |

### இந்து நாடார் மணமகள் தேவை

சொந்தஊர்:தண்டுப்பத்து, மேலதெரு, இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-2.2.1986, நிறம்-மாநிறம், உயரம்-5.6அடி, ராசி-துலாம், நட்சத்திரம்-சுவாதி, படிப்பு-B.E.,(Mech)., வேலை-Sri Vasantha Pepot, Hardware., மாதவருமானம்-70,000 பெறும் சொந்தவீடு உள்ளது. இந்த மணமகனுக்கு, நல்ல குணமுள்ள மணமகள் தேவை. 90031885888, 9884126887, 9600068680.

| | | | |
|---|---|---|---|
| | ராகு | | |
| லக் வியா | இராசி | | |
| சுபுத சூரி | | | |
| | செவ் சனி | கேது சுக் | |

| | | | |
|---|---|---|---|
| சந் | | | சூரி ராகு |
| | அம்சம் | | சுக் |
| | | | செவ் |
| கேது | | வியா லக் | புத சனி |

### இந்து நாடார் மணமகள் தேவை

சொந்தஊர்:வள்ளிவிளை, (பண்டாரவிளை) தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, கொளத்தூர், பிறந்ததேதி-21.7.1993, ராசி-சிம்மம், நட்சத்திரம்-மகம், நிறம்-மாநிறம், உயரம்-5.7, படிப்பு-B.Tech., I.T., Accenture solution., (Software Engineer., மாதவருமானம்-1,00,000/- சென்னையில் சொந்தவீடு காலிமனை உள்ளது., (ஊரில் சொந்தவீடு உள்ளது). இந்த மணமகனுக்கு மணமகள் தேவை. 9841755188. 9884125545, File No:AT-710-B.

| | | | |
|---|---|---|---|
| | | சுக் கேது | புத |
| | இராசி | | சூரி |
| சனி | | | செவ் சந் |
| லக் | ராகு | | வியா |

| | | | |
|---|---|---|---|
| புத | சந் | வியா கே | |
| | அம்சம் | | |
| | | | சூரிசுக் சனி |
| லக் | ராகு | செ | |

### இந்து நாடார் மணமகள் தேவை

சொந்தஊர்:சித்தன்குடியிருப்பு, தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை,மீனம்பாக்கம், பிறந்ததேதி-29.4.1993, ராசி-கடகம், நட்சத்திரம்-பூசம், நிறம்-மாநிறம், உயரம்-5.5, படிப்பு-B.Sc., Computer Science, Air India (Chennai Airport)., மாதவருமானம்-40,000/- சென்னையில் சொந்தவீடு வாடகை வருமானம்-40,000 உள்ளது, பெறும் இந்த மணமகனுக்கு, நன்கு படித்த நல்ல குணமுள்ள மணமகள் தேவை. 7397412321, 8778235552, File No:JL-466-B.

| | | | |
|---|---|---|---|
| சுக் | சூரி புத | கேது | லக் |
| | இராசி | | சந் செவ் |
| சனி | | | |
| | ராகு | | வியா |

| | | | |
|---|---|---|---|
| | | வியா | புத கேது |
| | அம்சம் | | |
| | | | சூரிசெ சனி |
| ராகு | சுக் | லக் சந் | |




## PTN திருமண தகவல் நிலையம்

நோயாளிகள் மற்றும் உடல்நலம் சார்ந்த குறைபாடுகள் உள்ளவர்களுக்கான பிரத்யேக திருமண தகவல் நிலையம் பொருத்தமான வரன் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்

குமார் செல்: 90437 44793

எண். 3, எழில் நகர், சேலையூர், சென்னை -73

## இந்து நாடார் மணமகள் தேவை.

சொந்தஊர்-காட்டுநாய்க்கன்பட்டி, தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-நெசப்பாக்கம்,சென்னை, பிறந்ததேதி-10.9.1993, நிறம்-சிவப்பு, உயரம்-168செ.மீ, ராசி-மிதுனம், நட்சத்திரம்-திருவாதிரை 1ம் பாதம், படிப்பு-B.E., சொந்தகடை, இரும்பு கடை சென்னையில் சொந்தவீடு உள்ளது. மாதவருமானம்-80,000 பெறும் இந்தமணமகனுக்கு, நல்ல குணமுள்ள டிகிரி படித்த பெண் தேவை.9841858634, 9384658634, File No:JL-244-B.

| | | | |
|---|---|---|---|
| | | கேது | சந் |
| | இராசி | | சுக் |
| சனி (வ) | | | சூரி |
| | லக் ராகு | | செபு குரு(வி) |

| | | | |
|---|---|---|---|
| லக் புத | கேது | | |
| | அம்சம் | | சனி (வ) |
| சுக் | | | செகுரு வியா |
| சந் | | சூரி ராகு | |

## இந்து நாடார் மணமகள் தேவை.

சொந்தஊர்:திருச்செந்தூர், தளவாய்புரம், இருப்பிடம்-சென்னை, சென்னையில் பிளாட் வீடு உள்ளது. பிறந்ததேதி-27.9.1989, நிறம்-மாநிறம், உயரம்-5.11, ராசி-சிம்மம், நட்சத்திரம்-மகம், படிப்பு-MBA., வேலை-Accenture, மாதவருமானம்-45,000பெறும் இந்த மணமகனுக்கு, நல்ல குணமுள்ள பெண் தேவை. தொடர்புக்கு:8220208893, 9677105688. File No:AT-577-B.

| | | | |
|---|---|---|---|
| | | | வியா |
| | இராசி | | கேது லக் |
| ராகு | | | புத சந் |
| சனி | | சுக் | சூ செவ் |

| | | | |
|---|---|---|---|
| கேசூ செவ் | சுக் | சந் | சனி |
| வியா லக் | அம்சம் | | |
| | | | |
| | புத | | ராகு |

## இந்து நாடார் மணமகள் தேவை.

சொந்தஊர்:மேலஆழ்வார்தோப்பு, தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-காஞ்சிபுரம்,பிறந்ததேதி-5.1.1995, வயது-28, நிறம்-மாநிறம், உயரம்-5.8, ராசி-கும்பம், நட்சத்திரம்-சதயம், படிப்பு-B.com.,MBA., B.N.Y., பல்லாவரம், மாதவருமானம்-60,000 பெறும் இந்த மணமகனுக்கு, படித்த நல்ல குணமுள்ள இரண்டாம் இடத்தில் கேது உள்ளவர்கள் அணுகவும், 9445379842, 8610708075, File No:JL-186-B.

| | | | |
|---|---|---|---|
| | கேது | | |
| சந் சனி | இராசி | | |
| புத | | | செவ் |
| சூரி | சுக் குரு | ராகு | லக் |

| | | | |
|---|---|---|---|
| புத | | லக் செவ் | |
| சந் ராகு | அம்சம் | | |
| | | | சுக் கேது |
| | சனி | சூரி குரு | |

## இந்து நாடார் மணமகள் தேவை.

சொந்தஊர்:திருமலையப்பபுரம், சோனங்கன்விளை, தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, வில்லிவாக்கம், பிறந்ததேதி-27.5.1996, நிறம்-மாநிறம், உயரம்-5.10, ராசி-கன்னி, நட்சத்திரம்-உத்திரம், படிப்பு-B.E., Arch.,M.BEM, வேலை-Architect., மாதவருமானம்-55,000/- இந்த மணமகனுக்கு, படித்த நல்ல குணமுள்ள குடும்ப பெண் தேவை. 9688898777, 7299967895, File No:JL-272-B.

| | | | |
|---|---|---|---|
| சனி கே | செ புத | சூரி | சுக் |
| | இராசி | | |
| | | | |
| ராசி | | லக் | சந் ரா |

| | | | |
|---|---|---|---|
| | சூரி | | ராகு |
| சந் | அம்சம் | | சனி |
| சுக் | | | |
| லக் கேது | செவ் வியா | | புத |

## இந்து நாடார் மணமகள் தேவை

சொந்தஊர்:குருந்தான்விளை, தூத்துக்குடி மாவட்டம் இருப்பிடம்-திருவள்ளூர், பிறந்ததேதி-10.1.1991, நிறம்-மாநிறம், உயரம்-5.8, ராசி-துலாம், நட்சத்திரம்-சுவாதி 4ம் பாதம், படிப்பு-M.A., M.Phil., H Markets.com (Roll Manager) Chennai., மாதவருமானம்-30,000/- இந்த மணமகனுக்கு, படித்து நல்ல குணமுள்ள மணமகள் தேவை. தொடர்புக்கு:7200366727, 7299926727, File No:JL-231-B

| | | | |
|---|---|---|---|
| | | செ | |
| | இராசி | | கே வியா |
| லக்சுக் ராகு | | | |
| புதகு சனி | | சந் | |

| | | | |
|---|---|---|---|
| சுக் செ | புத சுக் | | லக் |
| ரா | அம்சம் | | |
| | | | கேது |
| வியா | சூரி சனி | | |


நாடார் திருமணச் சேவையில் 19 ஆம் ஆண்டில் கைராசியான

**நாடார் விவாகம் திருமணத் தகவலகம்**



36, காந்தித்தெரு, பூவரசூர், ஆறுமுகனேரி-628 202

செல்:9176051116, 9360539833. 04639-282222. 04639 296108.

nadar vivaham matrimony / www.nadarvivaham.in/

புரோக்கர் கமிசன் இல்லை. காலை:9:30 -12.30 மாலை 3.00 -6.00 ஞாயிறு விடுமுறை.

இணையதளத்தில் பதிவுக்கட்டணம் இலவசம்.

**தென்றல் திருமணத் தகவலகம்**

பதிவுக் கட்டணம்:ரூ.3000 /சேவை கட்டணம் உண்டு.

முனைவர் த.த.தவசிமுத்து M.A., Phd.,

## மாப்பிள்ளை பகுதி (ஆண்) இந்திய நாடார் முரசு இலவச சேவை

| எண் | ஊர் | வயது | கல்வித்தகுதி | தேவையானதகுதி | உயரம் | செல்நம்பர் | இராசி-நட்சத்திரம் | விவரம் | பெண் உரிமை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| இந்து நாடார் பகுதி | | | | | | | | | |
| 1. | நெல்லை | 37 | B.Com | டிகிரிபடித்தபெண் | 5.4 | 9840638647 | கடகம்-ஆயில்யம் | JL40 | 50பவுன்+ |
| 2. | திருநெல்வேலி | 27 | MCA,MBA,M.Sc | Software Job | 5.9 | 9940348084 | துலாம்-விசாகம்3 | JL41 | நேரில் |
| 3. | தூத்துக்குடி | 36 | B.Tech | டிகிரிபடித்துவேலை | 5.7 | 9940208500 | மகரம்-திருவோணம் | JL42 | நேரில் |
| 4 | திசையன்விளை | 29 | B.E | நல்லகுடும்பம்படித்துவேலை | 5.7 | 9840884094 | மகரம்-உத்திராடம்4 | JL43 | நேரில் |
| 5 | விருதுநகர் | 27 | Catering | நல்லகுணமுள்ள | 5.5 | 6374384636 | மீனம்-ரேவதி | JL44 | நேரில் |
| 6 | திருநெல்வேலி | 28 | B.Tech | படித்துவேலைநல்லகுணம் | 5.5 | 7550191472 | கும்பம்-புரட்டாதி | JL45 | 45பவுன் |
| 7 | தூத்துக்குடி | 30 | B.E | படித்தபெண் | 5.7 | 7904363492 | பரணி-மேஷம் | JL46 | நேரில் |
| 8 | தூத்துக்குடி | 31 | B.E | வசதியுள்ள அழகான | 5.10 | 9841078986 | துலாம்-விசாகம் | JL47 | 100-125 |
| 9 | அய்யம்பட்டி | 31 | B.Sc | படித்தபெண்-மறுமணம் | 5.7 | 6382478972 | துலாம்-சுவாதி4 | JL48 | மறுமணம் |
| 10 | ஆலங்குளம் | 38 | M.A | மறுமணம்-குழந்தைஇல்லாத | 5.7 | 9941768558 | மீனம்உத்திராடத்தி | JL49 | மறுமணம் |
| 11 | விருதுநகர் | 35 | B.Com | படித்தகுணமுள்ள | - | 9498065765 | மேஷம்-அஸ்வினி | JL50 | நேரில் |
| 12 | தூத்துக்குடி | 35 | 12th | படித்தகுடும்பபாங்கான | 5.5 | 9789888576 | கன்னி-சித்திரை | JL51 | நேரில் |
| 13 | ஸ்ரீவல்லிபுத்தூர் | 28 | ITI A/CMechanic | டிகிரிபடித்த | 5.8 | 9962059653 | ரிஷபம்-கிருத்திகை4 | JL52 | நேரில் |
| 14 | அருப்புக்கோட்டை | 25 | B.E-Mech | நல்லகுணமுள்ள | 183 | 9444877703 | மீனம்-ரேவதி | JL53 | நேரில் |
| 15 | நாலுமாவடி | 30 | MSW | படித்த | 5.7 | 9444418731 | புரட்டாதி-மீனம் | JL54 | நேரில் |
| 16 | மதுரை | 34 | B.E,MBA | மறுமணம்- | 6.1 | 9840552393 | கடகம்-ஆயில்யம் | JL55 | மறுமணம் |
| 17 | திருநெல்வேலி | 26 | B.E | 11வயதுஆண்குழந்தை உள்ளது | 5.5 | 9444677194 | தனுசு-உத்திராடம் | JL56 | நேரில் |
| C.S.I.நாடார் | | | | | | | | | |
| 1 | தூத்துக்குடி | 30 | B.Sc | B.Eபடித்துவேலை படித்தகுணமுள்ள | 5.10 | சென்னை | 9962921604 | 464B | நேரில் |
| 2 | தூத்துக்குடி | 35 | 10th | நல்லகுணசாலி | 5.5 | சென்னை | 9176515871 | 465B | - |
| 3 | தூத்துக்குடி | 27 | Diploma | குணமுடைய | 5.7 | சென்னை | 9380226169 | 466B | - |
| 4 | திருநெல்வேலி | 24 | DMLT | படித்து வேலை | 5.7 | சென்னை | 9884759644 | 467B | - |
| 5 | திருநெல்வேலி | 30 | M.Sc | படித்த அழகான | 6 | சென்னை | 7708893641 | 468B | நேரில் |
| R.C.நாடார் | | | | | | | | | |
| 1 | நாகர்கோவில் | 26 | MBBS | டாக்டர் பெண் | 174 | சென்னை | 8300108960 | 503B | நேரில் |
| 2 | கன்னியாகுமரி | 26 | MBA,HDCM,B.Sc | படித்தகுணமுள்ள | 5.10 | சென்னை | 9551429443 | 486B | - |
| 3 | திருநெல்வேலி | 29 | B.Tech,MBA,M.Sc | படித்த பெண் | 172 | சென்னை | 9841787131 | 487B | நேரில் |
| 4 | தூத்துக்குடி | 36 | 12th | படித்த குடும்பபாங்கான | 5.5 | சென்னை | 9841104848 | 488B | நேரில் |


உவரி சுயம்புலிங்கசுவாமி துணை.

# கலைவாணி திருமணத்தகவல் நிலையம்

**உடனடியாக வரன் தேர்வு செய்து நிச்சயம் செய்ய குமரி மாவட்டம், நெல்லை, தூத்துக்குடி, சென்னை மற்றும் வெளிநாடுகள் என அனைத்து பகுதிகளிலும் உள்ள ஏராளமான இந்து, CSI, RC நாடார் வரன்கள் எங்களிடம் உள்ளது. வீட்டில் இருந்த படியே இணையதளம் வழியாக மணமக்களை தேர்வு செய்யும் வசதியும் உண்டு சேர்க்கவும்.**



**கலைவாணி திருமணத்தகவல் நிலையம்**
**என்.ஜி.ஒ.காலனி ஜங்சன், நாகர்கோவில்-629501.**
**கன்னியாகுமரி மாவட்டம்.**
**செல்:04652-259214, 9443282508, 9442382574, 9994372944. வாட்சப் நம்பர்:8344544302.**
**Email:ngo_kalaivani@yahoo.com.**

Rtn.P.**கணேசன்** **Website:www.kalaivanimatrimony.com**

## இந்து நாடார் மணமகள் தேவை

சொந்தஊர்:ஆறுமுகநேரி, இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-13.11.1998, நிறம்-சிவப்பு, உயரம்-5.11,ராசி-சிம்மம், நட்சத்திரம்-பூரம், படிப்பு-B.E., M.EC, சுயதொழில், மாதவருமானம்-1லட்சம், சொந்தவீடு வாடகை வருமானம் உண்டு. இந்த மணமகனுக்கு, படித்து நல்ல குணமான மணமகள் தேவை. தொடர்புக்கு:9381222247, 9382222247. File No:JL-299-B.

| | | | |
|---|---|---|---|
| சனி | | | லக் |
| குரு கே | இராசி | | |
| | | | செவ் ராசந் |
| | புத | சூரி சுக் | |

| | | | |
|---|---|---|---|
| | ராகு | குரு | சூரி சுக் |
| சனி | அம்சம் | | |
| | | | |
| செவ் | சந் | கேது லக் | புத மாந் |

## இந்து நாடார் மணமகள் தேவை.

சொந்தஊர்:காணியாழன்புதூர், சோனகன்விளை அருகில், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை-83, பிறந்ததேதி-8.12.1988, நிறம்-மாநிறம், உயரம்-5.6, ராசி-விருச்சிகம், நட்சத்திரம்-அனுஷம், படிப்பு-B.SC., வேலை-Techno Solutions (Computer Sales & Service), மாதவருமானம்-40,000 பெறும் இந்த மணமகனுக்கு, சொந்தவீடு உள்ளது. வாடகை வருமானம்-35,000 பெறும் நல்ல குடும்பபாங்கான பெண் தேவை. தொடர்புக்கு:8807333335, 8807333336, File No:JL-18-B.

| | | | |
|---|---|---|---|
| செவ் | | வியா | |
| ராகு | இராசி | | லக் |
| | | | கேது |
| சனி புத | சூரி சந் | சுக் மா | |

| | | | |
|---|---|---|---|
| | | சு பு சனி | |
| ரா ல வியா | அம்சம் | | |
| சூ செவ் | | | கேது |
| | சந் | | |

# இந்து நாடார் மணமகள் தேவை

சொந்தஊர்:தூத்துக்குடி மாவட்டம், ஏரல், பணிக்கநாடார் குடியிருப்பு, சென்னை வாழ் மணமகனிற்கு, பிளஸ் டூ படித்து தொழில் செய்யும் 34 வயது நிரம்பிய வரனிற்கு நற்குணமுடைய மணமகள் தேவை. உடன் பிறப்புகள் எல்லோரும் அதிகாரிகளாக உள்ளனர். சொந்தவீடு உண்டு. பெண் வீட்டாரிடம் எந்த எதிர்பார்ப்பும் இல்லை ஜாதகம் நன்னிலையில் உள்ளவர்கள் மட்டும் அணுகவும். தொலைபேசி எண்:9884216454(தந்தை), 8056989378(சகோதரி). File No:AT-44-B.

| | | | |
|---|---|---|---|
| சுக் | சூ பு ரா | அ லக் | |
| | இராசி | | |
| குரு | | | |
| | சந் | சனி கே | |

| | | | |
|---|---|---|---|
| | | அ பு சனிகே | |
| லக் | அம்சம் | | குரு |
| | | | |
| சுக் | ராகு | சூ | சந் |

## மறுமணம் R.C. கிறிஸ்தவ நாடார் மணமகள் தேவை.

சொந்தஊர்:நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, படிப்பு-MS., வேலை-USA., வயது-45, விவகாரத்து முடித்தவர். அமெரிக்காவில் சொந்தவீடு உள்ளது. நல்ல குடும்பம், எதிர்பார்ப்பு, USA வில் இருக்கும் குடும்பம் அல்லது USA செல்ல விருப்பமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும் தொடர்புக்கு:7373627729.

## இந்து நாடார் மணமகள் தேவை

சொந்தஊர்-சென்னை, இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-9.4.1992 வயது-31, நிறம்-மாநிறம், ராசி-மிதுனம், நட்சத்திரம்-திருவாதிரை, உயரம்-5.5, படிப்பு-B.Com., வேலை-Analyst (Maersk)., மாதவருமானம்-50,000 பெறும் இந்த மணமகனுக்கு, நன்கு படித்து நல்ல வேலை அல்லது வேலையில்லாத மணமகள் தேவை. தொடர்புக்கு:9566183018, 9941324881. File No:JL-525-B.

| | | | |
|---|---|---|---|
| சூரி சுக் | | லக் | சந் கேது |
| செவ் புத | இராசி | | |
| சனி | | | குரு |
| ராகு | | | |

| | | | |
|---|---|---|---|
| | | சனி | ராகு புத |
| சூரி செவ் | அம்சம் | | |
| சந் சுக் | | | குரு லக் |
| கேது | | | |

## இந்து நாடார் மணமகள் தேவை.

பெயர்:எஸ்.அருள்ராஜ், சொந்தஊர்:ஆறுமுகநேரி, தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, குன்றத்தூர், பிறந்ததேதி-15.7.1993, உயரம்-5.6, நிறம்-மாநிறம், ராசி-ரிஷபம், நட்சத்திரம்-கார்த்திகை 3-ம் பாதம், படிப்பு-DTT., (DW)., வேலை-SRF, தனியார் கம்பெனி, மாதவருமானம்-40,000/- பெறும் இந்த மணமகனுக்கு, சென்னையில் சொந்தஇடம் உள்ளது. படித்த நல்ல குணமுள்ள மணமகள் தேவை.9444502436, 9788647745. File No:JL-393-B.

| | | | |
|---|---|---|---|
| | | சந்சு கே | சூ பு |
| | இராசி | | |
| சனி | | | லக் செவ் |
| | ராகு | | வியா |

| | | | |
|---|---|---|---|
| | | விகே சுக் | சூ |
| சந் | அம்சம் | | |
| புத | | | சனி |
| | லக் ராகு | | செவ் |

## இந்து நாடார் மணமகள் தேவை

சொந்தஊர்-நாதன்கிணறு, திருச்செந்தூர் மாவட்டம், இருப்பிடம்-சென்னை, சென்னையில் சொந்தவீடு உள்ளது, வாடகைவருமானம்-70,000 பிறந்ததேதி-24.3.1993, நிறம்-மாநிறம், ராசி-மீனம், நட்சத்திரம்-ரேவதி, உயரம்-5.7, படிப்பு-B.Tech., MBILM (Australia)., வேலை-RRD Pvt LTD (Manager) Chennai., மாதவருமானம்-78,000 பெறும் இந்த மணமகனுக்கு, நன்கு படித்த பெண் தேவை. தொடர்புக்கு:9840191905, 9884778450, 9566088912 File No:AT-753-B.

| | | | |
|---|---|---|---|
| சந்சுக் சந் | | கேது | செவ் லக் |
| சனி புத | இராசி | | |
| | | | |
| | ராகு | | குரு |

| | | | |
|---|---|---|---|
| புத லக் | செவ் | | குரு |
| | அம்சம் | | கேது |
| ராசுக் சந் | | | |
| | | சனி சூரி | |

## இந்து நாடார் மணமகள் தேவை.

சொந்தஊர்:திருநெல்வேலி, பரன்குன்றாபுரம்,இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-26.7.1983, நேரம்:3.3pm., நிறம்-புதுநிறம், உயரம்-5.8, ராசி-மகரம், நட்சத்திரம்-அவிட்டம், படிப்பு-B.Com., B.L., வழக்கறிஞர், (Advocate Madras High Court)., மாதவருமானம்-65,000 பெறும் சொந்த இடம் உள்ளது, இந்த மணமகனுக்கு, மணமகள் தேவை.9380770858, 9840123788, 044-43528309.

| | | | |
|---|---|---|---|
| | | ராகு | செவ் |
| | இராசி | | சூரி புத |
| சந் | | | சுக் |
| | விகே லக் | சனி மா | |

| | | | |
|---|---|---|---|
| கேது லக் | | செ | மாந் |
| புத | அம்சம் | | |
| | | | சந் சுக் |
| | சனி | | சூவியா ராகு |

## இந்து நாடார் மணமகள் தேவை.

சொந்தஊர்:புன்னைசாத்தான்குறிச்சி, தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-13.2.1995, நேரம்-10.15am., உயரம்-5.11, நிறம்-மாநிறம், ராசி-கடகம், நட்சத்திரம்-புனர்பூசம், படிப்பு-B.Tech., I.T, வேலை-Xenobex Chennai., சென்னையில் சொந்தவீடு சொந்தகடை உள்ளது வாடகை வருமானம்-30,000, மாதவருமானம்-40,000 பெறும் இந்த மணமகனுக்கு, படித்து வேலையிலுள்ள அல்லது வேலைக்கு செல்லாத மணமகள் தேவை. 9381012377, JL-173-B.

| | | | |
|---|---|---|---|
| | லக் கேது | | மாந் |
| சனி சூரி | இராசி | | சந் செவ் |
| புத | | | |
| சுக் | குரு | ராகு | |

| | | | |
|---|---|---|---|
| செவ் சனிமா | புதன் | லக் | |
| ராகு | அம்சம் | | சந் |
| | | | சுக் கேது |
| குரு | | சூரி | |

## இந்து நாடார் மணமகள் தேவை

சொந்தஊர்:விருதுநகர் மாவட்டம், இருப்பிடம்-சென்னை-81, பிறந்ததேதி-29.08.1993, வயது-30, நிறம்-மாநிறம், உயரம்-, ராசி-மகரம், நட்சத்திரம்-திருவோணம் 1ஆம் பாதம், படிப்பு-B.Com., சொந்தவீடு உள்ளது. மாதவருமானம்-25,000 பெறும் இந்த மணமகனுக்கு டிகரி படித்த நல்ல குணமுள்ள மணமகள் தேவை. தொடர்புக்கு:9444065701.

| | | | |
|---|---|---|---|
| | | கேது | |
| சனி | இராசி | | சுக் |
| சந் | | | சூரி புத |
| | லக் ராகு | | செ குரு |

| | | | |
|---|---|---|---|
| | சந் | கேது | செவ் |
| | அம்சம் | | புசூரி குரு |
| | | | லக் |
| | ராகு | சனி | சுக் |

## இந்து நாடார் மணமகள் தேவை.

சொந்தஊர்:தெற்குபனையூர், குளத்தூர் போஸ்ட், தூத்துக்குடி, இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-25.1.1987, வயது-36, நிறம்-மாநிறம், உயரம்-5.4, ராசி-விருச்சிகம், நட்சத்திரம்-அனுசம், படிப்பு-B.A., (History)., Systam Operator (Pvt)., (Thiruvanmyur RTO)., மாதவருமானம்-32,000 பெறும் இந்த மணமகனுக்கு, நல்ல குடும்பபாங்கான குணமுள்ள மணமகள் தேவை. 9677177287, 9884516970.

| | | | |
|---|---|---|---|
| ராகு செ | | | |
| குரு | இராசி | | |
| புத சூ | | | |
| யு நெ | சுசனி சந் | ப்ளூ | கேது |

| | | | |
|---|---|---|---|
| | யு சூரி | | கு புத |
| சனிப்ளூ சுக் | அம்சம் | | கே நெ |
| ராகு | | | சந் |
| செவ் | சனி | | |

File No:JL-508-B.

## இந்து நாடார் மணமகள் தேவை

சொந்தஊர்-திருச்செந்தூர் (தேரிக்குடியிருப்பு), இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-11.6.1994, வயது-29, நிறம்-சிவப்பு, ராசி-மிதுனம், உயரம்-5.8, படிப்பு-+2., பழைய இரும்பு மொத்த வியாபாரம், மாதவருமானம்-2,00,000 பெறும் இந்த மணமகனுக்கு, நல்ல குணமுள்ள மணமகள் தேவை. தொடர்புக்கு: 9688342000, 9443442000. File No:JL-458-B.

| | | | |
|---|---|---|---|
| | செவ் கேது | சூரி | சந் புத |
| சனி | இராசி | | சுக் லக் |
| | | | |
| | | குரு ரா | |

| | | | |
|---|---|---|---|
| சந் சனி | | சனி | ராகு |
| புத | அம்சம் | | சுக் |
| குரு | | | சூரி |
| கேது | லக் | | செவ் |

## C.S.I. கிறிஸ்தவ நாடார் மணமகள் தேவை.

சொந்தஊர்-எருசலேம், (தூத்துக்குடி மாவட்டம்), இருப்பிடம்-சென்னை, வயது-29, நிறம்-சிவப்பு, உயரம்-5.10, படிப்பு-BBA., MBA., .தொழில்: Raj Builderst, CSI., மாதவருமானம்-5லட்சம், நாடார் இனத்தை சேர்ந்த படித்த சிவப்பான மணமகள் தேவை. தொடர்புக்கு: 99520 42090, 9444902152.

## இந்து நாடார் மணமகள் தேவை

சொந்தஊர்-திசையன்விளை பக்கம், இருப்பிடம்-சென்னை, வயது-25 (1997), நட்சத்திரம்:மிருகசீரிடம், ராசி: ரிஷபம், நிறம்:மாநிறம், படிப்பு-10, தொழில், சென்னை, நெல்லை நிரந்தர வருமானம் நல்ல வசதி. நகை, ரொக்கம் எந்த எதிர்பார்ப்பும் இல்லை. இந்தமணமகனுக்கு, நல்ல குணமுள்ள மணமகள் தேவை. நெல்லை. தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்தவர் மட்டும் அணுகவும். 9841721829, After 6p.m.

## இந்து நாடார் மணமகள் தேவை

சொந்தஊர்-ஆறுமுகநேரி,தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-19.8.1996, ராசி-துலாம், நட்சத்திரம்-சித்திரை, உயரம்-5.8, படிப்பு-B.Tech., (IT)., Software Engineer, Zoho Corp (Chennai)., மாதவருமானம்: 1.2லட்சம் ,சொந்தவீடு இசிஆர் வெட்டுவாங்கேணி, 1கிரவுண் பிளாட் தாழம்பூரில் உள்ளது இந்த மணமகனுக்கு படித்த நல்ல குணமுள்ள மணமகள் தேவை.

| | | | |
|---|---|---|---|
| சனி கே | லக் | | செவ் சுக் |
| | இராசி | | |
| | | | சூரி புத |
| வியா | | சந் | ராகு |

| | | | |
|---|---|---|---|
| சுக் | சூரி | செவ் ராகு | |
| | அம்சம் | | சனி |
| | | | வியா |
| | சந் கேது | லக் | புத |

தொடர்புக்கு:9841984780.

## இந்து நாடார் மணமகள் தேவை

பெயர்:வினோத், சொந்தஊர்-உடையார்குளம், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-15.12.1986, உயரம்-5.9, நட்சத்திரம்:ரோகிணி, ராசி: ரிஷபம், நிறம்:மாநிறம், படிப்பு-B.Com., Business., Income: 20 Lakhs P.A, இந்த மணமகனுக்கு, படித்த நல்ல குணமுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு: 8608109911, 7305776111.



# திரு.அ.கணேசன் அவர்களுக்கு அஞ்சலி

19.8.2023 அன்று நள்ளிரவு கடந்து 12.30 மணியளவில் வயது-85 மறைந்த திரு.அ.கணேசன் அவர்களுக்கான எனது அஞ்சலிக் கட்டுரை.

அன்புடன் எஸ்.ராமச்சந்திரன் வரலாற்று ஆய்வாளர்.

இது, சம்பிரதாயமான இரங்கலைத் தெரிவிப்பதென்பது நம் குடும்ப உறுப்பினர் ஒருவரின் மரணத்திற்கு நாமே இரங்கல் தெரிவிப்பது போன்ற அபத்தமான செயல்பாடாக ஆகிவிடும் என்பதால் இதனை ஓர் அஞ்சலிக் கட்டுரையாகச் சமர்ப்பிக்கிறேன்.

தென்னிந்திய சமூக வரலாற்று ஆய்வு நிறுவனத்தினை உருவாக்கியவர்களுள் ஒருவரான திரு.அ.கணேசன் அவர்கள் அகில இந்திய நாடார் கூட்டமைப்பின் புரவலரும் ஆவார்.

"தோள்சீலைக் கலகம்: தெரிந்த பொய்கள், தெரியாத உண்மைகள்" என்ற நூலினை என்னுடன் இணைந்து எழுதியவர்.

2010ஆம் ஆண்டின் இறுதியில் இந்நூலின் முதற்பதிப்பு வெளிவந்தது. திருத்தப்பட்ட இரண்டாம் பதிப்பு வெளிவர ஆயத்தமாக இருந்த நிலையில் திரு.அ.கணேசன் அவர்கள் மரணம் அடைந்தது மனதில் பாரமாக நீடிக்கிறது.

திரு.அ.கணேசன் அவர்களுடனான எனது நட்பு 30 ஆண்டுகளுக்கு மேற்பட்டது. 1990 அல்லது 1991 ஆம் ஆண்டில் (2016இல் காலம் சென்ற) நெல்லை நெடுமாறன் அவர்கள் மூலமாகவே கணேசன் அவர்களுடன் எனக்கு அறிமுகம் நேர்ந்தது.

நெடுமாறன் அவர்களை அண்ணாச்சியென்று இயல்பாக அழைத்து வந்த நான் கணேசன் அவர்களை ஐயா என்றோ சார் என்றோதான் அழைத்து வந்தேன், அதற்கு விசேசமான காரணம் என்னவாக இருக்கும் என்று நான் யோசித்ததுண்டு, இயல்பாகவே ஒரு புரவலருக்குரிய சால்பும் மிடுக்கும் திரு.அ.கணேசன் அவர்களிடம் இருந்தமை ஒரு காரணமாக இருக்கக் கூடும். மட்டுமின்றித் திரு.அ.கணேசன் அவர்களின் ஆளுமையிலிருந்த தலைமைப் பண்புகள் அவரிடம் ஒரு தனித்த மரியாதையை உருவாக்கி இருக்கவும் கூடும்.

தினத்தந்தி அதிபராக இருந்த சிவந்தி ஆதித்தனார் அவர்களின் பெயரில் ஒரு நற்பணி மன்றம் இயங்கி வந்தது அந்நற்பணி மன்றத்தின் தலைவராகத் திரு.அ.கணேசன் அவர்கள் இருந்தார்.

2001ஆம் ஆண்டில் தமிழகச் சட்டமன்றத் தேர்தல் அறிவிக்கபட்டிருந்த நேரம் அது. தமிழகத்தில் மு.கருணாநிதி அவர்கள் தலைமையில் தி.மு.க அரசு ஆட்சி செய்துகொண்டிருந்தது ஆலடி அருணா அவர்கள் அந்த அரசில், சட்டத் துறை அமைச்சராக இருந்தார். அவர் திரு.கணேசன் அவர்களை அழைத்து, அப்போதைய தமிழக முதல்வர்.மு.கருணாநிதி அவர்களைச் சந்திக்குமாறும், தி.மு.க விற்குச் சிவந்தி ஆதித்தனார் நற்பணி மன்றத்தின் ஆதரவினைத் தெரிவிக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

திரு.அ.கணேசன் அவர்களோ அ.இ.அ.தி.மு.க விற்கு குறிப்பாக அக்கட்சியின் தலைவி.செல்வி.ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கு ஆதரவாகச் சில கருத்துகளை தெரிவித்துள்ளார். ஆலடி.அருணா அவர்கள் கேலியான தொனியில், "ஜெயலலிதா இனி ஜெயில் லலிதா தான் எனவே அவர்களையெல்லாம் நம்பாதீர்கள்" என்று சொல்லியிருக்கிறார், திரு.கணேசன் அவர்கள் மேற்கொண்டு அவரிடம் வாதாடாமல் விடைபெற்று வெளிவந்துவிட்டார்.

சிவந்தி ஆதித்தனார் நற்பணி மன்றத் தலைவர் பதவியை உடனடியாக இராஜினாமா செய்துவிட்டு நாடார் சங்க கூட்டமைப்பின் பிற நிர்வாகிகளுடன் தொடர்பு கொண்டு விவாதித்து சில கோரிக்கைககளின் அடிப்படையில் செல்வி.ஜெயலலிதா அவர்களைச் சந்தித்து அக்கோரிக்கைகளை ஏற்றுக் கொள்கிற பட்சத்தில் நாடார் சங்கக் கூட்டமைப்பின் ஆதரவினை அ.இ.அ.தி.மு.க விற்கு வழங்க முடியுமென்றார்.

செல்வி.ஜெயலலிதா அவர்களும் அக்கோரிக்கைகளை உடனடியாக ஏற்றுக்கொண்டார். செல்வி.ஜெ.ஜெயலலிதா அவர்களே பல வழக்குகளுக்கு ஆளாகியும், தேர்தலில் போட்டி இடுவதற்கே அவருக்குத் தகுதி இருக்கிறதா என்ற ஐயம் ஏற்படுகிற வகையில் சட்டச்சிக்கல்களை எதிர்கொண்டும் இருந்த அன்றைய நிலையினை எண்ணிப்பார்த்தால் தான்.

திரு.கணேசன் அவர்களின் கணிப்பு எவ்வளவு துல்லியமானது என்பது புரியும். (அப்போதைய தேர்தல் பிரச்சாரக் களத்தில் ஜெயலலிதா அவர்கள் திருச்செந்தூரில் அ.இ.அ.தி.மு.க வேட்பாளருக்காகப் பிரச்சாரம் செய்வதற்காக வந்திருந்தபோது, திரு.கணேசன் அவர்கள் திருச்செந்தூரில் ஜெயலலிதா அவர்களைச் சந்திப்பதற்கு அனுமதி பெற்று அப்பகுதிக்கு வந்திருந்தார், அப்போது ஏரலில் நான் தங்கியிருந்த ரகு பில்டிங்கிற்கு வந்து என்னைச் சந்தித்த போது தெரிவித்த விவரங்கள் இவை).

செல்வி.ஜெ.ஜெயலலிதா அவர்களைத் திருச்செந்தூரில் சந்தித்த திரு.கணேசன் அவர்கள் பிரச்சாரத்திற்குத் தேவைப்படும் என்று கருதி வழங்கிய தொகையைக் கூடப் பெற்றுக் கொள்ளாமல் நாடார் சங்கங்களின் கூட்டமைப்பு விடுத்த கோரிக்கையை நிறைவேற்றினால் போதும் என்று ஜெயலலிதா வசம் தெரிவித்தார்.

அதன் காரணமாகவே, கணேசன் அவர்கள் பால் ஜெயலலிதா மிகுந்த மரியாதை வைத்திருந்தார்.

2011ஆம் ஆண்டு தமிழகச் சட்டமன்றத் தேர்தல் வேளையில் நடிகர் சரத்குமார் அவர்களின் சமத்துவ மக்கள் கட்சிக்கு அ.இ.அ.தி.மு.கவுடன் உடன்பாடு ஏற்படுவதற்கு மூல காரணமாக இருந்தவர் கணேசன் அவர்களே. அது தொடர்பாகச் செல்வி.ஜெ.ஜெயலலிதா அவர்களைச் சந்தித்த போது நானும் கணேசன் அவர்களும் இணைந்து எழுதி 2010ஆம் ஆண்டின் இறுதியில் வெளியிட்டிருந்த தோள் சீலைக் கலகம் - தெரிந்த பொய்கள், தெரியாத உண்மைகள்" நூல் பிரதியை ஜெயலலிதா வசம் வழங்கினார்.

அந்நூலினை ஜெயலலிதா அவர்கள் ஆழ்ந்து வாசித்துள்ளார் என்பதை உணர்த்துகிற வகையில் ஓர் நிகழ்வு 2012ஆம் ஆண்டு நிகழ்ந்தது. CBSE யின் 9ஆம் வகுப்பிற்கான வரலாற்றுப் பாடத்தில் "Clothing - its Social history" என்ற தலைப்பில் ஜானகிநாயர் என்ற கல்வியாளரால் எழுதப்பட்ட, கட்டுரை இடம் பெற்றிருந்தது, அக்கட்டுரையில் சான்றோர் (நாடார்) சமூகத்தவரின் வரலாறு குறித்த தவறான தகவல்கள் இடம்பெற்றிருந்தன. அத்தவறான தகவல்களின் அடிப்படையிலமைந்த பொய்யான சித்தரிப்பினைச் சுட்டிக்காட்டி. அப்போது முதல்வராக இருந்த செல்வி.ஜெயலலிதா அவர்கள் அப்போதைய பிரதமர் மன்மோஹன்சிங் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதி அனுப்பினார்.

சான்றோர் சமூகத்தவரின் வரலாறு குறித்து அக்கடிதத்தில் அவர் தெரிவித்திருந்த தரவுகள் எமது "தோள்சீலைக் கலகம்" நூலை அடிப்படையாகக் கொண்டே அமைந்திருந்தன.

தோள்சீலைக் கலகம் குறித்த ஆய்வில் நாங்கள் இணைந்து இறங்கியதன் பின்புலத்தினை இங்கு குறிப்பிட விழைகிறேன். திரு.அ.கணேசன் அவர்கள் நல்ல சொற்பொழிவாளர், ஒரு குறிப்பிட்ட தலைப்பில் பேச வேண்டுமென்றால் அதற்குரிய தரவுகளை நுணுக்கமாக சேகரித்து முறைப்படத் தொகுத்துத் தர்க்க பூர்வமாக வழங்குவதில் தேர்ச்சி பெற்றவர். சுற்றி வளைக்காமல் நேரடியாகவும் அதே வேளையில் கேட்போர் மனதில்

பசுமரத்தாணி போல் பதிகிற வகையிலும் கருத்தினைத் தெரிவிப்பதில் வல்லவர் தம்முடைய இளமைக்காலத்தில் (1960களில்) இளைஞர்கள் காங்கிரசில் ஈடுபாட்டுடன் பணியாற்றியவர். காமராஜ் அவர்களின் மறைவுக்குப் பிறகு நேரடி அரசியல் ஈடுபாட்டினைக் குறைத்துக் கொண்டார். தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளத்தையடுத்த தாம் பிறந்த ஊரான செட்டிகுளத்திலும் அருகிலுள்ள ஊர்களிலும், தாம் பிறந்த நிலைமைக்கார நாடார்கள் எனப்பட்ட அரசகுலச் சான்றோர் வாழ்வது குறித்தும், அப்பகுதியில் 19ஆம் நூற்றாண்டில் புராட்டெஸ்டெண்ட் கிறிஸ்தவ பிஷப் ராபர்ட் கால்டுவெல் சான்றோர் சமூகத்தவர் குறித்துப் பொய்யான தகவல்கள் அடங்கிய "Tinnevelly Shanars" என்ற நூலை எழுதி வெளியிட்டதன் விளைவாகக் கால்டுவெல்லுக்குக் கடும் எதிர்ப்புகள் நேரிட்டு அவர் கோடைக்கானலுக்குக் குடிபெயர்ந்தமை போன்ற நிகழ்வுகள் குறித்தும் முழுமையாக அறிந்திருந்தவர், இத்தகைய வரலாற்றுச் செய்திகள் குறித்து அவருடன் நீண்ட நெடிய உரையாடல்களில் நான் ஈடுபட்ட துண்டு மட்டுமின்றிச் சான்றோர் சமூக வரலாறு குறித்த பழைய நூல்களையும் அவர் மூலமே நான் பெற்று வாசிக்கும் வாய்ப்பைப் பெற்றேன். 2004ஆம் ஆண்டில் என்னுடைய நூலான. "வலங்கை மாலையும் சான்றோர் சமூகச் செப்பேடுகளும் "உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் வெளிவருவதற்கு மணிக்கணக்கில் அவருடன் சமூக வரலாறு குறித்து விவாதித்தமையும் பெருந்துணையாக அமைந்தது. 2005ஆம் ஆண்டின் இறுதியில் நான் தொல்லியல் துறையிலிருந்து விருப்ப ஓய்வு பெற்ற பின்னர் தென்னிந்தியச் சமூக வரலாற்று ஆய்வு நிறுவனம் (South Indian Social History Research Institute -SISHRI) என்ற பெயரில் ஆய்வு நிறுவனம் தொடங்குவதற்குக் காரணமாக இருந்தவர் அவரே.

தென்னிந்தியச் சமூக வரலாற்று ஆய்வு நிறுவனத்திற்குத் திரு.அ.கணேசன் அவர்களின் மறைவு பேரிழப்பாகும். தனிப்பட்ட முறையிலும் எனக்கு அவரின் மறைவு பேரிழப்பே. மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் மற்ற புலவர்களோடு தாமும் புலவர்களாக இருந்த பாண்டியன் அறிவுடைநம்பி, ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன், பன்னாடு தந்த மாறன் வழுதி போன்ற மன்னர்களோடு ஒப்பிடத்தக்க திரு.அ.கணேசன் அவர்கள் என்னுடன் ஒரு சாலை மாணாக்கர் போல, இருந்து உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல் அனைத்தே புலவர் தொழில்" என்ற வள்ளுவன் வாக்கிற்கிணங்கக் கலந்துரையாடியதும், விவாதித்ததும், ஒருவரிடமிருந்து ஒருவர் கற்றுக் கொண்டதும் என்றும் நினைவில் நீங்காமல் நிற்கக்கூடியவையாகும்.

# தமிழக வரலாற்றில் எழுச்சியும் வீழ்ச்சியும்

**கடைச்சங்க சோழர்கள்**

கரிகாலனால் தன் ஆட்சிக் கீழ்க்கொண்டு வரப்பட்ட அவ் ஆயர்கள் அம்மாவட்டங்களில் இன்றும் வாழ்ந்து அப்பகுதியில் புகழ்பெற்ற "கம்பளி நெய்யும் குறும்பராவர்" பெரும் புகழுக்குரியவனாம், வெல்லும் போர் வல்லவனாகிய கரிகாலன் குன்றுகளில் ஆனிரை மேய்க்கும் குறும்பர், குடியைப் பேணிக்காத்தான்.

இப்பாட்டிலிருந்து உய்த்துணரப்படும் கரிகாலன். ஆட்சி வடக்கே கடப்பை, கர்நூல் மாவட்டங்கள் வரையும் பரவியிருந்தது என்ற உண்மையை உறுதி செய்வதற்கு எண்ணற்ற கல்வெட்டுச் சான்றுகளும் உள. ஆகவே கரிகாலன் ஆட்சி தமிழ்நாடு முழுவதும் தெலுங்கு நாட்டின் ஒரு பகுதியிலும் பரவியிருந்தது. அவன் மக்களின் விவசாயத் தொழில்களை வளர்த்தான். வாணிகத்திற்கும், ஊக்கம் ஊட்டினான். ஆகவே அவன் நாடு வளம் பெற்றிருந்தது. 02, 03 ஆம் நூற்றாண்டுகளில் நெல்லூர் கடப்பை, குண்டூர், வடார்க்காடு, செங்கல்பட்டு மாவட்டங்களில் வாரங்கல், காகத்தியர்களுக்குக் கடமைப்பட்டவர்களாகிய இப்போது தெலுங்குச்சோட எனத் திரிந்து வழங்கும் தெலுங்குச் சோழ அரச குடும்பங்கள் வளம் பெற்றிருந்தன.

காகத்தியர் தாமும் தங்கள் கால் வழியினைச் சூரியனிலிருந்து கண்டு கரிகால சோழ அரசனை, அவர்களின் புராண வழி முன்னோர் வரிசையிற் வைத்து எண்ணுகின்றனர். அனந்தபூர் மாவட்டத்திலும், கன்னட நாட்டு எல்லைப்பகுதிகளிலும் கூட இச்சோழரின் ஒருகிளை சிறப்புற்றிருந்தது. கி.பி.16ம் நூற்றாண்டு போலும் பிற்பட்ட காலத்திலும் வழிவழி வந்த காது வழிச் செய்தியாம், கரிகாலன் வழிவந்தவர் பழைய பெருநகராம் உறையூரின் ஆட்சியாளர் என்ற பெருமையோடு, சோழர் குலத் தலைவர்களாக பணிபுரியக் காணப்படுகின்றனர். தெலுங்கு மக்களின் வரலாற்றுத் தொடக்க காலத்தில் அத்தெலுங்கு மக்கள் சிந்தனை மீது, கரிகாலன் பொறித்துவிட்ட நல்லெண்ண முத்திரை, பெரும்பாலும் அனைத்துத் தெலுங்கு அரச இனங்களுமே அவன் வழியில் வந்தனவாகவே உரிமை கொள்ளுமளவு அத்தணைப் பெருமை வாய்ந்ததாம். காவிரி ஆற்றின் கடைமுகப்பகுதி பண்டைய நாட்களில் புனல்நாடு அதாவது வெள்ளத்தில் நாடு எனப் பெயர் பெருமளவு காவிரியாறு நாடு முழுவதையும் ஆண்டுதோறும் தவறாமல் வெள்ளக்காடாக்கி வந்துள்ளது. உயர்ந்த வெள்ளத் தடுப்புக்கரைகளைக் கட்டியதன் மூலம் ஆண்டுதோறும் தவறாமல் நிகழும் இயற்கை விளைவிக்கும் அழிவினின்றும் நாட்டைத் தெளிவுறக் காத்தான்.

**தொகுப்பு:கீழக்கடை ந.ஆ.அ.மா.ஜெயபாஸ்கரன். து.அருணாசலபுரம்.**

குளம் வெட்டினான். வளம் பெருக்கினான். குளம் தொட்டு வளம் பெருக்கி கரிகாலன் இறப்புக்குப் பின்னர் அவன் கண்ட பேரரசு, சிறு சிறு நாடுகளாகப் பிளவுண்டு போயின. தங்களைச் "சோடர்" (கடரம் தமிழ், ழ, கரத்திற்கு ஈடான தெலுங்கு எழுத்து ஆதலின்) என அழைத்துக் கொள்ளும், தெலுங்குச் சிற்றரசர்களால் ஆளப்படலாயிற்று, அவர்கள் ஆட்சிக்காலத்தில் தெலுங்கு கல்வெட்டுக்களில் பயன்படுத்தப்பட்டு மெல்ல மெல்ல எழுத்துருவ மொழியாகி விட்டது. சில நூற்றாண்டுகளில் அது இலக்கிய மொழியாகவும் ஆகிவிட்டது.

**பிற்காலச் சோழர்கள்**

ஆன்மீக வளர்ச்சிக்கு கோவில்கள் மிகவும் அவசியம். தென்னிந்திய வரலாற்றில் சோழர்கள் காலம் (கி.பி.900 - 1300) ஒரு பொற்காலமாகும்.

இந்த காலத்தில் தான் தமிழகம் முழுவதும் ஏராளமான கோயில்கள் கட்டப்பட்டன. சைவ சமயம் செழித்து வளர்ந்து, பெரிய புராணம் இயற்றப்பட்டது. தேவாரம், திருவாசகம், திருமந்திரம் கோயில்களில் தினமும் பாடப்பட்டன.


சோழ மன்னர்களின் சிறப்பு வாழ்ந்தவர்கள் கண்டராத்தியன், சுந்தர சோழன் முதல் இராச இராச சோழன், முதல் இராசேந்திர சோழன், முதல் குலோத்துங்க சோழன், இரண்டாம் குலோத்துங்க சோழன், மூன்றாம் குலோத்துங்க சோழன் மற்றும் பல சிறப்பு வாய்ந்த மன்னர்கள் தமிழகத்தில் பல்லாயிரக்கணக்கான சிவன் கோயில்களை கட்டியுள்ளனர். இக்கோயில்களில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகள், செப்பேடுகள், நாணயங்கள் போன்றவை மூலம் சைவ சமயத்தின் வளர்ச்சி மற்றும் மக்களின் வாழ்வில் கொள்கைகளைப் பற்றி அறிய முடிகிறது. (தொடரும்)


Cell:9884687675, 9488491671.

SSS

அய்யா துணை

திருமண தகவல் மையம்



அமைப்பாளர்: P.சக்திவேல் நாடார்.

பூர்வீகம் நாடார் உவரி எண்:42, அன்னை கமலா நகர், வீராபுரம் மெயின் ரோடு, நியூ காலனி பஸ் ஸ்டாப், ஆவடி, சென்னை-600 055.

# மானாடும் மானாட்டாரும்: கி.பி.1600 விடியலிலிருந்து-5

டாக்டர் ஆ.தசரதன் 9444167603.

இத்தலைப்பில் எழுதப்பெறும் தொடர்கட்டுரைகள் சான்றோர்குல நாடார்களின் சமூகப் பண்பாட்டு வரலாற்றைக் கி.பி.1600 ஆண்டிலிருந்து ஒரு நூற்றாண்டு அளவு வரை இந்திய நாடார் முரசின் இதழ்களில் பதிவிட்டு வருகின்றன. மானாடு எனப்பெறும் மானவீர வளநாட்டுடன் தொடர்புப்படும் மானாட்டார் என்ற சான்றோர்குலத்தினர் மற்றும் அப்பகுதி நாடார்களின் சமூகப் பண்பாட்டு வரலாறு, பதிவிடப்பெற்ற வரலாற்று ஆவணங்களின் அடிப்படையில், எழுதப்பட்டு வருகிறது என்பதை யாவரும் அறிவர்.

கி.பி.1600 ஆம் ஆண்டில் பதியப்பட்ட செம்பிராப் பணிக்கன் கல்வெட்டிலிருந்து தொடங்கி, அதே காலக்கட்டத்தில் அரங்கேற்றப்பட்ட அரசகுல மாலை எனும் வலங்கைமாலை, கி.பி.1606 இல் பாடப்பெற்ற வெங்கலராச சோழன் வரலாறு, கி.பி.1617ஆம் ஆண்டு அரங்கேற்றப்பட்ட செண்பக நாடாச்சியார் வரலாறு எனும் ஆவணங்கள் இதுவரை அறிமுகம் செய்யப்பட்டன. மானாட்டுத் தொடர்புடையனவாக இவ் ஆவணங்கள் இருந்தாலும் இவை மானாட்டார் எனும் பெரிய உயரிய கூட்டத்தார் பற்றியதாக இல்லை என்பதும் பதிவிடப்பட்டது.

கி.பி.1617ஆம் ஆண்டு அருதக்குட்டிப் புலவரால் வில்லிசையில் பாடி அரங்கேற்றப்பட்ட செண்பக நாடாச்சியார் கூட்டத்தார் தமிழ்நாட்டில் பரவலாகப் பல்லாயிரக்கணக்கில் இருந்து வரும் சமூகப்பண்பாட்டு வரலாறு இந்திய நாடார் முரசின் 2023ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாத இதழில் இடம் பெற்றதன் தொடர்ச்சியாக இனிவரும் செய்திகள் அக்கூட்டத்தார் தொடர்புடைய மற்றொரு வகையறாவினரின் சமூகப் பண்பாட்டு வரலாற்றை இங்கு பதிவிடுகின்றன.

கி.பி.1623இல் அதே அருதக்குட்டிப் புலவரால் வில்லிசையில் பாடி அரங்கேற்றம் செய்யப்பெற்ற ஆவணத்தின் பெயர் பெருமாள்சாமி தம்பிரான் கதை என்பதாகும். இவர் ஒரு வரலாற்றுச் சான்றோர் குலத் தலைமகன் ஆவார். சாமி என்ற பெயர்காரணமாக இவரைத் திருவரங்கப்பெருமாள் என்ற தெய்வமாக நம்மில் பலர் கருதி வருகின்றனர். அது உண்மை அன்று. சான்றோர் குலத் தலைமகனான நம்மாழ்வார் என்ற 12 ஆழ்வார்களின் தலைவராகக் கருதப்பெறுபவருக்குப் பின் சான்றோர்குலத்தில் வந்த பெருமாள்சாமி தம்பிரான் என்பவர் திருவரங்கத்திலிருந்து திருவனந்தபுரம் வரை நடைப் பயணமாகச் சைவ - வைணவத் திருத்தலங்களையும் பதிகளையும் கண்டு தம் தொடர்புடையவர்களையும் ஆங்காங்குத் தெலுங்குச் சோழர்களான நம் மகா மண்டலேசுவரர்கள் ஏற்படுத்திய ஆவணப் பதிவுகளையும் அவற்றைப் பராமரிக்கும் தம் கூட்டத்தாரையும் கண்டு இறுதியில் அனந்தன் காட்டில் பள்ளி கொண்டதாக இவர் வரலாறு இப்பொழுது அடையாளம் காணப்பட்டுள்ளது.

திருவரங்கத்தில் முதலாம் குலோத்துங்க சோழனின் மகன் விக்கிரம சோழன் என்ற அகளங்க நாடாள்வான் ஏற்படுத்திய ஐந்தாம் திருச்சுற்றில் சேர பாண்டிய தம்பிரான் எனப்பட்ட மூன்றாம் குலோத்துங்க சோழன் (கி.பி.12-13 ஆம் நூ) ஏற்படுத்திய சிங்காதன மடத்தில் பரம்பரை உரிமையாகக் கி.பி.16ஆம் நூற்றாண்டியன் மையத்தில் இந்தப் பெருமாள்சாமி தம்பிரான் இருந்து வந்ததாகவும் அக்காலக்கட்டத்தில் ஏற்பட்ட கலவரத்தால் அவர் தம் கூட்டத்தாருடன், சோழ, பாண்டிய, சேர மண்டலங்கள் வழியே நடந்து திருவனந்தன் காடு வரை சென்றதாகவும் அறியப்படும் வரலாற்றுக்குக் கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன.

பெருமாள்சாமி தம்பிரானை நாராயணசாமி என்றும் பத்மநாபசாமி என்றும் சில வட்டாரங்களில் அழைத்தனர். நாராயணப்பராசா என்றும் இவர் அழைக்கப்படுவதிலிருந்து அரசகுலத்தவராக அடையாளப்படுகிறார். ஆண்டான் கவிராயன் என்ற வசைக்கவிராயன் இவரை தெலுங்கப்ப நாராயணன் என ஒரு தனிப்பாட்டில் குறிப்பதிலிருந்து இவர் தெலுங்குச் சோழ மரபினர் என்றும் வெங்கலராச சோழன் என்ற சான்றோர்குல மகாமண்டலேசுவரனின் காலக்கட்டத்தவர் என்றும் அடையாளப் படுகின்றன.

பிற்காலச்சோழர்களின் ஆட்சிக்காலத்தில் சான்றோர் குலத்தவர் சிலர் மடாதிபத்தியம் செய்ததாக அறியப்படுவதால் அம்மரபில் இவர் வந்திருக்கலாம் எனக் கருதலாம். இதனால், நம்மாழ்வாருக்குப் பிறகு இவரை நாராயணனின் அவதாரமாகவே அரசகுலத்தவர் அங்கீகரித்துள்ளனர். தென்னாட்டில் சைவத்தையும் வைணவத்தையும் ஒருங்கே கண்டவராக இவர் காணப்படுகிறார்.

திருவரங்கத்தில் இராயர்களும் நாயக்கர்களும் கி.பி.16ஆம் நூற்றாண்டின் நடுவில் தலையிட்டதால் ஏற்பட்ட போட்டிகளின் காரணமாகவே பெருமாள் தம்பிரான் தமக்கு ஆதரவாக அனந்தபுரம் அமையும் என அங்கு நடைப் பயணம் மேற்கொண்டிருக்கலாம். அவருடன் மெய்க்காப்பாளர்களாகச் சங்கிலிப்பூதம், சேத்திரபாலன், கபாலக்காரன் போன்றோர் சென்றுள்ளனர். கபாலக்காரன் மட்டும் அனந்தன் காட்டில் பெருமாள்சாமி தம்பிரானுடன் தங்கியுள்ளான். அவனைக்குட்டியாலி, குஞ்சாலி மரக்காயரின் படை கைசெய்தது வேறொரு வரலாறாக அருதக்குட்டிப் புலவரால் பாடப்பெற்றுள்ளது.

பெருமாள்சாமி தம்பிரானின் இந்த வரலாறு கி.பி.1623ஆம் ஆண்டில் பாடப்பெற்ற காலக்கட்டடத்தில் நாயக்கர் வமிசத்திருமலை நாயக்கன் மதுரையில் சுதந்திரனாகத் தன்னைப் பிரகடனப்படுத்தி ஆட்சிக்கட்டில் ஏறியுள்ளான். இராயர்களின் ஆதரவாளரான பெருமாள்சாமியின் கதை நாயக்க ஆட்சியாளனின் எதிர்ப்பை எதிர்கொள்ளக்கூடும் என்ற எண்ணத்தில் அருதக்குட்டிப் புலவர் இந்த வரலாற்றுக்கதையை ஒரு சாமியின் புராணக் கதை போன்று சித்தரித்துப்பாடியதால் நம்மவரும் வரலாறு இருப்பதைக் காணாமல் இருந்துவிட்டனர். அது போன்று சங்கிலிப்பூதம், சேத்திரபாலன் ஆகியோரையும் புராணமாகவே கருதிவிட்டனர். தோட்டுக்காரி, கபாலக்காரன் ஆகியோர் முறையே பெருமாள் சாமி தம்பிரானின் உறவுமுறை மற்றும் மெய்க்காவல் எனறாலும் தெய்வங்களாகவே வழிபடப்பெற்று வருகின்றனர்.

இனிப் பெருமாள் சாமி தம்பிரானின் கூட்டத்தார் பற்றிக் குறிப்பிடலாம். இக் கூட்டத்தாரும் சான்றோர் குலத்தவரே. அனந்தன் காட்டில் ஆண்டுகள் பல சென்றன நம் தம்பிரான் அங்கே இயற்கை எய்தினார். அவருக்குப் பள்ளிப் படைக்கோயில் எழுப்பப்பட்டது. அவர் பள்ளிகொண்ட பல ஆண்டுகளுக்குப் பின்பே தான் கோவில் கட்டப்பெற்றது. பிங்கல ஆண்டு (கி.பி.1559) சித்திரைமாதம் பத்தாம் நாள், வியாழக்கிழமை உதயத்தில் யோக வாரமும் அமிர்தமும் கூடிய சிங்க முகூர்த்தத்தில் கட்டப் பணி தொடங்கி, கி.பி.1623இல் முடிந்திருக்கலாம் எனத் தெரியவருகின்றது. சிலஏட்டுப்பிரதிகளில் அவர் 1623இல் சிறந்தார் எனப் பதிவிடப்பட்டுள்ளது.

பெருமாள்சாமி தம்பிரானின் கூட்டத்தார் திருவரங்கம் முதல் தென்னாட்டில் பல ஊர்களில் அவருடைய திருவுருவைத் திருமாள் போல் சித்தரித்து வழிப்பட்டு வருகின்றனர். திருஅனந்தன் காட்டில் அவருடைய பள்ளிப் படைக்கோயிலை வழிபட்டுவந்த இவர்களில் பலர், கி.பி.18ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத் தென் சேர நாட்டு அரசியல் சூழல் காரணமாகத் தென்பாண்டி நாட்டில் குடியேறியுள்ளனர். இதனால் அனந்தன்காட்டில் உள்ள பள்ளிப்படைக்கோயில் வழிபாடு தொடர்புவிட்டுப் போய் எங்கெங்கே அக்கூட்டத்தார் உறைந்தார்களோ அங்கங்கே அவர் மூதாதையாக வழிபடப்பெற்று வருகிறார்.

பள்ளிப் படைவழிபாட்டில் பெருமாள் தம்பிரானுக்கு உருவச் சிலை கிடையாது. பீட வழிபாடே உள்ளது. காலப்போக்கில் திருமாலின் உருவம் பெற்றுப் பெருமாள்சாமி தம்பிரான் வழிபடப் பெறுதலையும் சில ஊர்களில் காணலாம். நாட்டாற்றுப் போக்கு எனும் நம்பி ஆற்றுப் போக்கில் இக்கூட்டத்தாரில் சிலர் சென்று அவர் பாதம்பட்ட இடத்தில் வழிபட்டு வருவதாகக் கூறுகின்றனர். ஆண்டான் கவிராயன் என்ற வசைக்கவிரனும் இந்த வழிபாட்டுத்தலத்தில் காராளர்கரும் பெருமாள்சாமி தம்பிரான் கூட்டத்தார்க்கும் ஏற்பட்ட கலகத்தில் தம்பிரான் காராளரைத் தம் அதிகாரத்தால் தண்டித்ததாக ஒரு தனிப்பாடல் உள்ளது.

பெருமாள்சாமி தம்பிரானோடு திருரங்கத்திலிருந்து உடன்வந்தவர்களில் ஒருசிலர்க்கும் இடையில் வந்து அவருடைய நடைப்பயணத்தில் சேர்ந்து கொண்டவர்கள் சிலர்க்கும் வழிபாடுகள் உள்ளன. சான்றோர் சமூகத்தினர் பலர் இதனைக் கடைப்பிடித்துவருகின்றனர். இவ் வழிபாட்டுக்கு உரியோர் சிலரின் வரலாறு அருதக்குட்டிப் புலவரால் பாடப்பெற்றுள்ளது. கபாலக்காரன் கதை என்பது அதில் ஒன்ற, அந்திரமுடையார் கதை என்பது மற்றொன்று பெருமாள்சாமி தம்பிரானை மையப்படுத்தியே தோட்டுச்சாரி எனும் தோட்டச்சுவரி வரலாறும் புனையப்பட்டுள்ளது. அவளை விரும்பிய குமரப்பராசன் பெயரிலும் வரலாறு கதைப்பாட்டாகப் புனையப்பட்டுள்ளது. இப்புனைவுகளுக்கு உரிய தலைமக்கள் பலர் சான்றோர் சமூகத்தினரே ஆவர். ஆயினும் இவர்கள் மானாட்டினர் அல்லர்.

# மூன்றாம் ஆண்டு நினைவு அஞ்சலி



பிறப்பு:
7.3.1946

# R.ராஜதங்கம் அம்மாள்

இறப்பு
20.9.2020

**கணவர் - S.ராஜையா நாடார்**

**மகன்கள் - மருமகள்கள்**

**மகள்கள் - மருமகன்கள்**

**பேரன்- பேத்திகள் மற்றும் குடும்பத்தினர்.**


**சக்தி டிப்போ சக்தி ஹார்டுவேர்**

அண்ணாநகர் 3வது மெயின் ரோடு,

*168, எம்.எம்.காலனி, அமைந்தகரை காவல்நிலையம் அருகில்,*

*சென்னை-600 029. போன்:9840036745, 9841085745.*



# ஜெயமுருகன் சிக்கன் & மட்டன் ஸ்டால்

89, கே.எச்.ரோடு, தி.நகர்,
சென்னை-17. போன்:2814 3642.





R.வெங்கடேசன்



நல்லதே நினைப்போம்! நல்லதே செய்வோம்! நல்லதே நடக்கும்!

# நியூ நிதில் & கோ

117/401, டி.எச்.ரோடு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை-21. போன்:044-25962323, 044-42165485







## NEW NITHIL & CO

**Whole Sale & Retail**
**Steel & Wood Furniture Show Room**
**No:1171, T.H.Road, Old Washermanpet, Chennai-600 021.**







# சித்ரா வாட்ச் கம்பெனி

## CHITHRA WATCH COMPANY



SALES & SERVICE TITAN. SONATA, AJANTA
Expert repairers of world Famous Rolex, Rado, Omega Seiko, Citizen and other Indian Watches, Til

Shanthi Complex, No:63/26, Ranganathan Street, (Very Near Mambalam Railway Station (opp.to Rameswaram Road), T.Nagar, Chennai-17. Ph:24348524.



# J J திருமண தகவல் மையம்



அனைத்து மதம், மொழி, சாதி பிரிவுகளில் சிறந்த வரன்களை அமைத்து தரப்படும். தொடர்பு கொள்ள கொ.அ.ஜோஷி இயக்குனர்.

பதிவு கட்டணம்*

## 7338961912 / 9884828223.




## வேலைக்கு ஆட்கள் தேவை.



**சென்னையில் வசிக்கும் 74 வயது நாடார் - தனி நபருக்கு சமைத்து உடனிருந்து கவனித்துக் கொள்ள 50வயதுக்குட்பட்ட நாடார் (இந்து அல்லது கிறிஸ்தவ) பெண்மணி தேவை.**

தொடர்புக்கு: 9941887384, 044-43809448.







# S.பால்பாண்டியன் ஹார்டுவேர்ஸ்
# S.பால்பாண்டியன் டிப்போ



**சிமெண்ட், செங்கல், ஜல்லி, கம்பி, பெயிண்ட் வகைகள், பி.வி.சி.பைப் வகைகள் கடப்பாக்கல், ஸிங்க் முதலியன மொத்தமாகவும் சில்லரையாகவும், தரமாகவும் கிடைக்கும்.**



**உரிமையாளர்:** Lion S.**பால்பாண்டியன்**

20, புகழேந்தி தெரு, எம்.ஜி.ஆர்.நகர், சென்னை-78. போன்:24713885, 23716122.

# இலக்கியச் செல்வர் குமரி அனந்தனின் பயணங்கள்

வை.ஜவஹர் ஆறுமுகம்
9442949655

நுழைவாயில்: வை.ஜவஹர் ஆறுமுகம்.

பெருந்தலைவர் காமராஜர் காலத்திலிருந்தே என்னோடு தொடர்பில் இருக்கும் இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் குறித்து ஒரு நூல் எழுதும் வேட்கை என்னுள் எழுந்தது. காமராஜர் குறித்த மூன்று நூல்களை எழுதிவிட்டேன். அவரோடு பயணித்த குமரி அனந்தன் தொடர்பான ஒரு நூல் இப்போது உங்கள் கையில் இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் பயணங்கள்.

அக்கறை கொண்ட ஒரு தொண்டனாக, தேவையானதைச் சுட்டிக் காட்டும் ஒரு நண்பனாக என்னை ஏற்றுக் கொண்டிருக்கும் தமிழகத்தின் மூத்த அரசியல் தலைவர் குமரி அனந்தன் அவர்களுக்கு நான் செலுத்தும் நன்றிக் கடமை இது.

ஒரு மூத்த பத்திரிக்கையாளனாக, திருச்சி மாவட்ட எழுத்தாளர் சங்கத்தின் தலைவராக பல ஆயிரம் செய்திகளை கட்டுரைகளை, கதைகள், கவிதைகள், நாடகம், நாவல் என எழுதி விட்டேன். இலக்கியச் செல்வர் பற்றி எழுதும் போதே ஒரு ஆனந்தம், பெருமை.

குமரி அனந்தன் ஒரு அரசியல் கட்சி தலைவர் மட்டுமல்ல. கவர்ந்து இழுக்கும் பேச்சாற்றல் கொண்டவர். அவர் ஒரு தமிழ்ச் சுரங்கம், தமிழகத்தின் தமிழ்மொழியின் அடையாளம்.

"சொல் ஒன்று வேண்டும்.
தேவ சக்திகளைத் தன்னுள் அடக்குகின்ற
சொல் ஒன்று வேண்டும்".

என்று பாரதி பராசக்தியை வேண்டினான். அந்த வரம் குமரி அனந்தனுக்கு கிடைத்தது.

"சொல்லடி சிவசக்தி - எனைச்
சுடர்விடும் அறிவுடன் படைத்து விட்டாய்
வல்லமை தாராயோ - இந்த
நானிலம் பயனுற வாழ்வதற்கே".

எனும் பாரதியின் வேண்டுதலே குமரி அனந்தனின் எண்ணமாக இருக்கிறது.

இந்த நூல் குமரி அனந்தன் அவர்களின் அரசியல் பயணங்கள் பற்றியது. இதில் குறிப்பிடும் சம்பவங்களில், வருடங்கள் சில தவறாக இருக்க வாய்ப்புண்டு. என் நினைவில் இருப்பதைக் கொண்டு எழுதியது. குறைகளை மன்னியுங்கள்.

திருச்சி மாவட்டம் சிறுகமணி கிராமத்தில் இருந்து கந்தசாமி எனும் காங்கிரஸ் தொண்டர் "தேசிய ஒளி" எனும் ஒரு மாத இதழை நடத்தி வந்தார். அந்த இதழில் குமரி அனந்தன் அவர்களைப் பற்றி தொடர் கட்டுரைகளை நான் எழுதி வந்தேன். அவற்றை படித்து ரசித்த குமரி அனந்தன் அவற்றைத் தொகுத்து ஒரு நூலாக எனக்கு அனுப்பு என்று கேட்டார். இது இயலவில்லை. "தேசிய ஒளி" ஆசிரியர் கந்தசாமி மறைந்து விட்டார்.

"இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் பயணங்கள்" நூலை நான் எழுதப் பெரிதும் துணை நின்ற எனது நண்பர் மா.முருகேசன், குமரி அனந்தனின் கார் ஓட்டுநராகவும், உதவியாளராகவும் நெடுநாள் பணியாற்றிய பாஸ்கர், திருச்சி உறையூர் எத்திராஜ், நாஞ்சில் ராஜேந்திரன், ஆலடி சங்கரையா ஆகியோருக்கு நன்றி கூறுவேன்.

இந்த நூலுக்கு அணிந்துரை பெறத் தகுதியான மூத்த காங்கிரஸ் தலைவர் கோபண்ணா அவர்களைத் தொடர்பு கொண்டபோது உடனே சம்மதித்து அதனைச் சிறப்பாக வழங்கினார். தலைவர் கோபண்ணா அவர்களுக்கு நன்றி சொல்வேன். இதனை அச்சிட உதவிய இன்ஸ்டென்ட் பிரஸ் ஜெ.ஜவஹர் அவர்களுக்கும் வெளியிட்டு ஆதரித்த சென்னை மணிமேகலை பிரசுரத்திற்கும் இதய பூர்வ நன்றியைச் செலுத்துகிறேன்.

உங்கள், வை.ஜவஹர் ஆறுமுகம்.

**தமிழ்க் காவியமாய் குமரி அனந்தன்.**

1.தமிழகத்தின் மிக மூத்த அரசியல் தலைவர் குமரி அனந்தன் அவர்களின் வரலாறு தனித்தன்மை கொண்டது. கன்னியாகுமரியின் அகத்தீஸ்வரம் எனும் சிறிய ஊரில் பிறந்து தமிழ் வளத்தால் உயர்ந்து டெல்லி பாராளுமன்றத்தை அதிரச் செய்த ஒரு வீரத் தமிழனின் வரலாறு அது.



பெருந்தலைவர் கமாராஜ் அவர்களின் அரசியல் ஆளுமை குறித்து நூல்கள் எழுதினேன். அவரால் வளர்க்கப்பட்ட "இலக்கியச் செல்வர்" குமரி அனந்தன் அவர்களைப் பற்றியும் எனை எழுதிடத் தூண்டுவது காமராஜரின் ஆன்மா என்றே நம்புகிறேன்.

குமரி அனந்தனுக்கும் எனக்கும் 50ஆண்டுகளுக்கும் மேலான தொடர்பு. நெருக்கமான நட்பு. இதற்கு அவரது ஈர்ப்பான தமிழ்ப் பேச்சாற்றல் ஒரு காரணம் என்றால் இன்னொரு காரணம் நான் போற்றி வணங்கும் காமராஜரால் அடையாளம் காணப்பட்டு வளர்க்கப்பட்டவர் என்பது.

1966-ஆம் ஆண்டு நான் திருச்சி தேசியக் கல்லூரி உயர்நிலைப்பள்ளியில் 11ம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன். திருவானைக்காவலில் இருக்கும் ரெங்கூன் ரெட்டியார் சத்திரத்தில் (இலவசமாக உணவு, தங்குமிடம்) தங்கியிருந்தேன். ஒரு நாள் மாலை திருவானைக்காவல் மேற்கு கோபுரம் அருகே காங்கிரஸ் பொதுக் கூட்டம் நடந்தது. நான் வேடிக்கை பார்க்கப் போனேன். குமரி அனந்தன் சிறப்புரை என்று போஸ்டரில் பார்த்தேன். மேடையில்குமரியாக எந்தப் பெண்ணையும் காணவில்லை, குமரி அனந்தன் வரலியா என்று கேட்டேன். அவர் தான் மேடையில் பேசிக்கொண்டிருக்கிறார் என்று காட்டினார்கள். அதிர்ந்து போனேன். அதுவரை குமரி அனந்தன் ஒரு பெண் பேச்சாளர் என்று நினைத்திருந்தேன்.

அன்று குமரி அனந்தனின் பேச்சு என்னைக் கவர்ந்தது. கன்னியாகுமரியின் பெருமைகளையும், அழகையும் வர்ணித்த அவர் இந்தியாவின் பாதம் என்று வணங்கப்படும் குமரியில் வாழும் நாங்கள் ரயிலை இன்னும் பார்த்ததில்லை. உங்கள் ஊருக்கு வந்து கொண்டிருக்கும் ரயில்களை இந்தி எதிர்ப்பு எனும் பெயரில் கொளுத்துகிறீர்களே இது நியாயம்தானா? என்று கேட்டார்.

அதற்குப் பிறகு 1968-ல் பீமாநகர் மா.முருகேசனுடன் குமரி அனந்தனை நேரில் சந்திக்கும் வாய்ப்பு. அப்போது குமரி அனந்தனின் தம்பி நவநீதகிருஷ்ணன் திருச்சியில் தங்கி படித்துக் கொண்டிருந்தார். எனக்கு குமரி அனந்தனை அறிமுகப்படுத்தியது பீமநகர் மா.முருகேசன் தான். படித்து விட்டு கொஞ்ச நாள் சும்மா திரிந்தேன். திருமணம் வேறு அப்போதே ஆகிவிட்டது. அப்பா வயதான காலத்தில் கடைசி மகனான எனது திருமணத்தைக் காணவேண்டும் என்பதற்காக 18 வயதிலேயே எனக்குத் திருமணத்தை நடத்திவிட்டார்.. வேலைக்காக அலை மோதிய நான் பெட்ரோல் பங்கில் கொஞ்ச நாள், வக்கீல் குமாஸ்தாவாக கொஞ்ச நாள் என காலத்தை ஓட்டினேன்.

- தொடரும்.........



N.R.N.Group
போன்:044-26790587
பிரியா டிப்போ
கீத்து, மூங்கில், சவுக்கு, கட்டை, கரி, கல்போஸ்ட், தார்சீட், செங்கல், மணல், ஜல்லி, சிமெண்ட் கிடைக்கும்.
2/166, மவுண்ட் பூந்தமல்லி டிரங்க் ரோடு, எம்.எஸ்.எஸ்.நகர், காட்டுப்பாக்கம், சென்னை-56.



# அருமை அண்ணாச்சி



கலைமாமணி டாக்டர் வி.ஜி.சந்தோசம் தலைவர் வி.ஜி.பி.குழுமம்.

**சேர்ந்தவர் பிரிந்தார்:**

இனிய வசந்தனே,

அண்ணியார் எங்கள் வீட்டில் கால் வைத்தது முதல் துன்பத்திலும் இன்பம் கண்டு மகிழ்ச்சியாக இருந்தோம். ஆனால் அந்த இன்பத்திற்கும் இடையூறு நேரும் நிலை ஏற்பட்டு விட்டதே! நான் எதைப் பற்றிக் குறிப்பிடுகிறேன் என்பது உனக்குத் தெரிய வாய்ப்பில்லை.. எங்கள் அனைவரையும் அதிர்ச்சிக்கு ஆளாக்கிய அந்தச் சம்பவம் அப்போது நடந்தது. ஆமாம்! எங்களை நாடி வந்த எங்கள் அன்பு அண்ணியார் கடைசிவரை எங்களோடு தான் இருக்கப் போகிறார் என்று நாங்கள் கட்டிய மனகோட்டை தவிடு பொடியாகும் எதிர் பாராத சூழ்நிலை அப்போது தான் உருவாகியது.

சென்னையிலிருந்து அண்ணியாரின் அப்பா மகளைத் தேடி எங்கள் கிராமத்திற்கு வந்து விட்டார். வந்தவர் தனியாக வரவில்லை. காவல் துறையைச் சேர்ந்த சிலரையும் உடன் அழைத்து வந்தார். காவல் துறையின் மூலம் தண்டிக்கும் அளவிற்கு அண்ணாச்சியோ, அண்ணியோ எந்தத் தவறும் செய்து விடவில்லை தான். ஆனால் மைனர் பெண்ணைக் கடத்தி வந்துவிட்டதாக அண்ணியின் அப்பா போலீஸில் புகார் செய்து விட்டார்.

அண்ணிக்கு அப்போது 18வயது ஆகாததால் சட்டம் அண்ணியின் அப்பாவிற்குத்தான் சாதகமாக இருந்தது. வேறு வழியின்றி வள்ளியூர்க் காவல் நிலையத்திற்கு நாங்கள் சென்றோம். தானே மனம் விரும்பித்தான் அண்ணாச்சியுடன் வந்ததாக அண்ணியார் கூறியும் காவல்துறையினர் கேட்கவில்லை" சட்டப்படியான செயல்களை செய்ய அவர்கள் முற்பட்டார்கள்.



மைனர் பெண்ணைக் கடத்தி வந்து கல்யாணம் செய்ததால் அக்கல்யாணமே செல்லுபடியாகாது என்று கூறினார்கள். அந்தச் சூழ்நிலையில் நாங்களும் ஏழைகளாக இருந்ததால் எங்கள் உணர்ச்சிகளை யாரும் மதிக்கவில்லை. அண்ணாச்சியிடமிருந்து அண்ணியை நிரந்தரமாகப் பிரிக்கும் காரியம் காவல் நிலையத்தில் நடந்துவிட்டது. ஆமாம் நண்பனே, அதைப்பற்றி உனக்கு எழுதுவதற்கே என் கைகள் கூசுகின்றன.



வள்ளியூர்க் காவல் நிலையத்தில், அண்ணியின் கழுத்தில் கட்டப்பட்ட தாலியைக் கழற்றி வீசிவிட்டு அண்ணியைச் சென்னைக்கு அழைத்துச் சென்றுவிட்டார் அவர்களின் அப்பா. அருமை அண்ணாச்சி அண்ணியைப் பிரிய மனமில்லாமல் துடித்தார்கள். அவர்களால் வேறு" ஒன்றும் செய்ய முடியாத சூழ்நிலை. இதில் வேடிக்கை என்ன வென்றால், அண்ணாச்சியின் பதிவுத் திருமணத்தின் போது எங்கள் ஊரைச் சேர்ந்த இரண்டு பெரிய மனிதர்கள் சாட்சிக் கையெழுத்துப் போட்டிருந்தார்களே அவர்கள் இருவரும் அப்போது தலைமறைவாகிவிட்டனர்.எனவே எங்களுக்காகப் பரிந்து பேச யாருமே அன்று இல்லை. "திக்கற்றவருக்குத் தெய்வமே துணை" என்ற பழமொழியை நினைத்துக் கொண்டு துன்ப நினைவுகளோடு வீடு திரும்பினோம்.

அண்ணியார் சில நாட்கள் தான் எங்கள் வீட்டில் இருந்தாலும் அந்த நாட்கள் எவ்வளவு மகிழ்ச்சியாகச் சென்றன? அவர்கள் இல்லாத வீடு வெறிச் சோடிக் கிடந்தது. அருமை அண்ணாச்சிக்கு மட்டுமல்ல எல்லலோருக்குமே அண்ணியின் பிரிவு மிகுந்த - வருத்தத்தைத் தந்தது. எவ்வளவு பாசமுடன் மைனி...மைனி...என்று அண்ணியைச் சுற்றிக் கொண்டிருந்தேன். என்னுடைய குழந்தைத் தனமான பேச்சும் பழக்கமும் அண்ணிக்குக் கூடப் பிடித்துப் போயிருந்ததே! அப்படிப்பட்ட அருமை அண்ணியை எங்களிடமிருந்து பிரித்துச் சென்று விட்டார்களே!

சில நாட்கள் பழகிய எங்களுக்கே அண்ணியின் பிரிவு மிகுந்த வருத்தத்தைத் தந்தது என்றால் உயிருக்கு உயிராக நேசித்த அருமை அண்ணாச்சிக்கு எப்படி இருந்திருக்கும்! என்ன தான் அம்மா ஆறுதல் கூறினாலும் அண்ணாச்சியால் மன அமைதியுடன் இருக்க முடியவில்லை. எப்படியும் மீண்டும் தன் அருமை மனைவியை அடைந்தே தீருவது என்ற உறுதியுடன் சென்னைக்குப் பயணமானார் அண்ணாச்சி,

அங்கு அவர் எப்படி அண்ணியைச் சந்தித்தார் என்பதை அடுத்த கடிதத்தில் எழுதுகிறேன்.


வாழ்க வளர்க ! உ

வீடு, மனை வாங்கவும், விற்பனை செய்யவும் அணுகலாம் வாங்க !!

ஸ்ரீ அருள் ஏஜென்ஸீஸ்

ரியல் எஸ்டேட்



M.L. சுவாமி

No. 59, 1st Floor, Arcot Road, Valasai to Porur, Chennai - 116.

Cell : 98410 74090 [94443 42707] RE - Invesments - Joint Ventures



செல்: 98405 57997, 98415 49955

V.S.குமார் ரியல் எஸ்டேட்

வீடு, மனை, வாங்க விற்க அணுகவும், வீடு, ஆபிஸ், கடை, குடோன் கம்பெனி வாடகைக்கு அணுகவும்.

டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை, வளசரவாக்கம், சென்னை-87

## விநாயகர் சதுர்த்தி

ஆவணி மாதம் வரக்கூடிய வளர்பிறை சதுர்த்தி தினமே விநாயகரின் பிறந்தநாளாக பாவித்து அந்த தினமே விநாயக சதுர்த்தியாக கொண்டாடப்பட்டு வருகிறது. புராணக்கூற்றுப்படி தேவர்களை அரக்கர்களின் கொடுமையில் இருந்து காத்தருள பார்வதி தேவி தனது உடலில் பூசியிருந்த மஞ்சளை வழித்து ஒரு பிம்பமாக செய்ய அந்த மஞ்சளால் உருவாகியவரே பிள்ளையார் என்று அழைக்கப்படும் வினாயகப்பெருமான் ஆவார். புராணப்படி அன்னையின் ஆணையினை ஏற்று தேவியை சந்திக்க சிவபெருமானை தடுத்து நிறுத்திய காரணத்தால் சிவபெருமான் சினம் கொண்டு அவரது தலையை வெட்டி வீழ்த்திவிடுகிறார். ஆனால் கஜமுகாசுரனுக்கு வரம் அளித்திருந்தபடியால் யானையின் தலையை பார்வதியால் உருவாக்கப்பட்ட பிள்ளைக்கு பொருத்தியதால் யானை முகமும், மனித உடலுமாக மாறிப்போனார் என்பதும் புராணக் கதையாகும். வினாயகர் சதுர்த்தி அன்று காலையிலேயே வீட்டை சுத்தம் செய்து நல்ல நேரத்தில் களிமண்ணால் செய்த வினாயகர் சிலையை வீட்டுக்கு கொண்டு வரவேண்டும். வினாயகருக்கு வினாயக சதுர்த்தி அன்று பூஜை செய்ய உகர்ந்த நேரம் மாலை வேளையே சிறந்ததாகும். காலை மற்றும் மதிய நேரத்தில் விரதம் இருந்து சதுர்த்தி பிறையை தரிசித்து வழிபாடு மேற்கொள்ளவேண்டும். வினாயகருக்கு அருகம்புல் மாலை, தும்பை பூ மாலை மற்றும் எருக்கம்பூ மாலை அணிவித்து வழிபடுவதே

-அருட்பணிசெம்மல் S.V.சிவசம்பந்த நாடார்,
தஞ்சை(வ) மாவட்ட அவைத்தலைவர்,
பெருந்தலைவர் மக்கள் கட்சி,
கும்பகோணம், 9245344808.



சிறப்பு மிகுந்ததாகும். நமது வசதிக்கேற்ப பட்சணங்கள் செய்து வழிபடலாம். அவற்றில் குறிப்பாக மோதகம், கொழுக்கட்டை, பால், தயிர், தேன், அவல், பொரி, கடலை, சர்க்கரை, பேரீச்சை, தேங்காய், விளாம்பழம், வெள்ளரிக்காய், கொய்யாப்பழம், நாவல்பழம், வாழைப்பழம், மாதுளை மற்றும் லட்டு, சுண்டல் செய்து வினாயகருக்கு நிவேத்தியம் செய்யவேண்டும். அதன்பிறகு தூப தீபம் காட்டி நாம் உணவு உட்கொள்ளவேண்டும். மூன்று நாட்களுக்கு பிறகு வீட்டில் வைத்து வழிபட்ட வினாயகர் சிலையை உரிய முறையில் பூஜைகள் செய்து நீர்நிலைகளில் சேர்ப்பித்துவிடவேண்டும். எளியவர்க்கும் எளியவன் ஆன சிவன் மகன் நமக்கு ஓடோடிவந்து அருள்புரிவதில் அவருக்கு நிகர் அவரே.

மண்ணைக் குழைத்து பிடித்து வைத்தாலும் சரி. மஞ்சளைக் குழைத்து பிடித்து வைத்தாலும் சரி. நமக்கு பிடித்த எந்தப் பொருளைப் பிடித்து வைத்தாலும் ஓடோடிவந்து அப்பொருளில் அமர்ந்து அருள்பாலிக்கும் முதற்கடவுள் அவரே ஆவார். அவருடைய உருவமானது ஓங்கார வடிவம் கொண்டது. அவர் இருக்கும் இடத்தில் காரியத்தடையே இருக்காது என்பது நிதர்சனமான உண்மை.

## கேள்வி? பதிலில்?...... முதியோர் நல மருத்துவம்

பத்மஸ்ரீ டாக்டர்.வி.எஸ்.நடராஜன், மூத்த முதியோர் நல மருத்துவம்.044-26412030.

### மூட்டு, எலும்புகளின் நலம்

மூட்டு, எலும்புகளின் நலம்

கேள்வி:

குதிகாலில் வலி வருவதற்கு காரணம் என்ன?

பதில்:

காலையில் ஏற்படும் குதிகால் வலிக்கு மிக முக்கியமான காரணம் கால்கேனியல் ஸ்பர் (Calcaneal Spur) என்னும் தொல்லைதான். கால்சியம் குதிகால் எலும்பில் அதிகமாகப் படிந்துவிடுவதனால் இந்தப் பிரச்சனை ஏற்படுகிறது.

சிகிச்சை முறை:

❖சரியாக பொருந்தும் காலணிகளை அணிவது.
❖கால்களுக்கு உடற்பயிற்சி செய்வது.
❖இயன்முறை சிகிச்சை
❖வலி நிவாரணி மாத்திரைகள்.
❖உடல் பருமனை குறைத்தல்
❖சரியாக நடக்கப் பழகுதல்

மேற்கூறிய சிகிச்சைகளுக்குப் பலன் இல்லை எனில், சிலருக்கு அறுவை சிகிச்சை செய்ய வேண்டியிருக்கும்.

**வயிறு, குடல்களின் நலம்:**

கேள்வி: வயதான காலத்தில் விக்கல் ஏற்பட்டால் அது உயிருக்கே ஆபத்தான அறிகுறி என்கிறார்கள். இது எந்த அளவிற்கு உண்மை? விக்கல் ஏற்பட்டவர்களிடம் திடீரென்று மிக்க அதிர்ச்சியைக் கொடுக்கும் செய்தியைச் சொன்னால் விக்கல் நின்றுவிடும் என்கிறார்களே, உங்களின் கருத்து என்ன?

பதில்:-விக்கல் என்பது ஒருவருடைய உதறுவிதானம் அவரை அறியாமலேயே துடிப்பதால் (Involuntary diahragmatic Contractions) ஏற்படும் ஒரு சப்தமே ஆகும்.

காரணங்கள்:

வயிற்றில் ஏற்படும் அதிக வாயுத்தொல்லை
சிறுநீரகம் செயல் இழத்தல் யூரியா அதிகரித்தல்
தொடர்ந்து வாந்தி ஏற்படும் பொழுது
அடி மூளையில் பாதிப்பு ஏற்படும் பொழுது
மனப்பதற்றம்
உதரவிதானத்திற்கு கீழே ஏற்படும் சீழ்கட்டி

எந்த காரணமும் இன்றி விக்கல் ஒரு சில மணித்துளிகள் மட்டுமே வந்து போவதைப் பற்றி கவலைப்பட தேவையில்லை. விக்கல் தொடர்ந்து இருப்பின் உடனே மருத்துவரைநாட வேண்டும். முதலில் விக்கலுக்கான காரணத்தைக் கண்டறிந்து அதற்கு தக்க சிகிச்சை அளிக்க வேண்டும். விக்கல் என்றாலே உயிருக்கு ஆபத்து என்று எண்ண வேண்டாம். மேலும் உங்களுடைய யோசனைப்படி சற்று அதிர்ச்சி தரும் செய்தியைக் கூறிவிக்கலோடு முதியவரின் உயிரையும் நிறுத்த நான் ஒரு காரணமாக இருக்க விருப்பமில்லை. தங்களின் ஆலோசனைக்கு மிக்க நன்றி!

**தொகுப்பு: - எல்மாமதி..**


# ஸ்ரீ முருகன் ஸ்டோர்ஸ்

**மளிகை மொத்தம் , சில்லரை வியாபாரம்**

**Prop.S.ராமசாமி நாடார்,** Ph:22243263, Res:22671263, 9444150666.

**நங்கநல்லூர், பழவந்தாங்கல் வட்டார வியாபாரிகள் சங்க ஸ்தாபகர் மற்றும் நங்கநல்லூர், பழவந்தாங்கல் நாடார் சங்க தலைவர்.**

36, 4வது மெயின் ரோடு, நங்கநல்லூர், சென்னை-600 061.



## இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்:சிவஞானபுரம், சேர்வைகாரன்மடம் அஞ்சல், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-1.2.1996, நிறம்-சிவப்பு, உயரம்-5.7, ராசி-மிதுனம், நட்சத்திரம்-திருவாதிரை, படிப்பு-B.Com., MBA., வேலை-பிரான்சு நாட்டு வங்கி, வருடம்:7,05,000வருமானம் இந்த மணமகளுக்கு, படித்த வேலையிலுள்ள சென்னையில் வேலை பார்க்கும் மணமகன் தேவை.

| | | | |
|---|---|---|---|
| கே மாந் | | | சந் லக் |
| சுக் சனி | இராசி | | |
| சூரி செவ் | | | |
| புத குரு | | | குரு |

| | | | |
|---|---|---|---|
| | சனி | சுக் | சூரி |
| கே மாந் | அம்சம் | | குரு |
| சந் | | | செவ் ராகு |
| | | புத லக் | |

தொடர்புக்கு:9381333339, 9444844884. File No:P-792-G.

## இந்து நாடார் மணமகன் தேவை.

சொந்தஊர்:மேட்டுக்குடியிருப்பு, அஞ்சுகிராமம் அருகில், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-14.6.1993, நிறம்-சிவப்பு, உயரம்-156செ.மீ, ராசி-மீனம், நட்சத்திரம்-ரேவதி, படிப்பு-B.E., கணினி பொறியாளர், மாதவருமானம்-50,000 பெறும் இந்த மணமகளுக்கு, அரசு தனியார் பணியில் வேலை உள்ள செவ்வாய் தோஷமுள்ள மணமகன் தேவை. 9444605293, 9444606140. File No:M-223-G.

| | | | |
|---|---|---|---|
| சுக் | சுக் | சூரி கேது | புத |
| சனி | இராசி | | |
| | | | செவ் |
| | ராகு | | லக் குரு |

| | | | |
|---|---|---|---|
| லக் | செவ் குரு | புதன் | கேது |
| | அம்சம் | | |
| சந் | | | சுக் |
| சனி ராகு | | | சூரி |

## இந்து நாடார் மணமகன் தேவை.

சொந்தஊர்-காரிக்கோவில், குண்டல், திசையன்விளை அருகில், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-30.9.1995, வயது-27, நிறம்-மாநிறம், ராசி-விருச்சிகம், நட்சத்திரம்-கேட்டை, உயரம்-5.3, படிப்பு-M.E, வேலை-Assistant Professor., மாதவருமானம்-30,000 பெறும் இந்த மணமகளுக்கு நல்ல குடும்பம், நன்கு படித்த நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. 9445307067, 9445426581.File No:M-154-G

| | | | |
|---|---|---|---|
| | கேது | லக் | |
| சனி | இராசி | | |
| | | | |
| | சந் வியா | செவ் ராகு | சூபு சுக் |

| | | | |
|---|---|---|---|
| லக் சந் | சூசெ கேது | | |
| சனி | அம்சம் | | சுக் |
| புத | | | |
| வியா | | ராகு | |


# ஸ்ரீ பாலாஜி நாடார் திருமண தகவல் மையம்



நாடார் சமுதாயத்தின் கைராசியான திருமண தகவல் மையம் எங்களிடம் குமரி மாவட்டம், நெல்லை, தூத்துக்குடி, விருதுநகர் மற்றும் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நாடார்களுக்கும் (இந்து, கிறிஸ்தவர்) வட்டார பழக்கத்திற்கேற்ப வரன் பார்த்து தரப்படும்.

**முகவரி: எண்:389,** T.H.Road, (மெட்ரோ பில்லர் எண்-184), **திருவொற்றியூர், சென்னை-19.**

**ஒருமுறை பதிவு கட்டணம் ரூபாய்-3000 மட்டும்.**
**நகை ரொக்கத்திற்கு கமிஷன் கிடையாது.**
**நிறுவனர்- ஆர்.சத்தியவான், நாகர்கோவில்- 9444247847.**
**தொடர்பு எண்: 044-43508080, 7299989798, 9789848995.**



# நாடார் நவீன சுயம் வரம்



## இந்து நாடார் மணமகன் தேவை.

சொந்தஊர்:திருச்செந்தூர் மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-19.9.1991, நிறம்-மாநிறம், உயரம்-5.4, ராசி-மகரம், நட்சத்திரம்-திருவோணம், படிப்பு-B.E., (ECE), Private Company, இந்த மணமகளுக்கு, நன்கு படித்து நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. 9600701927, 7358260567. File No:M-193-G.

| | | | |
|---|---|---|---|
| | | லக் | கே |
| | இராசி | | |
| சந் | | | சுக்பு<br>குரு |
| சனி<br>ராகு | | | சூரி<br>செவ் |

| | | | |
|---|---|---|---|
| லக் | கேசந்<br>சுக் | | குரு<br>செவ் |
| | அம்சம் | | |
| சூரி | | | |
| சனி<br>புத | | ராகு | |

## இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்:மடத்தூர், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-2.11.1998, நிறம்-சிவப்பு, உயரம்-5.3, ராசி-மீனம், நட்சத்திரம்-ரேவதி, படிப்பு- B.Com.,MBA., இந்த மணமகளுக்கு, படித்து நல்ல வேலையிலுள்ள அல்லது பெரிய அளவில் தொழில் செய்யும் மணமகன் தேவை. தொடர்புக்கு:9444416716, 9445073249, File No:-P-989-G

| | | | |
|---|---|---|---|
| சனி<br>சந் | | | |
| வியா<br>கேது | இராசி | | |
| | | | செவ்<br>ராகு |
| லக் | புத | சூரி<br>சுக் | |

| | | | |
|---|---|---|---|
| (வ)<br>சனி | ராகு | (வ)<br>வியா | |
| சூரி<br>சுக் | அம்சம் | | |
| | | | |
| சந் | லக் | கேது | செவ்<br>புத |

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:அஜிதா. சொந்தஊர்-நாதன்கிணறு, திருச்செந்தூர் தாலுகா, தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை-42, பிறந்ததேதி-24.6.1995, உயரம்-5.6அடி, நிறம்-மாநிறம், ராசி-மேஷம், நட்சத்திரம்-கார்த்திகை 1ஆம் பாதம், படிப்பு-B.Arch., M.Arch., வேலை-M.Arch., Management, Chennai, இந்த மணமகளுக்கு, நன்கு படித்து சென்னையில் பணிபுரியும், நல்ல வருமானம் பெறும் மணமகன் தேவை. தொடர்புக்கு:9444452749, 9444317372.9790805050 File No:P-519-G.

| | | | |
|---|---|---|---|
| | சந்<br>கே | புத<br>சுக் | சூரி |
| சனி | இராசி | | |
| | | | செவ் |
| | குரு | ராகு | லக் |

| | | | |
|---|---|---|---|
| | சனி | | கே |
| | அம்சம் | | புத<br>சுக் |
| | | | |
| சூசந்<br>ராகு | குரு | செவ் | லக் |

## C.S.I.கிறிஸ்தவ நாடார் மணமகன் தேவை.

சொந்தஊர்:அருலூர், சாத்தான்குளம், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-20.6.1999, உயரம்-164செ.மீ, நிறம்-மாநிறம், படிப்பு-B.Com., இந்த மணமகளுக்கு, நன்கு படித்த நல்ல மணமகன் தேவை. தொடர்புக்கு:9380747220, 9962562333, File No:CSI-450-G.

## R.C.கிறிஸ்தவ நாடார் மணமகன் தேவை.

சொந்தஊர்-திசையன்விளை, திருநெல்வேலி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-9.10.1994, உயரம்-155செ.மீ, நிறம்-மாநிறம், படிப்பு-B.E., (CSC)., Associate Projects Cognizant Technical Solutions C.T.S. Sholinganallur., மாதவருமானம்-50,000 பெறும் இந்த மணமகளுக்கு, படித்து நல்ல வேலையிலுள்ள நல்ல குணமுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு:9750060420, 9884488187. File No:RC-329-G.

## இந்து நாடார் மணமகன் தேவை.

சென்னையில் வசிக்கும் பெண் பிறந்ததேதி-2.7.1998, கல்வி: B.Sc., (CSC)., MBA., படித்து Engineer துறையில் மாதம் 50ஆயிரம் மேல் பெறும் இந்த மணமகளுக்கு நன்கு படித்த நல்ல வேலையில், சென்னையில் உள்ள மணமகன் தேவை. 8056343725.

## மறுமணம் இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்:சிந்தாமணி, புளியங்குடி, , இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-26.9.1989, நிறம்-மாநிறம், உயரம்-5.3, ராசி-கடகம், நட்சத்திரம்-ஆயில்யம், படிப்பு-B.E., Computer Science., மாதவருமானம்-30,000 பெறும் இந்த மணமகனுக்கு, Software / Engineer/ B.E படித்த மணமகன் தேவை. தொடர்புக்கு:9840629943, 9790969298. File No:M-228-G

| | | | |
|---|---|---|---|
| | | | வியா |
| | இராசி | | கேது சந் |
| ராகு | | | புத |
| சனி | | லக் சுக் | சூரி செவ் |

| | | | |
|---|---|---|---|
| சூரி கேது | செவ் சுக் | | சனி |
| வியா சந் | அம்சம் | | |
| லக் | | | |
| | சனி | | ராகு |

## C.S.I.கிறிஸ்தவ நாடார் மணமகன் தேவை.

சொந்தஊர்-நெல்லை, இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-3.8.1994, வயது-28, உயரம்-5.3, நிறம்-நல்ல சிவப்பு, படிப்பு-MBBS., MS., OG., நல்ல வசதி உள்ள குடும்பம் எதிர்பார்ப்பு, MD., MS., படித்த நல்ல குடும்பபாங்கான சென்னையில் இருக்கக்கூடிய மணமகன் தேவை. தொடர்புக்கு: 8148887767.

## இந்து நாடார் மணமகன் தேவை

சொந்தஊர்:தூத்துக்குடி குறுந்தன்விளை, இருப்பிடம்-திருவள்ளூர், திருவள்ளூர் மாவட்டம், பிறந்ததேதி-17.9.1995, நிறம்-மாநிறம், உயரம்-5.2, ராசி-ரிஷபம், நட்சத்திரம்-மிருகசீரிடம், படிப்பு-B.E., Computer Science., இந்த மணமகளுக்கு, படித்த நல்ல குணமுள்ள டிகிரி படித்து நல்ல வேலையில் உள்ள அல்லது தொழில் செய்யும் மணமகன் தேவை. 7200366727, 7550150236, 7299926727. File No:M-56-G.

| | | | |
|---|---|---|---|
| | கேது | சந் | |
| சனி | இராசி | | |
| | | | சூரி |
| | வியா | செ ராகு | லக்புத சுக் |

| | | | |
|---|---|---|---|
| புதசனி சூரி | கேது | | |
| | அம்சம் | | |
| லக்சூ செவ் | | | |
| | வியா | ராகு | சந் |





**Prop.S.Vijayan, Cell: 98403 53031. (0)044/ 26623031.**

# SRI LAKSHMI ENTERPRISES

Scaffollding & Shed contractor / School, College, Church & Construction Company / All Type Shed Works

28/54, Cooks Road, P.B. Chennai, Chennai-12.



# இலவச திருமணத் தகவல்

தொடர்புக்கு: 30, தேரடி தெரு,
சைதாப்பேட்டை, சென்னை-15.
போன்:23811087.

## மணப்பெண் பகுதி (பெண்) இந்திய நாடார் முரசு இலவச சேவை

இந்து நாடார் பகுதி

| எண் | ஊர் | வயது | கல்வித்தகுதி | தேவையான தகுதி | உயரம் | செல்நம்பர் | இராசி-நட்சத்திரம் | விவரம் | பெண் உரிமை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | கன்னியாகுமரி | 25 | ME,MBA | EngineerAbove1lakhssalary | 155 | 8056078586 | கடகம்-பூசம் | P942 | நேரில் |
| 2. | காயாமொழி | 25 | B.Sc,M.Sc | படித்துவேலை | 153 | 9444559709 | மேஷம்-பரணி1ம் | P943 | நேரில் |
| 3. | ஆறுமுகநேரி | 28 | B.Com,MBA | WorkingAbove75000salary | 5.2 | 9841488923 | மிதுனம்-புனர்பூசம் | P944 | 50பவுன் |
| 4 | கோவில்பட்டி | 28 | M.E,B.Ed | படித்துநல்லவேலைநல்லகுடும்பம் | 5.4 | 9444015358 | கன்னி-அஸ்தம்2 | P946 | நேரில் |
| 5 | வரண்டியவேல் | 27 | M.E | டிகிரிநல்லவேலைவருமானம் | 163 | 9382843271 | கன்னி-சித்திரை2 | P947 | நேரில் |
| 6 | தென்காசி | 24 | B.E | படித்து வேலை | 5.4 | 9629198823 | பூராடம்-தனுசு | P948 | நேரில் |
| 7 | ஆறுமுகநேரி | 32 | MBA | நல்லவேலைவருமானம் | 164 | 8939370823 | கன்னி-அஸ்தம் | P949 | 25பவுன் |
| 8 | தூத்துக்குடி | 21 | B.Com,MBA | படித்துவேலை | 5.4 | 9444439182 | கும்பம்-புரட்டாதி | P950 | நேரில் |
| 9 | தூத்துக்குடி | 26 | B.Com,MBA,CAFinal | WorkingAbove1.50L sal- | 5.4 | 9962083106 | மேஷம்-அஸ்வினி | P951 | 50பவுன் |
| 10 | தூத்துக்குடி | 24 | B.Tech,MBA | ary | 5.4 | 9841775298 | தனுசு-பூராடம் | P952 | 100பவுன் |
| 11 | காயாமொழி | 33 | B.Tech | WorkingAbove 2L salary | 5.6 | 9176233235 | ரிஷபம்-ரோகிணி | P953 | நேரில் |
| 12 | திருநெல்வேலி | 43 | 9th | ITJob(USA,UK,Jermany) | - | 9940588141 | ரிஷபம்ரோகிணி3ம் | P954 | மறுமணம் |
| 13 | தூத்துக்குடி | 28 | B.Sc | மறுமணம் | 160 | 9790899979 | விருச்சிகம்-அனுசம் | P955 | 35பவுன் |
| 14 | திருநெல்வேலி | 27 | B.Com | டிகிரி படித்த | 4.5 | 9324173627 | மிதுனம்-புனர்பூசம் | P956 | மறுமணம் |
| 15 | தூத்துக்குடி | 28 | MBA | படித்துவேலை/தொழில் | 163 | 9941914438 | விருச்சிகம்-கேட்டை | P957 | 40+2 |
| 16 | திருச்செந்தூர் | 26 | B.Com | படித்துவேலை | 5.2 | 9941519006 | சிம்மம்-மகம் | P958 | நேரில் |

## C.S.I.நாடார்

| எண் | ஊர் | வயது | கல்வித்தகுதி | தேவையான தகுதி | உயரம் | | செல்நம்பர் | விவரம் | பெண் உரிமை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | சாத்தான்குளம் | 27 | BCACS | கடவுள் பக்தியுள்ள | - | சென்னை | 9444863510 | 444G | 25பவுன் |
| 2 | திருநெல்வேலி | 30 | M.Sc,B.Ed,M.Ed | நல்லவேலைவருமானம் | 5.2 | சென்னை | 9750143051 | 445G | நேரில் |
| 3 | சிவகாசி | 24 | M.Sc | படித்துவேலை | 5.3 | சென்னை | 7092429525 | 446G | - |
| 4 | திருநெல்வேலி | 34 | M.Sc,B.Ed | நல்லவேலை-மறுமணம் | 5.2 | சென்னை | 9597694700 | 447G | மறுமணம் |

R.C.நாடார்

| எண் | ஊர் | வயது | கல்வித்தகுதி | தேவையான தகுதி | உயரம் | | செல்நம்பர் | விவரம் | பெண் உரிமை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | சென்னை | 28 | B.Com | படித்துவேலை | 5.3 | சென்னை | 9840425192 | 352G | நேரில் |
| 2 | தூத்துக்குடி | 31 | B.E | நன்கு படித்து வேலை | 5.2 | சென்னை | 9884512430 | 353G | 50+2 |
| 3 | திருசெந்தூர் | 23 | M.Sc | படித்துவேலை | 154 | சென்னை | 9962111618 | 355G | நேரில் |
| 4 | கன்னியாகுமரி | 26 | M.Sc | படித்துவேலை | 154 | சென்னை | 9042109958 | 357G | நேரில் |

நாடார் வாழ்களுக்கான நம்பிக்கையான இடம்
இம்பம்
திருமண தகவல் மையம்
என்றென்றும் நமது பாரம்பரியத்தின் அடையாளம்....
இந்து / கிறிஸ்தவ நாடார்கள் தங்கள் வட்டார பழக்க வழக்கத்திற்கேற்ப வரன்கள் பார்த்து தருகிறோம்.
மறுமணமும் உண்டு.

மின்னல் H.ஸ்டீபன் உரிமையாளர்
எண்.1. ஸ்டேசன்ரோடு. சானடோரியம். சென்னை - 600 047.
தொடர்புக்கு : 7299 55 65 91 / 8939 500 381 / 955 16 16 103






## ஸ்ரீ சரவணா ஸ்டோர்ஸ்

**சூப்பர் மார்க்கெட்**

**ஈகை வியாபாரிகள் நல சங்கம் வி.சரவணராஜ் தலைவர்**
**செல்9445171819, 044-22253484.**
2/33, அம்பாள் நகர் மெயின் ரோடு, ஈக்காட்டுத்தாங்கல்,
சென்னை-32.



# Velan Kraft House (P) Ltd.



**Raw Material Suppliers To Paper Mills - Since 1972**

**R.Santhana Krishnan Director**

Ad.off:2-C, First Main Road, Shastri Nagar, Adyar, Chennai-600 020.
Mobile: 9840817442, 99625 17442, 80123 17442 E-mail:Velankraft@yahoo.com
Web:www.velankraft.com

உ

**Cell : 98402 87570**

# மங்களஈஸ்வரி

**திருமண தகவல் கூடம்**





**(அனைத்து சமூகத்தினருக்கும்)**
**(நேரம் : காலை 10.00 - பிற்பகல் 2.00**
**மாலை 4.00 - 7.00)**

**எண். தெற்கு மாடவீதி, திருமுல்லைவாயல், சென்னை-62.**

## தோல்வியை ருசியுங்கள்! வெற்றியை ரசியுங்கள்!! Aachi

## தொழில் மேதை.ஏ.டி.பத்மசிங் ஐசக் வெற்றிப் படிகள்

### உணவு உலகத்து அதிசயங்களும்... ஆச்சரியங்களும்...

"பாகிஸ்தானில் உள்ள சிந்து மாநிலம்தான் சன்னா மசாலாவின் பிறப்பிடம். கிறிஸ்து பிறந்த பின்புதான், இதன் சுவை உலகிற்கு அறிமுகமாகியிருக்கிறது" என்று பத்மசிங் ஐசக் சொன்னார்.

'அப்போது இந்தியாவும், பாகிஸ்தானும் ஒன்றாகத்தானே இருந்தது. அதனால் நாமும் சன்னா மசாலாவுக்கு சொந்தம் கொண்டாடலாம்தானே?' - என்றேன்.

"சிந்து பகுதியில் இருந்து பஞ்சாப், ராஜஸ்தான் போன்ற எல்லைப்பகுதிகளுக்கு சன்னா மசாலாவின் சுவை பரவியிருக்கிறது. அவர்கள்தான் முதலில் சன்னா மசாலாவின் ருசியை அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது தென்னகத்தில் சுண்டல்தான் சாப்பிட்டுக்கொண்டிருந்தோம்.

ஆங்கிலேயர்கள் இந்தியாவிற்குள் வந்து சன்னா மசாலாவின் ருசியை தெரிந்து கொண்டார்கள். அவர்கள் ஆதிக்கம் பரவ பரவ சன்னா மசாலாவின் சுவையும் அவர்கள் மூலம் இந்தியா முழுவதும் பரவியது. இப்போது கிட்டத்தட்ட எல்லா வீட்டு சமையல் அறைகளிலும் சன்னா மசாலா தயாராகிக்கொண்டிருக்கிறது" என்று பத்மசிங் ஐசக் சரித்திர விளக்கம் தந்தார்.

'என்ன இருந்தாலும் நாம் அரிசிப் பிரியர்கள். சாதம், இட்லி, தோசை, இடியாப்பம், புட்டு, பொங்கல் என்று சாப்பிட்டு பழக்கப்பட்டுவிட்டோம். நமது அரிசிக்கும் பெரும் வரலாறு இருக்குமே?' -என்று அவரிடம் கேட்டேன்.

"சுமார் ஐந்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நெல் பயிரிட்டிருக்கிறார்கள். இப்போது இந்தியா, சீனா, இந்தோனேஷியா போன்ற நாடுகளில் அரிசி அதிகமாக பயன்படுத்தப்படுகிறது. அந்த நாடுகளில் எல்லாம் அரிசியின் தோற்றத்திற்கு பல்வேறு ருசிகரமான கதைகளை சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அவைகளில் இந்தோனேஷிய நாடோடிக்கதை ஒன்று, பழம் பறிக்க சென்ற பாட்டி நெல்மணியை கண்டுபிடித்ததாக சொல்கிறது. பழமரங்களை பாட்டி தேடி அலைந்தபோது, ஒரு வயலில் நெல்மணிகள் விளைந்து கிடந்திருக்கிறது. அவர் அதை உருவி வந்து மென்று தின்றிருக்கிறார். அரிசி தென்பட்டிருக்கிறது. பின்பு இடித்து, உமி நீக்கி சாப்பிடும் முறை வந்திருக்கிறது.

நாம் காலங்காலமாக அரிசி உணவுகளை சாப்பிட்டு வந்திருக்கிறோம். ஆனால் அமெரிக்கர்களுக்குத்தான் அரிசி பற்றி வெகுகாலம் தெரிந்திருக்கவில்லை. அங்கு கி.பி.1726-ம் ஆண்டுதான் அரிசி அறிமுகமாகி இருக்கிறது."



எங்கள் பேச்சு அப்படியே மிளகாய்த்தூள் பக்கம் திரும்பியது.

"கி.மு. ஏழாயிரத்திலே இந்தியாவில் மிளகாய் இருந்ததாக வரலாற்று குறிப்புகள் சொல்கின்றன. இப்போது கிட்டத்தட்ட 450 வகை மிளகாய் இருப்பதாக ஆய்வாளர்கள் சொல்கிறார்கள். இந்த ஆராய்ச்சியில் முன்னணியில் அமெரிக்கா நிற்கிறது. அங்கு இப்போதும் மிளகாய் பற்றிய ஆராய்ச்சி தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இன்றைய நவீன மிளகாய்த்தூள் தயாரிப்பு முறையின் தந்தையாக அமெரிக்கர்தான் இருக்கிறார். டிவிட் கிளிண்டன் (முன்னாள் அமெரிக்க அதிபர் கிளிண்டனின் மூதாதையர்போல் தெரிகிறது!) என்பவர் 1890ம் ஆண்டு மிளகாயை காயவைத்து பொடியாக்கும் முறையை அறிமுகம் செய்தார். அதை மேம்படுத்தி வில்லியம் ஷெப்ஹார்ட் என்பவர் 1902ம் ஆண்டு மிளகாய்த் தூளை முறையாக தயாரித்தார். இன்று மல்லி, மஞ்சள், பருப்பு வகைகள் கலந்து மிளகாய்த்தூள் தயார் செய்வதற்கும் முன்னோடி வில்லியம் ஷெப்ஹார்ட் தான்!" - என்ற பத்மசிங் ஐசக்கின் விளக்கம் புதுமையாக இருந்தது.

'குலோப் ஜாமூன் இன்று சக்கைபோடு போடுகிறதே! அதன் சரித்திரத்தையும் சொல்லிவிடுங்கள்' என்றேன்.

"நாம், ஒரு உணவை சிறந்தது என்று சொல்ல வேண்டும் என்றால் அது நமது மூக்கு, கண் நாக்கு ஆகியவைகளை ஒரு சேர ஈர்க்கும் தன்மை கொண்டதாக இருக்க வேண்டும். அது தூரத்தில் இருக்கும்போதே நமது மூக்கிற்கு மணத்தை பரப்ப வேண்டும். அருகில் வந்ததும் கண்களை கவர வேண்டும். நாக்கில் அப்படியே உமிழ் நீரை சுரக்க செய்யவும் வேண்டும். இப்படி மூக்கு, கண், நாக்கு இந்த மூன்றையும் கவரும் உணவு எதுவோ அது மக்களிடம் நன்றாக பிரபலமடைந்துவிடும். அந்த உணவு ருசி நிறைந்ததாகவும், ஆரோக்கியத்திற்கு ஏற்றதாகவும் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட உணவுதான் குலோப் ஜாமூன். அதன் மென்மையும், ருசியும் மக்களை மீண்டும் மீண்டும் சுவைக்க வைக்கிறது. (தொடரும்)




R.S.SANTHANAM

Sri Brammasakthi Amman Thunai Sri Sudalaimadaswami Thunai

R.S.SANTHANAM

ரேவதி ஹார்டுவேர்ஸ்

Dealers in: Cement, Steel Quality Bricks, Sand, Blue Metal and Building Material Suppliers.

Stockist : Coramandel, ultra Tech, Zuari / Priya Cement

38/24-A, Poonamallee Road, Ekkattuthangal, Chennai-32. Ph:22252948, 22250015 Cell: 9840042948.



நாடார் வரன்கள்: R.C, CSI, இந்து நாடார்களுக்கு அனுகவும், IAS, IPS, IFS, IRS, MD,MS, B.E, M.E, MBA, MCA., மற்றும் தொழிலதிபர்கள், கம்பெனி, பில்டர்ஸ், கல்லூரி மற்றும் அரசு பணி மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் ஆண் பெண் வரன்களும், வி.ஐ.பி. டாக்டர் வரன்கள் ஏராளமாக உள்ளன

தொடர்புக்கு: K.K.M.மரிய ஜாண்சன் போன்: வாட்சப் எண்: 7373627729, 8148887767.

முகவரி:எம்.மரியஜாண்சன், எண்:8/3பி, கீழ்தளம், நேரு தெரு, சீனிவாசன்நகர், பாடி, சென்னை-600 050,

## GP கோபால் பிளாஸ்டிக்


S.இராஜகோபால்

**Dealers in :** எல்லாவகையான பிளாஸ்டிக் மெட்டிரியல் கிடைக்கும்
9, அரங்கப்பன்தெரு, (ஸ்ரீனிவாஸ்தியேட்டர்அருகில்), மேற்கு மாம்பலம்,சென்னை-33

## RS பிளாஸ்டிக்

உரிமையாளர்:S.ராஜகோபால், S.ஜெயராஜ்
நெ.16, உய்யாலிஅம்மன்கோயில்தெரு,திருநீர்மலை,சென்னை-44.
Cell:9444037465, 9840446688 Ph: 24891192. 24748148.


S.ஜெயராஜ்





N.R.P.செந்தில் நாடார், செல்:9841038856,

## N.R. பட்டுராஜன் டிரேடர்ஸ்

எங்களிடம் சிமெண்ட், மணல், ஜல்லி, தள ஓடு, கடப்பா கல், சுண்ணாம்பு, M.Sand, P.Sand. கிடைக்கும். **Email: senthilnrp@gmail.com**

4, ஆற்காட் ரோடு, கணபதி நகர், போரூர், சென்னை-116.



**உங்கள் இல்லத்தில் உடனே திருமணம் நடைபெற வேண்டுமா?**

Prop.K.A.Raman Nadar

## Sri.R.M.T.திருமண தகவல் மையம்



கைராசியான ஸ்தாபனம் மற்றும் இந்து, R.C, C.S.I. நாடார் வரன்கள் அமைத்து தரப்படும். MD, MBBS, M.E, M.SC, M.C.A மற்றும் IAS, IPS, VIP வரன்களுக்கு மில் தொழில் அதிபர் வரன்களுக்கு அணுகவும்.
106, ஆற்காடு ரோடு, வடபழனி, சென்னை-26.போன்:45588957, செல்:9380791999, 9841329471. E-mail:ramannadar2004@yahoo.co.in Web:www.srirmt.com


✞

ஆருயிர் நண்பன் **அதரியான் (எ) P.K. மார்,** வடக்கன்குளம்

## 9-வது நினைவஞ்சலி 15-09-2023

**மண்ணில்**
**15-07-1933**



**விண்ணில்**
**15-09-2014**

**எங்களது மலரும் நினைவுகள்**

பள்ளி பருவத்தில் பூஞ்சோலை வீதியில் சடுகுடு ஆடுவதை கிளியந்தட்டு மறிப்பதை

அதிகாலை 6 மணிக்கே செட்டியார் தோட்ட கிணற்றில் விழுந்து நீந்தி விளையாடுவதை

சங்கு வரதனின் படைப்பான வாத்தியாரம்மாவில் தாயாரிப்பு மேலாளராக பணியாற்றிய நீ,
பின்னணி பாடகர் P.B. ஸ்ரீனிவாசை திரை உலகிற்கு அறிமுகம் செய்ததை

பஞ்சாயத்து தலைவர் தேர்லில் வாலிப பட்டாளமே உன்பின் அணிவகுத்து நின்றும் பணநாயகத்ததால் நீ வீழ்ந்ததை

ராதாபுரம் காமராஜர் மருத்துவமனை Dr. முருகேசன், நமது நண்பன் வடவை புகழ் ரீ.பு. ராஜா,
இவர்கள் மீது நீ கொண்டிருந்த உண்மையான பாசத்தை

பின் நாட்களில் மதத்தால் பிரிந்து இரு துருவங்களாக மாறினாலும், நட்பினால் இணைந்து
இறுதிவரை மகிழ்ந்திருந்ததை

இறுதி மூச்சுவரை பெருந்தலைவரின் உண்மை தொண்டனாக இருந்து ஜாதி, மத, இன பேதமின்றி
மக்களுக்கு நீ ஆற்றிய மகத்தான மனித நேய தொண்டுகளை

.......மறக்கத்தான் முடியுமா?

இணைபிரியா நண்பன்
**D. M. ஜேம்ஸ் மார்ட்டின்**
தலைமை எழுத்தர் (ஓய்வு), மாவட்ட நீதிமன்றம், நாகர்கோவில்.
Cell : 9488129050

# ஆசிரியர் தினம்!!!

**வழங்குபவர்: - திருமதி.லீலாஸ்டீபன், மும்பை-78, செல்:022-40142398**

லீலா ஸ்டீபன்,

"மாதா பிதா, குரு, தெய்வம்"!!!

என்ற முதுமொழியில் குருவாம் ஆசிரியர் நம் பெற்றோருக்குச் சமமாகச் சேவிக்கப்படுகிறார் எனத் தெரிகிறது. நாட்டின் நற்குடிமக்களை உருவாக்குவதில் முதற்படியாயய் திகழ்பவர்கள் ஆசிரியர்களே. ஆண்டு முழுவதும் மாணவர்களுக்காக அரும்பணியாற்றும் அவர்களை ஆண்டில் ஒரு நாளாவது சிறப்பிப்பது இச் சமூதாயத்தின் கடமையாகும்.

நம் சுதந்திர இந்தியாவின் இரண்டாவது குடியரசுத் தலைவராக இருந்த டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் 5ஆம் தேதி ஆண்டுதோறும் "ஆசிரியர் தினமாகக் கொண்டாடப்படுகின்றது. (05.9.1888) இவர் ஆசிரியராகப் பணியாற்றி குடியரசுத் தலைவராக உயர்ந்தவர். ஆசிரியப் பணிமீது தான் கொண்ட பேரார்வத்தின் காரணமாக தனது பிறந்தநாளை ஆசிரியர் தினமாகக் கொண்டாடும் படிக் கேட்டுக் கொண்டதற்கிணங்க, இத்தினம் கொண்டாடப்படுகிறது.

ஆசிரியர் முதல் நாள் வகுப்புக்குவரும் மாணவர்களைத் தன் அன்பால் அரவணைத்துக் கற்பிக்கத் தொடங்குவார். கருங்கல் ஒன்றினை ஒரு சிற்பி உளியால் செதுக்கிச் சிறந்த சிற்பத்தை வடிவமைப்பதைப் போலவும், குயவர் ஒருவர் களிமண்ணை எந்திரத்தில் சுழற்றி அழகிய மண்பாண்டங்களைத் தயாரிப்பதைப் போன்றது தான் ஆசிரியர்களின் பணியும்.

பண்டைய காலத்தில் மாணவர்கள் குருகுல முறையில் கற்றனர். முனிவர்களோடு வனத்தில் அவரது இருப்பிடத்தில் பல ஆண்டுகள் தங்கி கல்வியோடு வேதங்களையும் பல கலைகளையும் கற்றுக் கொண்டனர். காலப்போக்கில் ஊர் தோறும் பாடசாலைகள் தோன்றலாயின அக்கலை ஆசிரியர்கள் மிகச் கண்டிப்பானவர்கள் குறும்பு செய்யும் மாணவர்களைப் பிரம்பால் அடிப்பர். படிக்காதவர்களை முட்டிப் போடுதல், தோப்புக்கர்ணம், பெஞ்சுமேல் ஏற்றுதல், வகுப்புக்கு வெளியே நிற்றல் போன்ற தண்டனைகளைக் கொடுத்தனர். பெற்றோர் தலையீடும் கூடாது. இதனால் மாணவர்கள் பள்ளியையும் கல்வியையும் வெறுத்தனர். பாதியில் படிப்பை நிறுத்தினர்.

தற்போது கல்வியில் மாற்றங்கள் வந்துவிட்டன. எல்லா ஊர்களிலும் பாலர் பள்ளி முதல் மேல்நிலைப் பள்ளி வரை வளர்ந்து விட்டன. ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனிச் சிறப்பாசிரியர்கள். தண்டனைகள் தவிர்க்கப்பட்டுள்ளன. கல்வியோடு உடற்பயிற்சி, கைத்தொழில், ஆடல்பாடல், நாட்டியம், நாடகம் என பலவித கலைகள் கற்பிக்கப்படுகின்றன. மாணவர்களை உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் தண்டனை தரும் ஆசிரியர்கள் பெற்றோரின் கோபத்துக் ஆளாகின்றனர். அதனால் பணியிடை நீக்கம், சிறைத் தண்டனையும் கிடைக்க வாய்ப்பு உள்ளது. இதனால் மாணவர்கள் ஆர்வத்துடன் பள்ளிக்கு வருகின்றனர். புத்தகப்பைச் சுமை குறைக்கப்பட்டால் நல்லது. பள்ளிகளில் காலை, மதிய உணவு, சீருடை, நோட்டுப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றது. இதற்கு முன்னோடியாய் விளங்கிய, கல்விக்கண்திறந்த பெருந்தலைவர் காமராஜரை நினைத்து நன்றி கூறுதல் நம் கடமையாகும். நகரங்களில் மருத்துவம், பொறியியல், பிறபட்டப்படிப்பிற்கான கல்லூரிகள் அமைந்து கல்வியில் பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. மாணவர்களின் முன்னேற்றத்திற்கு பெரிய அளவில் உறுதுணையாய் உள்ளது.

மாணவர்கள் வகுப்பறையில் பாடம் நடத்தவிடாது ஆசிரியருக்கு இடையூறு செய்தல், கேலி, கிண்டல், பட்டப்பெயர் வைக்கின்றனர். இது மிகத் தவறான செயல் பாதிக்கப்படுபவர் நாமே என உணர வேண்டும் எழுத்தறிவித்தவன் இறைவன், என்பதை மறக்காது மரியாதையுடன் நடக்கவேண்டும்.

ஆசிரியர்களும் தம்மிடம் பயிலும் மாணவர்களைத் தங்கள் குழந்தைகளைப் போலவே பாவித்தல் வேண்டும். ஒழுக்கத்தைக் கற்பிக்க வேண்டியவர்களே தம் மாணவர்களிடம் தகாத உறவு வைத்தல் போன்ற செய்திகளைக் கேள்விப்படும்போது மனம் பதறுகிறது. இஃது ஆசிரியர் சமூகத்துக்கே தலைகுனிவு. சம்பந்தப்பட்டவர்கள் திருந்தி பணியின் புனிதத்தைக் காத்தல் வேண்டும்.

ஆசிரியர் தினத்தன்று மாணவர்கள் மலர் கொடுத்து ஆசிரியருக்கு மரியாதை செலுத்துவர் ஆசிரியப் பணிபற்றியும், ஆசிரியர்களின் பெருமை பற்றியும் சொற்பொழிவாற்றுவர்கள் வகுப்பில் ஆசிரியரை அமர வைத்து மாணவருள் ஒருவர் பாடம் நடத்தி ஆசிரியரை அசரவைப்பார். சிறந்த கல்விப் பணியாற்றிய ஆசிரியர்கட்கு இன்றைய தினம் அரசாங்கம் நல்லாசிரியர் விருது வழங்கி கௌரவிக்கும்.

ஒரு காலத்தில் மாணவர்களாக இருந்தவர்கள் இன்று மருத்துவர், பொறியாளர், விஞ்ஞானி, அரசியல் தலைவர், தொழில் அதிபர் மேலும் பல துறைகளில் நிபுணர்களாக செல்வச்சிறப்போடு உயர்ந்த நிலையில் உள்ளனர். இந்த உயர்வுக்கு ஏணிப்படியாய் இருந்தவர்கள் நம் ஆசிரியர்களே! இவர்களை மறக்காது நன்றி பாராட்டுதல் நமது கடமையாகும். இதுவே ஆசிரியருக்கு நாம் செய்யும் கைம்மாறு!

முதுமையில் சில ஆசிரியர்கள் வறுமையில் வாடுகின்றனர். நல்மனம் கொண்ட மாணவர்கள் அவர்களுக்கு மருத்துவ உதவியும் நிதி உதவியும் செய்கிறார்கள். பாராட்டத்தக்கதே சந்தர்ப்பம் கிடைத்தால் நாமும் இவ்வாறு செய்வது வரவேற்கத்தக்கது.

நாம் எங்கிருந்தாலும், எந்த உயர் பதவியில் இருந்தாலும் நம் ஆசிரியர்களை மனதில் மதித்து நினைவு கூறல் வேண்டும். ஆசிரியர்தினத்தை பயன் நன்றித் தினமாக கொண்டாடுவதே கொண்டாட்டத்தின் சிறப்பாகும். ஆசிரியர்களுக்கு ஆசிரியர் தின நல்வாழ்த்துகள்!!!







அரசு பள்ளியில் சுதந்திர தின கொண்டாட்டம்

நாகர்கோவில், புதுகிராமம் அரசு ஆரம்ப பள்ளிக்கூடத்தில், சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டது. பள்ளி தலைமை ஆசிரியை திருமதி. நளினி, பேரூராட்சி கவுன்சிலர் திரு.எட்வர்ட், ஓய்வு பெற்ற பொறியாளர் திரு.ராபர்ட், திரு.விஜயன், வட்டார கல்வி அலுவலர், பெற்றோர், ஆசிரியர் மற்றும் கல்வி குழு உறுப்பினர்கள், மாணவ - மாணவியர்கள் திரளாக கலந்து கொண்டனர். என்.டி.ஆர் பவுண்டேஷன் தலைவர், திரு.ஜே.அர்னால்டு அரசு அவர்கள் தேசிய கொடியேற்றி, இனிப்புகள் மற்றும் பரிசுகளை வழங்கி சிறப்பித்தார்கள்.

# உறவுகள்!

**மனிதாபிமான உறவு**

விவசாய வளர்ச்சி முன்னிலும் பல மடங்கு உயர்ந்தது. காமராஜர் காலத்தில்தான் நெய்வேலி நிலக்கரித் தொழிற்சாலை, திருச்சி பெல் தொழிற்சாலை, ஊட்டி இந்துஸ்தான் ஃபோட்டோ ஃபிலிம் தொழிற்சாலை, மணலி எண்ணை சுத்திகரிப்பு ஆலை, சென்னை இரயில் பெட்டித் தொழில்சாலை ஆகியவை தமிழ்நாட்டில் நிறுவப்பட்டன. காமராஜரும், அப்போதைய கவர்னர் பிஷ்னுராம் மேதியும் இணைந்து முயன்றதன் விளைவாக 1959-ம் ஆண்டு சென்னையில் என்ஜினியரிங் துறையில் உயர்கல்வி நிறுவனமாக சென்னை ஐ.ஐ.டி (இண்டியன் இன்ஸ்ட்டிடியூட் ஆப் டெக்னாலஜி) உருவாக்கப்பட்டது. மனித உறவுகளையும், தமிழகத்தின் பெருமையையும் பல மடங்கு உயர்த்தும் மாபெரும் ஆக்கபூர்வ சக்தியாக காமராஜர் செயல்பட்டார். கல்விக் கண் திறந்தவர் என்றும், ஏழைப் பங்காளர் எனவும், கரும வீரர் என்றும் தமிழக மக்களால் போற்றப்பட்டவர். புகழ் நாடார், பொருள் நாடார் என்று கவியரசு கண்ணதாசனால் கவிமாலை சூட்டப்பட்டவர்.

தொழில்துறை ஜாம்பவான்கள் டி.வி.எஸ்.குழுமத்தினர், இந்தியன் எக்ஸ்பிரஸ் கோயங்கா குடும்பத்தினர், டிடி.கிருஷ்ணமாச்சாரி, த.பி.சொக்கலால் நிறுவன அதிபர் அரிராம்சேட், சி.பா.ஆதித்தனார், பொள்ளாச்சி மகாலிங்கம், எங்கள் விஜிபி நிறுவனம் மில் அதிபர்கள், தொழில் அதிபர்கள் காமராஜர் மீது பயபக்தியும், மரியாதையும் கொண்டிருந்தனர். சாதாரண மக்களை, ஏழை எளியவர்களை அரவணைத்து, அவர்களுடன் அன்புடன் பழகிய அருமைத் தலைவர் காமராஜர்.

மூதறிஞர் இராஜாஜி, தந்தைப் பெரியார் ஈ.வெ.ரா. பேரறிஞர் அண்ணா, டாக்டர் கலைஞர், கம்யூனிச இயக்கத் தலைவர்கள், பிற கட்சிகளின் தலைவர்கள், சமூகத் தலைவர்கள், பல்வேறு இயக்கத்தலைவர்கள், மதத் தலைவர்கள் தமிழ் பேரறிஞர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், தொழிற்சங்கத் தலைவர்கள், பத்திரிகையாளர்கள், புகைப்பட நிபுணர்கள் உள்ளிட்டோர் காமராஜிடம் மாறாப் பற்றும், மரியாதையும் கொண்டு பழகினர்.

நடிகர் திலகம் சிவாஜி கணேசன், எழுத்தாளர் கவிஞர் கண்ணதாசன், எழுத்தாளர் ஜெயகாந்தன், சினிமா இயக்குநர் கே.எஸ்.கோபாலகிருஷ்ணன் போன்றோர் காமராஜரிடம் தனிப்பற்றும், மரியாதையும் கொண்டு பழகினர். துக்ளக் ஆசிரியர் சோ.இராமசாமி காமராஜரின் விசுவாசி. அகில இந்தியாவைப் பொறுத்தவரை காந்தி, நேருவுக்குப் பிறகு லால் பகதூர் சாஸ்திரி, மொரார்ஜி தேசாய், இந்திரா காந்தி, ஜெயப்பிரகாஷ் நாராயணன், பி.ஜூ.பட்நாயக், ஜகஜீவன்ராம், சஞ்சீவ ரெட்டி, மாற்றுக் கட்சிகளின் மூத்த தலைவர்கள் உள்படப் பலர் காமராஜரிடம் அன்பு பாராட்டி நெருங்கிப் பழகினார்கள். அரசியல் பணியாற்றினார்கள். காமராஜரால் தமிழனின் தலைநிமிர்ந்தது. தமிழ் உறவுகள் மேன்மை பெற்றன. காமராஜரின் அரசியல் குருவாகத் திகழ்ந்தவர் சத்யமூர்த்தி. காமராஜரின் எளிமையும், உழைப்பும், நேர்மையும் சத்யமூர்த்தியை மிகவும் கவர்ந்தன. இருவரும் ஒருவரையொருவர் பெரிதும் மதித்துப் போற்றினர்.

வெள்ளைச் சட்டையும், வேட்டியுமே இவரது எளிய உடை. அந்த உடை அணிந்தபடியே ரஷ்யப் பயணமும் மேற்கொண்டார். தமிழர் பண்பாட்டைத் தரணியெலாம் கொண்டு சேர்த்த தன்னிகரில்லாத் தலைவர். அவரது சாந்தி தியேட்டர் வளாகத்தை காமராஜரே திறந்து வைத்தார். மேடைப்பேச்சில் தனக்கெனத் தனி பாணி வைத்திருந்தார். மக்களைக் கவரும் பேச்சாற்றல் காமராஜருக்கு உண்டு. அவர் பேசும் கூட்டங்களுக்குப் பெருந்திரளாய் பொதுமக்கள் திரண்டு வருவது கண்கொள்ளாக் காட்சியாய் அமையும். தமிழகத்துக்கு 30 ஆண்டுகளுக்குப் பிறகு என்ன தேவை என்ற தீர்க்கதரிசனத்தோடு ஆட்சி செய்தார் காமராஜர் என்று முன்னாள் மத்திய நிதி மந்திரி ப.சிதம்பரம் புகழாரம் சூட்டுவதுண்டு. முன்னாள் மத்திய நிதியமைச்சர் சி.சுப்பிரமணியம், முன்னாள் ஜனாதிபதி ஆர்.வெங்கட்ராமன் ஆகியோர் காமராஜரின் அமைச்சரவையில் அமைச்சர்களாக அங்கம் வகித்தனர். அமைச்சரவையை ஒரு குடும்பமாக, தமிழக மக்களைத் தன் குடும்பத்தின் அங்கத்தினராகப் பாவித்து நடத்தியவர், பெருந்தலைவர் காமராஜர். (தொடரும்)



AB
Dr.M.Sundaralingam B.SC.,B.VSC.,
PH:24895266 CELL: 9444015277
ஆர்த்தி பிராய்லர்ஸ்
77, Nedunchezhian Street, (opp. M.G.R. Nagar Market) M.G.R.Nagar, Chennai-78.



செல்:9444484977, 9962454977, 044-25980239.
ஸ்ரீ மகா கணபதி ஜோதிட நிலையம்

ஜோதிடர்.த.பெ.சுந்தர் நாடார்
ப.எண்:8, பு.எண்:15, நல்லப்பவாத்தியார் தெரு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை-600 021.
ஜாதகம் திருமண பொருத்தம் வாஸ்து பார்க்கப்படும். நேரம்:காலை8.00மணி முதல் மதியம்2.00 மணி வரை


S.ராஜையா நாடார்
சக்தி டிப்போ & சக்தி ஹார்டுவேர்ஸ்
எங்களிடம் சிமெண்ட், மணல், ஜல்லி,செங்கல்,கட்டுமானத்திற்கு தேவையான
அனைத்து பொருட்களும் கிடைக்கும்
168,புதியஎண்,123,எம்.எம்.காலனி, அண்ணாநகர், 3வது அவென்யு,
(அமைந்தகரை காவல்நிலையம் அருகில்), அமைந்தகரை, சென்னை-29
போன்:9840036745, 9841085745, Ph:26214852, 26267101.

# பாஞ்சாலி

எஸ்.விஜயராஜ்

**சிகண்டியின் திகைப்பு...**

இதற்கு முன்னே குந்திக்கும் இதே நிலை ஏற்பட்டு இருக்கிறது..

உண்மையாவா..



ஆமாம்.. யுதிஷ்டிரனுக்கு தந்தை யார்.. எமதர்மன்..

ஆமாம்..

அர்ச்சுனனுக்கு இந்திரன்.. பீமனுக்கு வாயு தேவன்..

ஆனால்.. குந்தியின் உண்மையான கணவன் யார் தெரியுமா..

பாண்டு மகாராஜா..

ஆமாம்..

நல்லவேளை குந்திக்கு கர்ணன் என்றும் ஒரு மகன் இருக்கிறான் என்பது.. அப்போது அவனுக்கு தெரியாது.. தெரிந்திருந்தால் அவனையும் சேர்ந்து சொல்லியிருப்பான்..

உனக்கு மட்டுமல்ல திரவுபதி.. உன் மாமியாருக்கும் கூட ஐந்து கணவர்கள்தான் என்று..

சிகண்டி மேலும் சொன்னான்.. இந்த சங்கடம் உனக்கும் குந்திக்கும் மட்டுமல்ல திரவுபதி..

விசித்திர வீரியனின் மனைவிமாருக்கும் கூட ஏற்பட்டது.. திருதராஷ்டிரனும்.. பாண்டுவும்.. விதுரனும்.. யாருக்கு பிறந்தவர்கள் என்று நினைக்கிறாய்..

விசித்திர வீரியனுக்கா.. இல்லை.. வியாசருக்கு..

அப்படியா.. கேட்கவே வியப்பாக இருக்கிறது..

ஆமாம்.. ஆனால் இந்த வியாச முனிவரும் கூட யாருக்கு பிறந்தவர் தெரியுமோ..

சத்தியவதிக்கும்.. அவளது கணவர் சந்தனு மகாராஜாவுக்கும் அல்ல.. பராசர மகரிஷிக்கு..

சலிப்புடன் கேட்டாள் திரவுபதி.. சரி அண்ணா..

இவர்களுடைய கதையெல்லாம் எதற்காக என்னிடம் சொல்லிக் கொண்டு இருக்கிறாய்..

அவர்களைப் போலவே என்னை வாழச் சொல்லுகிறாயா.. அதுதான் சரி என்கிறாயா..

சிகண்டிக்கு கொஞ்சமும் எதிர்பாராத ஒரு கேள்வி இது.. எனவே பளிச்சென்று பதில் சொல்ல அவனால் முடியவில்லை.. ஆனாலும்..

அண்ணனால் கூட பதில் சொல்ல முடியாத அளவுக்கு ஒரு புத்திசாலித்தனமான கேள்வியை கேட்டு விட்டேனே என்று திரவுபதி பெருமிதம் கொள்ளவில்லை..



எதற்காக இவைகளை எல்லாம் அவன் சொன்னான் என்றே யோசித்தபடியே நின்று கொண்டிருந்தாள்..

**சிரிக்க முடியவில்லை..**

குந்தியையும்.. சத்தியவதியையும்.. எனக்கு ஏன் உதாரணம் காட்டுகிறாய்.. அவர்களைப் போலவே என்னையும் வாழச் சொல்லுகிறாயா..

இப்படி கேட்ட திரவுபதியிடம் சொன்னான் சிகண்டி..

இல்லை திரவுபதி.. உன்னைப் போலவேதான் அவர்களும் அன்று கூச்சப்பட்டார்கள்.. வேதனைப் பட்டார்கள்.. ஆனாலும் வாழ்ந்தார்கள்..

இதோ.. இன்றும்கூட அவர்கள் வாழ்ந்து கொண்டுதானே இருக்கிறார்கள்..

ஆனாலும்.. பாவம் அவர்கள்.. அன்றைக்கு அதை அவர்களால் மீற முடியவில்லை.. அந்த அளவுக்கு அவர்களுக்கு சில நிர்ப்பந்தங்கள் இருந்தன..

அதே நிலைதான் இன்று உனக்கும்.. அதே நிர்ப்பந்தம் தான் இன்று உனக்கும் வந்திருக்கிறது..

அதை சுட்டிக் காட்டத்தான்.. அவர்களை நான் உதாரணம் காட்டினேன்..

நிர்ப்பந்தங்களுக்கு அவர்கள் அன்று பணிந்தார்கள்.. என்னையும் அவர்களைப் போல பணிய சொல்கிறாயா..

அந்த ஐந்து ஆண்களையும் என்னை மணக்க சொல்லுகிறாயா..

என் மனம் திறந்து சொல்லுகிறேன் அண்ணா.. அந்த அசிங்கத்தை என்னால் சகிக்க முடியாது..

எதை அசிங்கம் என்கிறாய்..

ஐந்து பேரை என்னை மணக்க சொல்லுகிறார்களே.. அதை.. தன் கணவனைத்தவிர இன்னொருவனை பார்த்தாலே.. குற்றம் காணுகிற உலகம் இது..

அப்படிப்பட்ட இந்த உலகத்தில்.. ஐந்து ஆண்களோடு குடும்பம் நடத்தினால்.. என்னை பார்த்து சிரிக்காதா..

சிரிக்காது திரவுபதி.. நிச்சயமாக சிரிக்காது.. சிரிக்கிற வாழ்க்கை வேறு..

அது என்ன..

திருமணம் ஆகாமலேயே ஒரு பெண்ணும் ஆணும் அந்தரங்க உறவை வைத்துக் கொண்டால்.. அது சிரிப்புக்கு உரியது..

ஆனால் உன்னுடைய உறவு அப்படிப்பட்டதில்லை.. இது திருமணம்..

## "இரசாயனம் தடவி மீன்களை விற்கின்றார்களா? தமிழ்நாடு மீன் வள பல்கலைக் கழகம் - அதைக் கண்டறிய பயிற்சி அளித்து உதவுகிறது"

-M.ஞானசேகர், தொழில் ஆலோசகர், 9566253929.

தமிழ்நாட்டு மீன்கள் கேரளா செல்கின்றன. அங்கு சிறு சிறு மீன்களை விரும்பி வாங்குவர். மீதமுள்ள சிறு மீன்கள், எரால் கழிவுகளை காயப்போட்டு அரைத்து "கால்நடை, கோழி தீவனத்திற்காக" விற்று விடுவார்கள். ஆந்திர மீன்கள் ஐஸ் போட்டு ஏராளம் தமிழ்நாடு வரும். சில நாட்கள் விற்பனை ஆகாது. அப்பொழுது மீன்கள் கெட்டுப் போகும். மனித உடல்களை கெட்டுப் போகாமல் தடுக்க, பாதுகாக்க, பார்மலின் எனும் இரசாயனத்தை பயன்படுத்துவர். மீனவர்கள் எப்படியோ அந்த இரசாயனத்தை வாங்கி வந்து மீன்கள் கெட்டுப் போகாமல் தடுக்க மீன்களில் தடவுகின்றனர். இது சட்ட விரோதம். காரணம் அந்த மீன்களை சமைத்து சாப்பிட்டால் புற்றுநோய் வரும். இதை படித்தவர்கள், இரசாயனம் கற்றவர்கள் கண்டு பிடித்து அரசுக்கு புகாராக சென்று விட்டது. இப்பொழுது பார்மலின் தடவி இருந்தால் அதை கண்டுபிடிக்க தமிழ்நாடு ஜெயலலிதா மீன் வளப் பல்கலைக் கழகம் ஒரு யுக்தியை கண்டு பிடித்து அதை பயிற்சியாக கற்றுத் தருகின்றது.

எப்படி இதை கண்டு பிடிக்கலாம்? அதிகாரிகள், பேராசிரியர்கள் பதில் கூறினர். "கண்டுபிடிக்க ஒரு சிறிய கருவி உள்ளது. அக்கருவியில் 2 பரிசோதனை குழாய்கள் இருக்கும். அதில் ஒரு குழாயில் சந்தேகப்படும் மீன் தசை பகுதியில் 2 கிராம் அளவில் எடுத்துப் போட வேண்டும். அக்குழாயில் கணப்பான் திரவத்தை ஊற்றி 2 நிமிடம் நன்கு கலக்க வேண்டும்.

பின் மற்றொரு பரிசோதனைக் குழாயில் நியாக்டிவ் சொலுஷன் எனும் திரவத்தை எடுத்து கொள்ள வேண்டும். அதில் ஏற்கனவே வேறு குழாயில் கலக்கி வைத்துள்ள கலவையைச் சேர்க்க வேண்டும். இப்பரிசோதனையில் சுமார் 2 நிமிடத்தில் அக்கலவை கொஞ்சம் கொஞ்சமாக பசுமை - மஞ்சள் நிறத்துக்கு மாறினால் அந்த மீனில் பார்மலின் திரவம் தடவப்பட்டுள்ளதை உறுதி செய்யலாம். நிறத்தின் அடர்த்திக்கு ஏற்ப இரசாயன அளவை யூகித்து அறிந்து கொள்ளலாம். எந்த நிற மாற்றமும் ஏற்படாவிடில் எந்த இரசாயனமும் தடவப்பட வில்லை என்று பொருளாகும்.

தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன் வள பல்கலைக்கழக நாகப்பட்டிணம், தூத்துக்குடி, மாதவரம், சென்னையை அடுத்த வாணியஞ்சாவடி மையங்களில் இந்த மீன் ஆய்வுக் கருவி கிடைக்கிறது. விலை ரூ.3000 ஆகும். இந்த 4 மையங்களில் மீனவர்கள், மீனவர் நல சங்க உறுப்பினர்கள் NGO எனப்படும் நிறுவன தன்னார்வலர்களுக்கு இலவச பயிற்சியும் வழங்கப்படுகிறது. மீன் வியாபாரிகள் தங்களிடம் விற்பனைக்கு வரும் மீன்கள் இரசாயனம் தடவாததவை தானா? என உறுதி செய்ய இக்கருவிகளை வாங்கி வைத்துக் கொண்டு பொது மக்களுக்கு விழிப்புணர்வு அளிக்கலாம். தமிழ்நாட்டு மீன்கள் உடனுக்குடன் விற்பனை ஆகிவிடும். இதர மாநிலங்களில் இருந்து வரும் மீன்கள் இரசாயனம் தடவப்படுவதாக சந்தேகம் எழுந்துள்ளது. எனவே அனைவரும் விழிப்புணர்வு பெற வேண்டும்.

இது போன்ற தகவல்கள் பயிற்சி, கடன், மானியம் போன்ற உதவிகள் பற்றி அறிய தமிழ்நாடு மீன் வள பல்கலைக்கழகம், பீச் ரோடு, நாகப்பட்டிணம். www.tnjfu.ac.in.

கலைமாமணி விருது பெற்ற திரு.தாமரை செந்தூர்பாண்டி எழுதும் சமூக தொடர்கதை.

# நிலவுக்குத் தென்றல் பகையானால்!

கலைமாமணி தாமரைசெந்தூர்பாண்டி, செல்:8838477377



21.பரபரப்புடன் அப்பா புறப்பட்டு வெளியேறும் போது அனிதா அவரை மெல்ல அழைத்தாள்.

"என்ன அனிதா?" நின்று திரும்பினார் அப்பா.

"இப்பொழுது போனால் பஸ்சுக்குக் காத்திருந்துதான் தீர வேண்டும். சாப்பிட்டுவிட்டு மூன்ற மணிக்கு போனீர்களென்றால் தான் சரியாக இருக்கும்." அனிதா இயல்பாகச் சொன்னதும் மலைப்பும் வியப்புமாய் திரும்பி வந்து அவளின் கையைப் பற்றிக் கொண்டார் அப்பா.

"அனிதா....!"

"என்னப்பா?"

"பஸ் நேரத்தையெல்லாம் படு அழுத்தமாகச் சொல்கிறாயே... நான் எங்கேபோகிறேன்....யாரைப் பார்க்கப் போகிறேன் என்று உனக்குத் தெரியுமா?"

"தெரியாமலா சொல்வேனப்பா...?

எங்கே போகிறேன்...?

"அண்ணியின் பிறந்த வீட்டிற்கு. அவர்களின் அப்பாவைப் பார்ப்பதற்கு..."

"பார்த்து...?"

"கடிதத்தைக் கையில் தந்து, விபரத்தைச் சொல்லி அவரின் யோசனையைக் கேட்பீர்கள்..."

"அனிதா...?!" ஆச்சர்யத்தோடு தன் மகளைப் பார்த்தார் அப்பா.

"என்னப்பா...?"

"உனக்கு இதெல்லாம் எப்படியம்மா தெரிகிறது...?"

யூகம்தான்.

"அதெப்படி உன்னால் மட்டும் இவ்வளவு சரியாக யூகிக்க முடிகிறது...?"

"ரொம்ப சுலபம்..."

"என்னது...? ரொம்ப சுலபமா..?"

"ஆமாம்.."

"எப்படி?"

"ஒவ்வொருவரிடமும் பழகும் பொழுதும், உறவாடும்போதும், அவர்களின் தன்மைகளை உற்று நோக்குவது, அவர்களைப் பேசவிட்டு நாம் ஓய்வாக இருந்து அவர்களின் நோக்கு... போக்கு ஆகியவற்றைக் கவனித்து வருவது என்ற இரண்டுமே அவர்கள் எதை எதை எப்படியெப்படிச் செய்வார்கள் என்று கணிக்க வைக்கிறதல்லவா...?

"அனிதா...! உண்மையிலேயே நீ புத்திசாலிதானம்மா...!" அவள் தலையைக் கோதி உச்சி முகர்ந்து பெருமிதப்பட்டார்.

"நான் நம் சாவித்திரியின் வீட்டிற்குப் போவது சரிதானே அனிதா?"

"சரிதானப்பா. அவர்களின் அபிப்பிராயத்தையும் தெரிந்து கொள்வது தான் நல்லது. ஒருவேளை அண்ணியைப் பார்க்க அவர்கள் கூட வரலாம்"..

"முகவரி தெரியுமா என்று கேட்கலாமில்லையா?"

"தெரியாது."

"என்ன தெரியாது?"

"அண்ணியின் முகவரி அவர்களுக்கும் நிச்சயம் தெரியாது என்கிறேனப்பா?"

"ஏன்?"

"நமக்கே கடிதம் எழுதாத அண்ணி நிச்சயம் அவர்களுக்கும் கடிதம் எழுதியிருக்கமாட்டார். அதற்கெல்லாம் நேரம் கொடுக்காமல் அண்ணன் அசரடித்திருப்பான்."

"இருக்கலாம்.. இருக்கலாம். எதற்கும் முயற்சிக்கலாம்...ம் அனிதா..."

"சொல்லுங்களப்பா..."

"இந்த விசயம் நம் வீட்டை விட்டு வெளியே போய்விடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்."

"சரியப்பா.."

மூன்று மணிக்கு மேல் அப்பா புறப்பட்டுப் போனார்., அப்பா போய்ச் சேரும்போது சாவித்திரியின் அப்பா வீட்டிலிருந்தார்.

"வாருங்கள் சம்பந்தி வாருங்கள்." சிரித்த முகத்துடன் வரவேற்றார் சாவித்திரியின் அப்பா. இவ்வளவு அன்போடு, சிரித்த முகத்தோடு வரவேற்கும் மனிதரிடம் எப்படி.... எதிலிருந்து துவங்குவது என்று தெரியாமல் தவித்தார் ரகுவரனின் அப்பா.

"என்ன சம்மந்தி வந்ததும் வராததுமாய் முள்ளில் அமர்ந்திருப்பவர்போல நெளிகிறீர்கள்?"

சிரித்தார் சாவித்திரியின்அப்பா.

"அது, வந்து...அது வந்து.... சம்பந்தி உங்களுக்கு சாவித்திரியிடமிருந்து கடிதம் ஏதாவது வந்ததா?"

"இல்லை. உங்களுக்கு...?

"சாவித்திரியிடமிருந்து வரவில்லை. ஆனால் என்மகன்.... இல்லையில்லை என்னைக் கெடுக்கவென வந்து பிறந்துவிட்ட பாவியிடமிருந்து கடிதம் வந்தது."

சாவித்திரியின் அப்பாவிற்கு அவர் என்ன சொல்கிறார் என்பது புரியவில்லை.

"நீங்கள் என்ன சம்பந்தி சொல்கிறீர்கள்?"

"சாவித்திரியை நாம் உடனே போய்ப் பார்த்தாக வேண்டும்."

"ஏன்?"

"அப்படி ஒரு இக்கட்டு. அவள் விலாசம் கூட எனக்குத் தெரியாது. ஆனால் உடனே நாம் போய் அவளைப் பார்த்தாக வேண்டும்."

"கொஞ்சம் விபரமாய்ச் சொல்கிறீர்களா...?" சாவித்திரியின் அப்பா பதறினார்.

"இந்தக் கடிதத்தைக் கொஞ்சம் நிதானமாய்... ஆத்திரப்படாமல்... பதற்றப்படாமல் படியுங்கள்." ரகுவரன் எழுதிய கடிதத்தை தந்தார். வாங்கிப் படித்தார் சாவித்திரியின் அப்பா.

படித்து முடித்துவிட்டு இத்தனை நடந்திருக்கிறது. எனக்கு ஒன்றுமே தெரியவில்லையே என்று கேட்பது போல பார்த்தார் சாவித்திரியின் அப்பா.

அவர் முகத்தைப் பார்க்கவே இயலாத குற்ற உணர்வோடு தலை கவிழ்ந்தார் ரகுவரனின் அப்பா.

"ஏற்கனவே உங்கள் பையனுக்கு இப்படி ஒரு தொடர்பிருந்ததை மறைத்து என் மகளைப் பலியாக்க உங்களுக்கு எப்படி ஐயா மனம் வந்தது....?"

"என்னைக் கேளுங்கள். செருப்பாலடித்துக் கேளுங்கள் தகும். எல்லாம் என் செறுக்கு... நம்பிக்கை.... தப்புக் கணக்கு! என் மருமகளாய் எவளோ ஒரு ஜாதிகெட்டவள் வந்துவிடக்கூடாது நல்ல குடும்பத்தில் உள்ள, உயர்ந்த குணம் கொண்ட பெண்ணே வர வேண்டுமென்ற பேராசை! என் ஆசைப்படியே என் மருமகள்... எங்கள் வீட்டின் அதிர்ஷ்ட தேவதையாக சாவித்திரி வந்தாள். அவள் கூட தன் கணவனைப் பற்றித் தன் பிறந்த வீட்டார் தப்பாகப் புரிந்து கொள்ளக்கூடாது என எங்கள் வாயைக் கட்டி வைத்தாள். அவளும் உங்களிடம் எதையும் சொல்லாமலிருந்துவிட்டாள். நாங்கள் எல்லாம் சேர்ந்து அந்த அரக்கனின் காதலியைக் கண்டுபிடித்து பேசியபோது அவளே வந்தாள். அவனைத் திட்டித் தீர்த்தாள். காறி உமிழ்ந்தாள். என் கண்ணில் இனிவிழிக்காதே என்று சொல்லிவிட்டு ஊரைவிட்டே போனாள். மனம் திருந்தியவன் போல நடித்தான் அந்தப் பாதகன். நம்பினாள் இந்த குணக்கொடி. நாசப்படுத்திவிட்டான் அந்தக் குடிகேடன். இனி அவன் என் மகனில்லே. அவனுக்கும் எனக்கும் எந்தத் தொடர்புமில்லை! என் சொத்தில் எந்த உரிமையும் அவனுக்கில்லை. என் மகள்... மகளினும் மேலான அந்த உத்தமி சாவித்திரியைக் கண்டுபிடித்து என் சொத்தையெல்லாம் அவளுக்கே எழுதி வைத்தாக வேண்டும்! தயவு செய்து புறப்படுகிறீர்களா...?"

"எங்கே...?"

"சென்னைக்கு..."

"அங்கே போய் எப்படித் தேடுவீர்கள்...?"

"அதுதான் தெரியவில்லை."

"ஆக.... என் மகள் வாழ்க்கை...?!"

"என்னை நம்புங்கள் சம்பந்தி. சாவித்திரி உங்கள் பெண். என் மருமகள்! அவளின் அருமை உங்களைவிட எங்களுக்கு இந்த இரண்டு மாதங்களில் அளவுக்கதிகமாகவே தெரிந்துவிட்டது. எனக்கு என் மருமகள் தான் எல்லா சொத்தும், செல்வமும் என நான் சத்தியமாய் நம்புகிறேன். அதனால்தான் என் மகன் செய்த கொடுமைக்குப் பிராயச்சித்தம் தேடப்போகுமுன் உங்களிடம் நானே வந்திருக்கிறேன். அவள் வாழ்க்கையில்தான் நம் வாழ்க்கையே இருக்கிறதாய் நினைக்கிறேன் நான். புறப்படுங்கள் போகலாம்."

பெருமூச்செறிந்தார் சாவித்திரியின் அப்பா.

"என் பெண் அனிதாவிற்கும் சுஜாதாவிற்கும் அவர்கள் அண்ணியின் மீது உயிர். அவளைப் பார்க்க அவர்களும் வருவார்கள். இங்கிருந்து புறப்பட்டு என் வீட்டிற்குப் போய் எல்லோரையும் அழைத்துக் கொண்டுதான் போகவேண்டும்."

"அவர்களெல்லாம் எதற்கு?"

"வேண்டும். இல்லை என்றால் அவள் நம்மோடு ஊருக்கு வர மறுக்கலாம். எங்கள் அனிதாவும் சுஜாதாவும் அவளை அன்பால்கட்டி அழைத்துவர முடியும்

"சரி. என் மகன் வரட்டும். அவனையும் அழைத்துக் கொண்டு போகலாம்."

"சரி.

காத்திருந்தார்கள்.

சாவித்திரியின் அண்ணன் வந்து சேர்ந்தான். விசயம் தெரிந்ததும் ஆத்திரப்பட்டான். "எனக்குத் தெரியும். அப்பொழுதே தெரியும். அதனால் தான் எடுத்த எடுப்பில் வேலையை விடாதே என்றேன். தெரிந்திருந்தே கடலில் விழுந்திருக்கிறாள். இனி அவளை நாம் தேடிக் கண்டுபிடிக்க முடியுமா...? நாம் போகுமுன்னால் எங்காவது விழுந்து தற்கொலை செய்து கொள்ள மாட்டாள் என்பது என்ன நிச்சயம்?"

"ச்சீ! வாயை மூடடா முட்டாள்! உன் தங்கையைப் பற்றி உனக்கு தெரிந்தது இவ்வளவுதானா..? அவளாடா தற்கொலை செய்வாள்? அவ என் ரத்தமடா... என் ரத்தம்! கோழைபோல் என் பெண் சாகவே மாட்டாள். நிச்சயம் அவள் எங்காவது தலை நிமிர்ந்து நிற்பாள். வா. போய்ப் பார்க்கலாம். புறப்படு." தன்னம்பிக்கை அவருக்குள் பொங்கி வார்த்தையாக வெளிப்பட்டது. புறப்பட்டார்கள்.




**S.ATHISAYARAJ.B.A.,B.L.,P.G.DL.A**
**Correspondent**
**Koilpillai Mat.Hr.sec.School**
65. Rayala Nagar, 2nd Main Road, Ramapuram, Chennai-89.
Ph:044-22492489. 22492286, Cell:9840715246.
Email:samuelathisayaraj@gmail.com



**SVS நாடார் திருமண தகவல் நிலையம்**
(அரசு அங்கீகாரம் பெற்றது.பதிவுஎண் 1004/2013)
No.105, நல்ல தம்பி சாலை அண்ணாநகர், பம்மல், சென்னை-75.
எங்களிடம் இந்து சி.எஸ்.ஐ, ஆர்.சி நாடார் ஆண்/பெண் வரன்கள் (டாக்டர், இன்ஜினியர், வியாபாரிகள் மற்றும் உள் நாடு, வெளிநாட்டில் பணிபுரிபவர்களின்) விவரங்கள் நிறைய உள்ளன. உங்கள் மகன், மகள் திருமணத்திற்கு
**தொடர்புகொள்ளவும்.ஆலோசகர்:D.சுந்தர்சிங் நாடார்B.A அரசு இணைச் செயலாளர் (ஓய்வு) செல்:9840093000, 9445093000 9698793000, 8248707424**
E.mail:sundarsinghnmb@gmail.com / website: www.svsnadarmatrimony.com

**விலைகுறைவு!** **R.Suresh Ph: 2226 6961, 22266962** **மனநிறைவு!**

# AMUTHA & CO



**Sony, L.G, TCL, SamSung, Onida,Sun sui, Akai, Philips, Panasonic, IFB, WhirlPool, Godrej, Kenstar,Kelvinator,Hitachi, Carrier, Voltas, Videocon, Electrolux, Tatasky, Big Tv, Aritel, Sun Direct, ULTRA, Sowbaghya, Amirtha, Akshaya, Lakshmi, Preethi, ButterFly, Usha, Khaitan, Crompton, Orient, Almonard, Havells**

**1, Venkatesan Street, Shanmugam Road, Tambaram West, Chennai-45.**



# விருதுநகர் இந்து நாடார் வியாபாரிகள் சங்கம்
# திருமண தகவல் மையம்

**இந்து நாடார்களுக்கு மட்டும்.**(மணமகன்/மணமகள்) செயல்படும் திருமண தகவல் மையம் பதிவு கட்டணம் 200 மட்டும். வேறு எந்தவித கட்டணமும் கிடையாது. மணமகன்/மணமகள் தேவைப்படுவோர் பதிவு செய்து பயன்பெறும்படி கேட்டுக்கொள்கிறேன். (வசதி குறைவானவர்களுக்கு பதிவுகட்டணம் கிடையாது).

**மா.பட்டாணி நாடார் நினைவு டிரஸ்ட்,** 156,மெயின்பஜார், விருதுநகர், செல்:9486555373, 8610212126.

# வெற்றிப்படிக்கட்டு



வசந்த் & கோ H.வசந்தகுமார்M.A., Ex.MP (Member of Parliament)

**நம்பிக்கையே நாணயம்!**

வெற்றிக்குரிய வழிமுறைகளில் பிரதானமானது நம்பிக்கைதான். திட்டங்களைச் செயல்படுத்தும் சில விஷயங்களை நம்பிக்கையின் அடிப்படையில் தான் செயல்படுத்த முடியும். பொறியாளர் திட்டமிட்டாலும், அவரது நம்பிக்கை கொத்தனார் மீதும், சித்தாள் மீதும் மற்றுமுள்ள துறைசார்ந்த தொழிலாளர்கள் மீதும் அவசியம் இருக்க வேண்டும். நம்பிக்கை இல்லாத திட்டமிடல் காரியச் சாதனை அடைவது கடினம். புரிந்து செயல்படுபவன் புத்திசாலி, எதையும் சிறப்பாகவும், முழுமையாகவும் நீங்கள் செய்ய வேண்டுமானால் அதற்கு ஒரு வழி இருக்கிறது. கற்பனையில் அதைப் பயிற்சி செய்து பார்க்க வேண்டும்.

தொழில் நிபுணர்கள் இதைத்தான் செய்கிறார்கள். ஒரு துறையில் நிபுணத்துவம் பெற இது ஒரு சிறந்த வழி. மகாபாரதத்தில் பஞ்ச பாண்டவர்கள், கௌரவர்கள் நானா? நீயா? என்பதை நிர்ணயிக்க குருச்சேத்திரத்தில் யுத்தத்தில் ஈடுபட்டிருந்த நேரம். ஒரு நாள் நள்ளிரவு துரியோதனன் பீஷ்மாச்சாரி தங்கி இருந்த கூடாரத்திற்குள் நுழைகிறான்.

பீஷ்மருக்கோ துரியோதனன் வருகை புதிராக இருந்தது. மெல்லிய அகல் விளக்கு வெளிச்சத்தில் பீஷ்மர் துரியோதனனை வரவேற்கிறார். குழம்பிய முகத்துடன் துரியோதனன் அமைதியாகப் பீஷ்மரையே பார்த்தபடி நிற்கிறான். பீஷ்மர் துரியோதனனின் மனக்குழப்பத்திற்குக் காரணம் கேட்க? துரியோதனன் கவலையுடன் "பீஷ்மப் பிதாமகரே யுத்தத்தில் ஒரே கணத்தில் எதிரிகள் அனைவரையும் கொன்றழிக்க உங்களால் முடியும். அவ்வளவு பலம் பெற்ற நீங்கள் எங்கள் அணியில் இருப்பதுதான் ஆயிரம் யானை பலம். ஆனால்" என்று தயக்கத்துடன் பேச்சை நிறுத்தினான். பீஷ்மரும் ஆர்வமுடன்.

"என்ன ஆனால், மேலே சொல்லு" என்றார். "நீங்கள் எங்கள் அணியில்தான் இருக்கிறீர்களா என்று சந்தேகம் வந்து விட்டது. ஒவ்வொரு நாளும் போர் வளர்கிறது. ஆனால் பஞ்ச பாண்டவர்களில் ஒருவரைக்கூட இதுவரை நீங்கள் கொல்லவில்லை. ஒருவேளை அன்பு உங்கள் அம்பைத் தடுக்கிறதா? பாண்டவர் மீது கொண்ட பாசம் உங்கள் அன்பைப்பாதி வழியிலேயே தடுத்து விடுகிறதா? மேலும் நீங்கள் தெய்வமாகப் போற்றும் கண்ணன் அவர்கள் அணியில் இருப்பதால் மயங்குகிறீர்களா? அதுதான் சந்தேகம் என்று சொல்ல முகம்சிவந்த பீஷ்மர் கோபமாக "துரியோதனா... தர்மநெறி தவறாத என்னை சந்தேகப்படுகிறாயா? சிம்மாசனத்தில் யார் அமர்ந்தாலும் என்னைப் பொறுத்தவரை ஆளைப் பார்க்காமல் சிம்மாசனத்தை மட்டும் பார்ப்பவன் நான். சிம்மாசனத்திற்குச் சேவை செய்வது என்று முடிவு கட்டிவிட்டால். அதை மீற மாட்டேன். நான் என்ன செய்தால் உன் சந்தேகம் தீரும்" என்று கோபமாகவும் உறுதியாய்க் கேட்டார்.

"பாண்டவர்களில் ஒருவரையாவது நாளை நீங்கள் கொன்றால் உங்களைப் பற்றிய என் சந்தேகம் தீர்ந்து விடும்" என்று துரியோதனன் சொல்ல. "அவ்வளவுதானே என் அம்பறாத்தூளியிலிருந்து ஐந்து அம்புகளை எடுத்து என் முன்னால் வை" என்றார். துரியோதனன் திகைப்போடு அவர் கட்டளைக்குப் பணிந்து ஐந்து மூங்கிலினால் செய்யப்பட்ட அம்புகளை அவர் முன் எடுத்து வைத்தான். என்ன நடக்கிறது என்று பார் இடையில் குறுக்கிடாதே!" என்று சொல்லிவிட்டு பீஷ்மர் இருகரம் கூப்பி இறைவனைப் பிராத்தித்தார். பிறகு அந்த ஐந்து அம்புகளையும் தனது தீட்சண்யமான விழிகளால் உற்றுப் பார்த்தார். துரியோதனன் பிரமிப்புடன் அந்தக் காட்சியைப் பார்த்தான். பீஷ்மரின் கண்களிலிருந்து ஜொலிக்கும் ஒளிக்கற்றை புறப்பட்டு அந்த அம்புகள் மீது சிறிது நேரம் பாய்ந்தது. ஒளி பாய்வது அடங்கிய பின் பீஷ்மர் துரியோதனனிடம் அந்த அம்புகளை எடுத்துப் பார்க்கச் சொன்னார். துரியோதனன் அந்த அம்புகளை ஆவலுடன் எடுத்துப் பார்த்தான். மூங்கில் அம்புகள் தங்க அம்புகளாக உருமாறி இருந்தன. அவனது பிரமிப்பைப் பார்த்த பீஷ்மர். "துரியோதனா இதுவரை நான் மனம், வாக்கு, உடல் ஆகியவற்றால் பல ஆண்டுகள் அனுசரித்த பிரமச்சரிய விரதத்தின் ஒப்பற்ற சக்தியை முழுவதையும் இந்த அம்புகளுக்கு மாற்றிவிட்டேன். அதனால்தான் இவை தங்கமயமாக மாறிவிட்டன.

இந்த அம்புகளைப் பிரயோகித்தால் நடக்காதது எதுவும் இல்லை. நாளை பாண்டவர் ஐவரையும் இந்த அம்புகள் வதம் செய்யும். சந்தேகம் தீர்ந்ததல்லவா போய்வா" என்று சொல்ல துரியோதனன் தயங்கிய படி "பிதாமகரே நாளை சூரியோதயத்திற்குப் பிறகு தானே யுத்தம் மறுபடி ஆரம்பிக்கும். அதுவரை இந்த ஐந்து தங்க அம்புகளும் என் பாதுகாப்பில் இருக்கட்டுமே. நாளைக் காலை உங்களிடம் தந்து விடுகிறேன்" என்று துரியோதனன் சொல்ல. பீஷ்மர் அவனை உற்றுப் பார்த்தார். அதே சமயம் இவர்களை மற்றொரு ஜோடிக் கண்களும் பார்த்துக் கொண்டிருந்தது. பீஷ்மர் சிரித்தபடி "நீ உன்னையே நம்பாதவன். என்னை மட்டும் நம்புவாயா? இன்று இரவே இதைப் பாண்டவர்களிடம் கொடுத்துவிடுவேன் என்று நினைக்கிறாயா? கவலைப்படாதே நான் உன்னை நம்புகிறேன் எடுத்துச்செல்" என்று கூறினார்.

துரியோதனன் வேகமாக அம்புகளை எடுத்துக் கொண்டான். மகிழ்ச்சி பொங்கக் கூடாரத்தை விட்டு வெளியேறினான். அவன் செல்வதையே பார்த்துக் கொண்டிருந்தார் கூடாரத்திற்கு வெளியே நின்ற கண்ணன். வேகமாகப் பாண்டவர் பாசறையை நோக்கிச் சென்ற கண்ணன் அர்ஜுனனிடம் நடந்த விவரத்தைக் கூறினான். அர்ஜுனன் திகைத்து நின்றான். பாஞ்சாலி மட்டும் "கண்ணா நீ எங்களுக்குத் துணையிருக்கும் வரை பஞ்ச பாண்டவரின் கதை முடியாது" என்று நம்பிக்கையுடன் கைகூப்பிச் சொன்னாள்.

உடனே கண்ணன், அர்ஜுனனிடம் "அர்ஜுனா முன்னொரு காலத்தில் நீங்கள் வனவாசம் இருந்த சமயம் துரியோதனன் உங்களைச் சீண்டுவதற்காகக் காட்டிற்குள் வந்து கந்தர்வர்களிடம் சிக்கி உயிர் போகும் அளவு சங்கடத்தில் இருந்த போது நீ அவனைக் காப்பாற்றினாய் அப்போது அவனது உயிரைக் காப்பாற்றியதற்காக வெகுமதியாக உனக்கு ஏதேனும் வேண்டுமா? என்று கேட்ட அந்தச் சந்தர்ப்பத்தில் நீ என்ன சொன்னாய் என்று ஞாபகம் இருக்கிறதா?" எனக் கேட்க அர்ஜுனன் முகமலர்ச்சியுடன் "இருக்கிறது கிருஷ்ணா இப்பொழுது எதுவும் வேண்டாம் தேவைப்படும் போது கேட்டுப் பெற்றுக் கொள்கிறேன் என்றேன். அதற்கு துரியோதனனும் உடன்பட்டான்" என்று சொல்ல. "அர்ஜுனா நள்ளிரவு என்று பாராதே உடனே துரியோதனன் பாசறைக்குச் சென்று, அந்த ஐந்து அம்புகள் எனக்குத் தேவை என்று அந்தச் சம்பவத்தை ஞாபகப்படுத்திக் கேள்" என்று கூற அர்ஜுனன் துரியோதனன் பாசறைக்கு விரைந்தான்.

இரவு நேரத்தில் தன்னைத் தேடிவந்த எதிரி அர்ஜுனனை வியப்போடு பார்த்தான் துரியோதனன் முன்னொரு காலத்தில் கந்தவர்களிடமிருந்து உயிரைக் காப்பாற்றியதற்கு வெகுமதியாக அந்த ஐந்து தங்க அம்புகளைக் கேட்டான். துரியோதனன் கெட்டவனாக இருந்தாலும் சத்திரியனாயிற்றே சொன்ன சொல் மீற முடியாமல் வேறு வழியின்றி அம்புகளை அர்ஜுனனிடம் கொடுத்தான். "இந்தத் தங்க அம்புகள் என்னிடம் இருப்பது உனக்கெப்படித் தெரியும்" என்று கேட்டான்? அர்ஜுனன் சிரித்தபடி, "கண்ணன் மீது நாங்கள் வைத்திருக்கும் நம்பிக்கைதான் காரணம்" என்று சொன்னான்.

துரியோதனன் வேகமாக பீஷ்மரிடம் வந்து நடந்தவற்றை கூற பீஷ்மர் விரக்தியுடன் சிரித்தார். "கண்ணன் மீது அவர்களுக்கு இருக்கும் நம்பிக்கை என் மீது உனக்கில்லாமல் போய்விட்டது என்னிடம் இதற்கு மேல் சக்தி கிடையாது. இருந்த அனைத்து பிரம்மச்சர்ய சக்தியை ஒன்று திரட்டி அந்த அம்புகளில் செலுத்தி விட்டேன். இருந்தாலும் வெற்றி எனக்குத்தான்.

உன் அணி வென்றால், நான் உன் அணியில் இருப்பதால் எனக்கு வெற்றி. ஒரு வேளை தங்க அம்புகளைப் பயன்படுத்தி எதிர் அணியினர் வெற்றி பெற்றால், அந்த அம்புகளுக்குள் இருக்கும் என் சக்திக்குத்தான் வெற்றி. எனவே எந்த அணி வென்றாலும் வெற்றி எனக்குத்தான்" என்று பீஷ்மர் நம்பிக்கையுடன் சொன்னார்.




# உன் சிந்தனை உனது வெற்றி

**விழுந்தாலும் முன்னோக்கி விழு**

- முனைவர் சா.தா.நோவா **செல்:9443303456,**



சாக்ரடீஸ் அந்த இளைஞனை நோக்கிக் கேட்டார். நீ நீரில் தத்தளித்த போது தவித்துக் கொண்டிருந்தேன்' என்று பதில் கூறினான்.

இதுதான் வெற்றியின் இரகசியம்! மூச்சுவிட உனக்கு காற்று எப்படி தேவையாய் இருந்ததோ, நீ அந்த காற்றைப் பெற எப்படி போராடினாயோ, அப்படியே வெற்றியையும் பெற வேண்டும், என்றும் ஆர்வத்துடன் இறுதிவரை போராட வேண்டும் என்றார் சாக்ரடீஸ்.

மனிதர்கள் சிலர் அவர்கள் தேர்ந்து எடுத்துக் கொண்ட துறையில் சிறப்படைந்தவர்களாக இருக்கலாம். ஆனால் அவர்கள் அத்துறை சார்ந்த பணிக்கே தம்மை அர்ப்பணித்துக் கொண்டு, வாழ்க்கையில் கிடைக்க வேண்டிய வேறு சிலவற்றைத் துறக்க - தியாகம் செய்ய தயாராக இருக்க மாட்டார்கள்.

இவர்கள் நிலை அரை கொதிநிலை நீர் போன்றதாகும். வேறு சிலர், தம் குறிக்கோளே முக்கியம் என்று கருதி அதில் முற்றிலும் ஈடுபாடு காட்டுவார்கள்.

அமெரிக்காவை முதன்முதலில் கண்டுபிடித்த கொலம்பஸ் பற்றிக் கூறும்போது, இத்தகைய இலட்சியவாதிகளின் நினைவே வரும்.

அவரும் அவருடைய மாலுமிகளும், திக்குத் தெரியாத கடலில் பயணம் செய்த போதும், கரை தென்படவில்லை.

நாட்கள் செல்லச் செல்ல அவரது மாலுமிகள், கலகம் செய்யத் திட்டமிட்ட போதும் கொலம்பஸ் தம் இலட்சியத்தை கைவிட விரும்பவில்லை. கொலம்பஸின் அணையா ஆர்வமும், விடாமுயற்சியும், கொதிநிலை மனப்பான்மையும் அவருக்கு இறுதி வெற்றியை தேடித் தந்தன. அவரது தன்னம்பிக்கையானது 'அமெரிக்கா' எனும் கண்டத்தைக் கண்டு பிடித்ததற்கான இலக்காய் மாறியது அல்லவா!

கிளிப்டன் என்ற அமெரிக்க இலக்கிய மேதை தம்முடைய இலக்கியப் பணியை நாள்தோறும் காலை ஆறுமணிக்கே தொடங்கும் பழக்கம் உள்ளவர். ஆயினும் 'ரோம சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சி' என்ற நூலை எழுத அவர் ஒன்பது ஆண்டுகள் எடுத்துக் கொண்டார்.

கண்பார்வை இழந்த நிலையிலும், இங்கிலாந்து கவிஞர் ஜான்மில்டன் தம்முடைய அமர காவியமான 'இழந்த சொர்க்கம்' என்னும் நூலை எழுதி முடித்தாரே!

நம்முடைய முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேரு, தன் நூல்களை எழுதியது, விடுதலை இயக்கத்தின்போது சிறையில் அடைக்கப்பட்ட சமயத்தில்தானே!

"இவர்களின் பெருமைக்கு என்ன காரணம்? தாங்கள் மேற்கொண்ட இலட்சியத்தை அடைய வேண்டும் என்பது மட்டும் அல்லாமல் அனைத்து இடையூறுகளையும் கடந்து, உலகுக்கு நன்மை செய்ய வேண்டும் என்கின்ற நல்லெண்ணம் தானே!'

ஓர் உயர்ந்த குறிக்கோளை அமைத்துக்கொண்டு, அந்த இலட்சியத்தை அடைய வேண்டும் என்ற ஆர்வமும், ஆற்றலும் இருந்தால், வாழ்வில் எல்லா வளங்களும் பெற்று சுபிட்சமாக மகிழ்ச்சியுடன் வாழ்ந்து காட்ட முடியும் எடுத்துக்கொண்ட இலட்சியத்தில் அவர்கள் காட்டுகின்ற ஈடுபாடு அவர்களை உயர்ந்த நிலைக்கு கட்டாயம் கொண்டு செல்லும்.

மனிதனை முன்னேற்றுவதும், அவனைப் பின்னுக்குத் தள்ளுவதும் அவனுடைய எண்ணங்கள் தான். இதைத்தான் நமது முன்னோர்கள் 'மனம் போல் வாழ்வு' என்றார்கள்.

நமது மனதில் தோன்றும் எண்ணங்களே நமது எதிர்காலத்தை தீர்மானிக்கிறது. ஆகவே மனதில் எப்போதும் தூய எண்ணங்களுக்கு மட்டுமே வாய்ப்புக் கொடுக்க வேண்டும். சமயங்களில் பல்வேறு தீய எண்ணங்கள் நமது மனதில் பல காரணங்களால் தோன்றுவது இயற்கையே.

அவ்வாறு தீய எண்ணங்கள் தோன்றும் போது, நாம்தான் விழிப்போடு செயல்பட்டு, அத்தகைய தீய எண்ணங்களை செயலாக்காமல் ஆரம்பத்திலேயே அடக்கி விட வேண்டும்.

எது தீய எண்ணம்? எது நல்ல எண்ணம்? என்றால், நான்கு நல்ல மனிதர்களிடம் பகிர்ந்து கொள்ள முடியாத எண்ணங்களே தீய எண்ணங்களும்,

மகாகவி பாரதி கூட இதைத்தான் 'நல்ல எண்ணம்' வேண்டும் என்றார். எனவே நல்ல எண்ணங்களை மனதில் நிரப்பி அவற்றை செயல் வடிவாக்கி வாழ்க்கையில் வெற்றி காண முயல வேண்டும்.

முடியாது என்பது மூடத்தனம். முடியும் என்பதே மூலதனம். முயற்சி செய்யுங்கள். இலக்கை அடைவீர்கள். (தொடரும்)

# வா....வியாபாரி ஆகலாம்

அமுதா B.பாலகிருஷ்ணன்

6.பளிச்சென்று தெரிவது எப்படி?...

"பளிச்"சென்று தெரிவது என்றால், முகம் நிறைய பவுடரைப் போட்டுக்கொண்டு, அல்லது "ஜிலு ஜிலுவென சட்டையைப் போட்டுக் கொண்டு, "டிப்-டாப்"பாக, மிடுக்காக நிக்கணும்னு அர்த்தம் அல்ல.



நமது செயல்பாட்டில், நமது திறமைகளில், வாடிக்கையாளர்களைக் கவர்வதில், சக ஊழியர்களிடம் நடந்து கொள்ளும் விதங்களில், முதலாளிக்கு ஏற்ற தொழிலாளியாக நம்மை ஆக்கிக் கொள்வதில்.... இப்படி எந்த ஒரு விஷயமானாலும் நாம் தனித்து தெரியவேண்டும்.

நமது தனித்தன்மையை வெளிப்படுத்திக்கொண்டேயிருக்க வேண்டும்.

"பத்தோட பதினொன்று, அத்தோட இது ஒண்ணு"ன்னு நம்மைப் பார்த்து யாரும் சொல்கிற அளவில் நாம் இருக்கக் கூடாது.

"அடேயப்பா...அவனா...அவனை மாதிரி வேலை செய்யிறதுக்கு யாரால முடியும்..! பய கில்லாடி! நமக்கு அந்த மாதிரி ரெண்டு ஆள் கிடைச்சா நான் இன்னும் இரண்டு பிராஞ்ச் ஆரம்பிச்சிடுவேன்".- அப்படின்னு அக்கம் பக்கத்து நிறுவனங்கள் பொறாமைப்படுகிற அளவுக்கு நமது செயல்பாடுகள் இருக்க வேண்டும்.

ஒருவனைப் பார்த்து இன்னொருவன் பொறாமைப்படுகிறான் என்றாலே இவனிடம் ஏதோ ஒன்று அவனை விட சிறப்பாக இருக்கிறதென்றுதானே அர்த்தம்.

எனவே, நமது வேகமும், செயல்பாடும், நல்ல பெயரும் மற்றவர்கள் பொறாமைப்படும் அளவிற்கு அமைய வேண்டும்.

சுற்றியுள்ள பலபேர் மத்தியில் "பளிச்" சென்று தெரிய வேண்டும்.

இப்படி பளிச்சென்று தெரியும்போது... நம்மோடு வேலை செய்யும் சக ஊழியர்கள், அதாவது நமது அவளவுக்கு செயல்படாதவர்கள், அல்லது செய்ய மனம் இல்லாதவர்கள் (செய்ய இயலாதவர்களை விட்டு விடலாம்) நம்மீது நிச்சயம் பொறாமை படத்தான் செய்வார்கள்.

அதற்காக நாம நமது வேகத்தைக் குறைத்து, செயல்பாட்டினையும் சிறிதாக்கி அவர்கள் லெவலுக்கு நம்மை நாமே சுருக்கிக் கொள்வதா....?

கூடாது.......!

"வாழ்ந்தாலும் ஏசும், தாழ்ந்தாலும் ஏசும், வையகம் இதுதானாடா"- என்கிறார் கவிஞர்.

தாழ்ந்து -ஏச்சும்பேச்சும் வாங்குவதைவிட வாழ்ந்து விமர்சனங்களை வாங்கிக் கொள்வது நல்லது.

சுப்பு ஆறுமுகம் ஒரு கச்சேரியில் கேள்வி பதிலாக ஒன்றைச் சொன்னார்.

"இந்தியாவின் தேசிய பறவை எது?"

"மயில்"

"இந்தியாவின் தேசிய மிருகம் எது? புலி,

இந்தியாவின் தேசிய மரம் எது? - ஆலமரம்,

இந்தியாவின் தேசிய மலர் எது?- தாமரை,

இந்தியாவின் தேசிய குணம் எது?" - பொறாமை"

எனவே, பொறாமை என்பது எங்கும் நீக்கமற நிறைந்திருப்பது.

அதனால் அதற்குப் பயந்து நமது வேகத்தையும் உழைப்பையும் குறைந்துக் கொள்ளக் கூடாது.

"பிச்சைக்காரன் தன்னைவிட வசதியான பிச்சைக்காரனைப் பார்த்துத்தான் பொறாமைப்படுவான்" - என்பது பழமொழி.

அடுத்தவன் பொறாமைப்படுகிறான் என்றாலே நாம் "பளிச்" செனத் தெரிகிறோம் என்றுதான் அர்த்தம்.

அதுதான் நமக்கு வேண்டும்.

இயலாதவர்களும், மனம் இல்லாதவர்களும்தான் நம்மைப்பார்த்து பொறாமைப்படுவார்கள்.

நமது நலம் விரும்பிகள் நம்மைப் பார்த்து பெருமைப்படுவார்கள்.

நமது முதலாளி மனசுக்குள்ளே சந்தோஷப்படுவார்.

முதலாளி சந்தோஷப்படுகிறார் என்றாலே நமக்கும் அது மகிழ்ச்சிதானே!

அந்த மகிழ்ச்சி தொடர்து நீடிக்கும்படி, நாம் நடந்து கொள்ள வேண்டும்.

ஒரு பொருளை எடுத்துக் கொடுப்பதில், ஒரு பொருளை எடுத்து முறைப்படுத்தி அழகாக அடுக்கி வைப்பதில்... ஒவ்வொரு சின்னச் சின்ன விஷயங்களிலும் கூட நாம் நமது தனித்தன்மையை வெளிப்படுத்திக் கொண்டேயிருக்கவேண்டும்.

அதில் தொய்வே இருக்கக் கூடாது.

நமது உழைப்பில், முயற்சியில், உற்சாகத்தில்... தொய்வு ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

"நாமதான் தினமும் நல்லா வேலை செய்கிறோமே இன்னைக்கு ஒருநாள் மட்டும் மத்தவங்களைப் போல சும்மா "ஏனோ தானோ" ன்னு இருப்போமே" என்று ஒரு நாள்கூட இருந்துவிடக் கூடாது.

அப்படி இருந்தால்...

"என்ன... அவனுக்கு என்னாச்சு... ஆள் "டல்"லா இருக்கானே...என்ன நடந்திச்சி"-ன்னு முதலாளி குழம்ப ஆரம்பிச்சிடுவார்.

90மார்க் எடுக்கும் மாணவன் 85மார்க் எடுத்தாலே வாத்தியார், "ஏன்.... ஏன்...-னு பதட்டம் அடைந்து என்ன காரணம் னு அவனை கேள்வி மேல் கேள்வி கேட்டு அதுலேயே "டென்ஷன்" ஆயிடுவார்.

அதுபோல நம்ம முதலாளி நம்மைப் பற்றிய சிந்தனையில் "டென்ஷன்" ஆவதற்கு நாம் காரணமாகயிருக்கலாமா...?

கூடாது!



சைதை நாடார் சங்கம் சார்பில் வி.பி.ஆர்.பாஸ்கரன் தலைமையில் கல்வித் தந்தை அன்னைவேளாங்கண்ணி அதிபர் திரு.ச.தேவராஜ் அவர்களை சந்தித்து பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்தார்கள்.



ரக்ஷாபந்தன் விழா அன்று விஜி.சந்தோசம் அவர்களை பிம்மகுமார சகோதரிகள் சந்தித்து ராக்கி கயிறு அணிவித்தார்கள்.

Owned at Published by K.M.JULIAN from 21, Krishnappa Naickan Street, Mettupalayam, Chennai-33 and Printed by K.M.JULIAN at "NEW MERIT PRINTERS" No: 14/51, Reddykuppam Road, Saidapet, Chennai-15. Editor K.M.JULIAN.

# எட்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி

## ஆறுமுகநேரி கானியாளர் தெரு

## ஆ.பழ.இராமலிங்க நாடார்

தோற்றம்
14.04.1925

மறைவு
24.09.2015



மகன்கள், மகள்கள், மருமகன், மருமகள், பேரன், பேத்திகள்

**REVATHI HARDWARES**

நெ.38/24 பூந்தமல்லி ரோடு, ஈக்காட்டுதாங்கல்,
சென்னை- 600 032 செல் 9840042948, 044- 22252948

Regd.No.TN/CC(S) DN/112/2021-2023
Registered Newspaper RNI 55354/1992
Posted at Egmore RMS-1, Partrika Channal Posted on 7.9.2023
PUBLISHED ON FIRST OF EVERY MONTH WPP Licence No.TN/PMG(CCR)/WPP 315/21-23
If underlivered please return to INDIAN NADARMURASU
21,Krishnappa Naiyakan Street,
Mettupalayam, Chennai-600 033.

